Pavazha Vizha of Thiruppugazh Guruji

Sri A.S. RAGHAVAN

15-9-2003

Garland of Tributes

PAVAZHA VIZHA OF THIRUPPUGAZH GURUJI

Shri A.S. RAGHAVAN

15-9-2003

உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே

The Celebration Committee of
Pavazha Vizha of Thiruppugazh Guruji
Shri A.S. Raghavan

have great pleasure in inviting you
to the celebration
spread over the whole day
on **Monday, the 15th September, 2003,**
at **Sringeri Pravachana Mandapam,**
Raja Annamalaipuram,
Chennai - 600 028.

The Celebration Committee
shall be very happy indeed
if you could kindly make it convenient
to participate in the felicitation function
as well as other programmes
scheduled for the entire day.

We look forward to your
auspicious presence.

PROGRAMME FOR PAVAZHA VIZHA

Monday, 15th September 2003

6.00 a.m to 8.30 a.m.	SRI MAHAGANAPATHI HOMAM Aayush Homam Mrithyunjaya Homam Navagraha Homam
9.00 a.m to 12.00 noon	Obeisance and Felicitations by disciples of Guruji at Chennai and other regions & Well-wishers
4.00 p.m to 7.00 p.m.	Guruvandanam
7.00 p.m.	Benediction by Guruji

Subham

சித்ரக வித்துவ சத்தமி குத்த
திருப்புக ழைச்சிறி தடியேனுஞ்
செப்பென வைத்துல கிற்பர வத்
தெரிசித்தவ நுக்ரக மறவேனே

Sri Maruthy ©: 044-28524256



Deities decorated on the dais

Prasadam from Jagadguru Sri Sankaracharya Mahasamsthanam,
Sri Sharada Peetam, Sringeri

A section of participating disciples



Conferring of title - 'THIRUPPUGAZH GANA RATHNAM'
by Kanchi Kamakoti Peetadhipathi
Jagadguru Sri Sankaracharya Swamigal, Kancheepuram



President Sri S.K. Ramanathan's speech



Presentation of Poem of Tributes by Chennai Disciples

Sri Maruthy ✆ : 044-28524256

Garland of Tributes

Published by

PAVAZHA VIZHA OF THIRUPPUGAZH GURUJI
Sri A.S. RAGHAVAN CELEBRATION COMMITTEE
CHENNAI

குஞ்சர மாமுக விக்கிநப்ரபு, அங்குச பாச கரப்ரசித்தன் ஓர் கொம்பன், மகோதரன் முக்கண் விக்ரம கணராஜன், கும்பிடுவார் வினை பற்றறுப்பவன், எங்கள் விநாயகன், நக்கர் பெற்றருள் குன்றைய ரூபக கற்பகப்பிள்ளை.

எழுதரிய அறுமுகமு மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சனமந்தசெஞ் சுட்டிக் கலன்களுந் துங்கநீள்பன்
னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும்
ரத்நக் குதம்பையும் பத்மக் கரங்களுஞ் செம்பொனூலும்
மொழிபுகழு முடைமணியு மரைவடமு மடியிணைய
முத்தச் சதங்கையுஞ் சித்ரச் சிகண்டியுஞ் செங்கை வேலும்
முழுதுமழ கியகுமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன்பெறுஞ் சற்புத்ர வும்பர்தந் தம்பிரானே.

FOREWORD

The overwhelming enthusiasm and devotion displayed by the disciples, admirers and public at large in Chennai and elsewhere, by completing through Isai Vazhipadu, the mass singing of the entire 475 Thiruppugazh songs tuned by Guruji Shri A.S Raghavan, reached its crescendo on 15-9-2003 the day which was celebrated as Pavazha Vizha of Guruji. The one-day function arranged by a committee constituted specially for the purpose was unique. During the entire day for more than 14 to 15 hours from early morning 5.30 A.M to 9.00 P.M in the night Guruji was in the midst of his disciples and admirers. His easy and total accessibility to all the participants during the function - celebrated in three sessions, as per program attached served to heighten the enthusiasm of all the participants.

Guruji Shri Raghavan along with Smt. Jankai Raghavan were received with Poorna Kumbham along with Nadaswaram at the entrance to the venue of the celebration Viz. Sringeri Pravachana Mandapam at Raja Annamalaipuram. To the chanting of Veda Gosham, the couple were led straight to the dais at the east-end of the Mandapam where Panchaloha idols of Vinayaka, Muruga along with His consorts and a life-size picture of Chendil Andavan in all their decorated splendor were seated to shower their divine grace on the distinguished couple and their family. After obeisance, the first session of the celebration, comprising the religious function constituting Ganapathy Homam, Aayush Homam, Mritunjaya Homam and Navagraha Homam in which Guruji and his family participated was witnessed by numerous disciples and admirers.

The second session of the celebraion started with Guruji along with his spouse seated in a specially decorated dais located on the southern side at the middle of the Mantapam giving full view of the deities and

Guruji to the milling crowd of admirers and disciples. There was an unending stream of individuals, representatives of mutts, sister institutions and men from the music field, media and other walks of life, to pay their tributes on this unique occasion. The celebration committee considered that a compilation in print, of the verbatim speeches of those who participated in the function would not only help to keep a record of the proceedings for posterity but also those who had not personally attended the function to realize in some measure the magnitude of the achievement of Guruji in spreading saint Arunagirinathar's Thiruppugazh and other works to the public, both within the country and outside. It is in this context that a special mention should be made of the sustained appreciation and encouragement given to the Thiruppugazh movement launched by Guruji by the two revered Mutts-Sringeri and Kanchi. Through their representatives they honoured Guruji on this occasion and the Kanchi Acharya in particular conferred the title of **Thiruppugazh Gana Rathnam** and presented a Swarna Kankanam and Spatika Manimala with Gold Kavacham.

The third session in the evening witnessed an emotional recital of Isai Vazhipadu by way of Guru Vandanam conducted by Guruji's disciples, hailing from various parts of the country. The overflowing audience in the Mandapam joined *enmass* in singing Thiruppugazh songs with total devotion as per the Paddhathi established by Guruji and made it one of the most memorable ways of offering obeisance. This atmosphere of serenity and bliss was well rewarded with more than half an hour Grace by virtue of Guruji's Anugraha Bhashanam. May Chendil Andavan continue to shower His blessings on Guruji and his family to sustain the evergrowing Thiruppugazh Thondu. Vetri Vel Muruganukku. Arohara !

Celebration Committee

ஓம் முருகா

குருஜி பவழவிழா குருவந்தனம்

15-9-2003 - திங்கட்கிழமை

நிகழ்ச்சி நிரல்

வ. எண்	பாடல்	பாட்டு எண்
	விநாயகர் துதி	
1.	கைத்தல	1
2.	நினது திருவடி	4
	நாமாவளி	
	குருவணக்கம்	
	திருப்பரங்குன்றம்	
3.	கருவடைந்து (ஹி)	7
	திருச்செந்தூர்	
4.	மனத்தின்	37
	தீத்தன் பரவை**	
5.	மூளும் வினை	40
	பழநி	
	வேதாகம சித்ர*	
6.	தகர நறுமலர்	64
7.	சுருதி முடி மோனம்	62
	திருவேரகம்	
8.	நாசர்தங்	92
	பேற்றைத்தவம்*	
9.	ஒருருவாகிய	96
	குன்றுதோறாடல்	
10.	இருமலு ரோக	97
	முடியாப்பிறவி*	
11.	அரகரசிவ	99
12.	கொந்துவார்	109
	சேந்தனை*	
13.	உடுக்கத் துகில்	125
14.	சுருதியாய்	203

வ. எண்	பாடல்	பாட்டு எண்
	ஒளியில் விளைந்த*	
15.	தாரணிக்கதி	183
	மாலோன் மருகனை*	
16.	ஐந்து பூதமும்	166
	போக்கும் வரவும்*	
17.	பக்தர் கண	152
18.	இகல வருதிரை	215
19.	அடலரி மகவு	438
	மைவரும் கண்டத்தர்*	
20.	அமல வாயு	450
	சொன்ன க்ரவுஞ்சகிரி*	
21.	அகர முதலென	269
22.	ஆனாத ஞான	278
23.	நித்த முற்று	324
	பஞ்சபூத ஸ்தலங்கள்	
24.	கறையிலங்	360
25.	நாடித் தேடி	374
26.	வலிவாத	392
	பத்தித் திருமுகம்*	
27.	பங்கையனார்	396
28.	சுடரனைய	408
29.	நிருதரார்க்கொரு	326
	சோலை மலை	
30.	அகரமுமாகி	417
	அநுபூதி	
	திருப்பழநி வகுப்பு	12
	வலாரி / நிராசத	10
	பூஜை	
	மங்களம்	

** கந்தர் அந்தாதி

* கந்தர் அலங்காரம்

CONTENTS

Page No.

A. Messages

1. Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri ... xi
2. His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi Jagadguru Sri Sankaracharya Swamigal Srimatam Samsthanam, Kancheepuram ... xii
3. திருவாளர் திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், அதிபர், காசித்திருமடம் ... xiii
4. தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ... xiv
5. Sri. T.S. Parthasarathy, Musicologist, & Retired Senior Executive from the Indian Railways. ... xv
6. Sri. M.S. Sivaramakrishnan, Member (Rtd) Central Board of Direct Taxes ... xvi

B. Text of Speeches made and poems recited at the function

1. Inaugural Welcome Address by Sri S.K. Ramanathan, President, Pavazha Vizha Celebration Committee ... 1
2. Smt. Sita Ravi, Editor, Kalki ... 10
3. Smt. Lakshmi Ramanan, daugher of Smt. Kalyani Ramaswamy, one of the oldest student ... 12
4. Smt.Uma Balasubramanyan, on behalf of disciples of Delhi Region & her brother Sri J. Swaminathan ... 15
5. Smt. Padma Venkataraman, on behalf of disciples of Chennai Region ... 17
6. Sri. N.S. Mani, Senior disciple of Guruji on behalf of Chennai teachers : Tribute through poem ... 23

7. Sri. K. Muthuswamy, Convenor/Secretary,
Pavazha Vizha Celebration Committee ... 24

8. Pulavar M.K. Ramanan ... 26

9. Sri. N. Subramanian, an old associate of
Guruji on behalf of Hyderabad disciples. ... 28

10. Sri. V. Ganesan, President,
Murugan Thiruvarut Sangam, Triplicane, Chennai ... 31

11. Sri. R. Venkatakrishnan
President, Ramana Kendra Trust. ... 34

12. Sri. S.V. Subramanian
காரியதரிசி, வள்ளிமலை வள்ளல் மன்றம், நங்கை நல்லூர் ... 36

13. Shri A.S. Mani, on behalf of
disciples of Mumbai Region ... 40

14. Neyveli Sri Santhanagopalan, Noted Musician ... 41

15. Sri. K.N. Krishnamurthy, on behalf of disciples
in the Karnataka Region ... 42

16. Smt. Sasivalli, D/o. Late. Chengalvaraya Pillai ... 45

17. Sri. Lakshmi Subramaniam
Author of many books onAanmeekam ... 46

18. Smt. Kausalya, Chennai,
A disciple's tribute in poem ... 49

19. Sri. Hariharan
on behalf of Coimbatore disciples ... 50

20. Sri S.R.S. Aiyar
on behalf of Trivandrum disciples ... 51

21. Sri R.V. Durai, on behalf of disciples - (U.S.A.) ... 53

22. A commemorative poem by Sri Siva Sankaran,
one of the oldest student ... 54

23. Smt. Prema Venkataraman, Chennai.
A disciple's tribute in poem ... 54

24. Sri. Ayyappan on behalf of Kalpakkam disciples ... 56

25. Sri. K. Sekhar
on behalf of Chandigarh disciples ... 57

C. Guruji's Anugraha Bhashanam ... 58

D. Media Response ... 71

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्री शारदापीठम्, श्रृङ्गेरी,

SRI SRI JAGADGURU SHANKARACHARYA MAHASAMSTHANAM
DAKSHINAMNAYA SRI SHARADA PEETHAM, SRINGERI - 577 139

PRIVATE SECRETARY
To His Holiness Sri Jagadguru
Shankaracharya Dakshinamnaya
Sri Sharada Peetham
Sringeri - 577 139 (Karnataka)

Camp : Sringeri

Ref : D7/6565

Date : 10.9.2003

Sri N. SUBRAMANIAN
S-2, MADHURAMS APARTMENTS
19, BALAKRISHNA ROAD
MYLAPORE, CHENNAI - 600 004

ஸ்ரீ சுப்பிரமணியன் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்து, ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் பாதகமலங்களில் தங்கள் நமஸ்காரங்களுடன் ஸமர்ப்பிக்கப் பட்டது.

ஸ்ரீசாரதையின் கிருபையால், டெல்லி திருப்புகழ் ஸ்ரீராகவன் அவர்களின் 75வது ஆண்டுநிறைவையொட்டி நடைபெறவிருக்கும் பவழ விழா சிறப்பாக நடைபெறவேண்டுமெனவும், ஸ்ரீராகவன் அவர்கள் நல்ஆரோக்யத்துடன் க்ஷேமமாக வாழ்ந்துவர வேண்டுமெனவும் ஸ்ரீ ஆச்சார்யாள் ஆசீர்வதித்தருளிய மந்த்ராக்ஷதையும், ஸ்ரீ சாரதா சந்த்ரமௌளீஸ்வரர் ப்ரஸாதமும் இத்துடன் அனுப்புகின்றோம்.

இப்படிக்கு
(ஒப்பம்)

Encl : Prasadams

Phone : (04112) 222115 E-mail : skmkanci@md3.vsnl.net.in
Fax : 224305

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

Srimatam Samsthanam

No. 1, Salai Street, Kancheepuram - 631 502

Date : 09.09.03

ஸ்ரீமடம்
முத்திரை

நமது அனாதியான ஸனாதன தர்மத்திற்கு குறை ஏற்பட்ட சமயம் ஸ்ரீபரமேஸ்வரர் சங்கரர் என்ற நாமத்துடன் காலடியில் அவதரித்து ஷண்மத ஸ்தாபனம் செய்தார். அவைகளுள் ஒன்று முருகன் வழிபாடு. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் ஸ்ரீகந்தபிரான். தமிழ்நாட்டில் ஆறுபடை வீட்டில் ஸ்ரீ முருகன் விளங்குகிறார். அந்த முருகனைப் பற்றி கந்தரநுபூதி, கந்தரலங்காரம், திருமுருகாற்று படை என்று பல நூல்கள் இருந்தாலும் அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்கள் எழுதியுள்ளார். அந்தத் திருப்புகழை பாடுபவர்கள், கேட்பவர்கள் மனதை உருக்கி மனதை ஸ்ரீ முருகனிடம் சென்றடையச் செய்யும். அப்படிப் பாடுபவர்கள் பலர் இருந்தாலும் திருப்புகழ் ராகவன் என்ற பெயரோடு எல்லோராலும் அழைக்கப்படுபவரும் எல்லோருடைய மனதையும் திருப்புகழைப் பாடி மனதை ஸ்ரீ முருகன்பால் வைப்பவரும் ஆன திருப்புகழ் ஸ்ரீ ராகவனுக்கு

''திருப்புகழ் கான ரத்னம்''

என்ற விருதினை அளித்து மேன்மேலும் இத்தொண்டினை தொடர்ந்து செய்ய வேண்டுமாய் ஆசீர்வதிக்கிறோம்.

- நாராயண ஸ்ம்ருதி:

உ
சிவசிவ

கயிலை மாமுனிவர்...
திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்

Ph. : 56655
திருப்பனந்தாள் : 612 504
(தஞ்சை மாவட்டம்)

தேதி 13.9.03

வாழ்த்துரை

திருப்புகழ் குருஜி திரு. ஏ.எஸ். இராகவன் அவர்களின் பவழ விழா 15.9.03 அன்று நிகழ்வதறிந்து மகிழ்ச்சி.

திருப்புகழ் அருணகிரியின் பேசா அனுபூதியார் பேசப்பட்டவை; திருப்புகழ் இசைவழிபாடுகள் ஓராண்டு முழுவதும் நிகழ்த்தப் பெறுவது சிறப்புடையது.

தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமுறும் கற்றறிந்தார் பலருள் இவ்வன்பரின் பவழவிழாவும், அதுதொடர்பான தொடர் நிகழ்ச்சிகளும் சிறப்புற நிகழ்ந்திடச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்
சிவசிவ

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்)
609 001

16.09.2003

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

அருணகிரிநாதர் தேவார திருவாசகத்தைத் தந்தருளிய சமய குரவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தலங்கள்தோறும் யாத்திரை சென்று முருகப் பெருமானை வழிபட்டு அப்பெருமான்மீது அளவற்ற திருப்புகழ்ப் பாடல்களை அருளியவர்.

பல்வேறு சந்த அமைப்புக்களில் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பக்திப்பாடல்களைச் சமய உலகிற்குத்தந்த அருணகிரிநாதரைப் போற்றித் திருப்புகழ் நெறி பரப்பி வரும் திரு. இராகவன் அவர்களின் பவழ விழாவை சென்னை அன்பர்கள் சிறப்புறக் கொண்டாடுவதறிந்து மகிழ்கிறோம்.

விழா சிறப்புற நடைபெறவும் திரு. ஏ.எஸ். இராகவன் அவர்கள் எல்லா நலங்களோடு இனிது வாழ்ந்து பக்தி நெறி பரப்பி வரவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

CELEBRATION COMMITTEE

President	:	Sri S.K. Ramanathan
Convenor / Secretary	:	Sri K. Muthuswamy
Treasurer	:	Sri G.V. Neelakantan
Committee Members	:	Sri N.S. Mani Smt. Bala Ganesan Sri M.B. Kumaraswamy Sri P. Ayyappan Sri K. Lakshminarayanan Sri K. Shekar Sri S.J. Shankar Smt. Neelayadakshi Srinivasamurthy Sri A.V. Arunachalam
Special Invitees	:	Smt. Padma Venkataraman Sri R. Thiagarajan Smt. Alamelu Santhanam Smt. Vimala Rajaram Sri V. Srinivasamurthy Sri R. Krithivasan Sri V.S. Margabandhu Smt. Akila Rajan Smt. Saroja Narayanan

T.S. PARTHASARATHY

38, I Cross Street
West CIT Nagar
Chennai - 600 035

Dt. : 12.09.2003

திருப்புகழ் குருஜி ராகவன் அவர்களுடைய பவழ விழாவை சென்னையில் திருப்புகழ் அன்பர்கள் செப்டம்பர் 15ம் தேதி கொண்டாடுவதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தேன்.

குருஜி அவர்களை நான் 1967ம் ஆண்டு முதல் அறிவேன். 1967ம் ஆண்டில் ஆகஸ்டு 15ம் தேதி நான் டெல்லியில் இருந்தபோது என்னுடைய ரயில்வே வீட்டில் அருணகிரிநாதர் விழா கொண்டாடப்பட்டது. அன்று குருஜி அவர்கள் சுமார் 6 மணி நேரம் மெய் மறந்து திருப்புகழ் பாடியதைக் கேட்டு பரவசமடைந்தேன். பின்னர், பெங்களூர் முதலிய இடங்களில், அவர் நடத்திய திருப்புகழ் விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இன்று வரையில் அவருடைய நட்பையும், அபிமானத்தையும் பெற்று வரும் பாக்கியம் எனக்கு கிடைத்து வருகிறது.

திருப்புகழின் பெருமையை பரப்பிய பல பெரியோர்களை நான் அறிவேன். ஆயினும் திருப்புகழை உலகம் முழுவதும் பரவச் செய்த பெருமை, குருஜி அவர்களுக்கே உரியது. வயதில் நான் மூத்தவன் ஆதலால், இந்த பவழ விழா சந்தர்ப்பத்தில் குருஜி அவர்களுக்கு முருகன் நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், சாந்தியையும் அருளுமாறு வேண்டுகிறேன்.

அன்பன்

T.S. பார்த்தஸாரதி

M.S. SIVARAMKRISHNA
M.A., I.R.S. (Rtd.)
Retired Member
Central Board of Direct Taxes
(Tel. : 24915299)

First Floor
1504/A, 'C' Cross,
Southend
9th Block, Jayanagar
Bangalore - 560 069
(Tel. 6491216)

ANANDI NILAKANTAN
Software Engineer Fellow

H/112/4
18th Cross Street
Besant Nagar
Chennai - 600 090

Date : 13-8-2003

Respected Elders

Myself and my family are beholden to you and all the members of THIRUPPUGAZH ANBARGAL, for sending an invitation, to us, humble devotees to participate in the celebrations, so meticulously planned by you, to befittingly celebrate the oncoming 76th Birthday of Revered Guruji Sri A.S. Raghavan. Except that, Shri Guruji & myself hail from the same place, I consider myself as a humble devotee of this Revered Exponent of Thiruppugazh who has spent a lifetime in spreading the Message of the Darling God & Senthil Andavan, across Bharat and all over the globe. I suffered from acute exacerbation of Bronchial asthma, type I respiratory failure in May-June 2002. If I survived, it is due the Benevolence and grace of God, Acharyas and particularly Guruji Shri A.S. Raghavan. I am deeply beholden for their grace. My frail health does not permit me to engage in activities, as I often suffer from bouts of breathlessness, needing emergent medication. My thoughts are always with you. As a humble devotee, I pray God to bestow on Shri A.S. Raghavan, his wife & all the Members of his family long life, supreme happiness, ever increasing prosperity and a continued stamina to propagate the works of Saint Arunagirinathar to the population of this strife-torn world. As Goethe said, the music of Guruji will continue to cheer the world "Forget not singer, these words of thine which for ages shall resound"

SARVE SANTHU NIRAMAYAH

HUMBLY YOURS / WITH RESPECT.

Yours sincerely
Sd/-

INAUGURAL FELICITATION SPEECH BY

Sri S.K. RAMANATHAN

President, Pavazha Vizha Celebration Committee

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः ।
गुरुस्साक्षात् पर ब्रह्म तस्मै श्री गुरुवे नमः ॥

பேரன்புக்கும், மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய திருப்புகழ் குருஜி அவர்களே, ஸ்ரீமதி ஜானகி ராகவன் அவர்களே, திருப்புகழ் குருஜியின் சிஷ்யர்களே, திருப்புகழ் இசை ரசிகர்களே, சகோதர சகோதரிகளே, இளைஞர்களே, எங்கள் அழைப்புக்கிணங்கி இங்கு வந்திருக்கும் பிரமுகர்களே, எல்லோருக்கும் பவழவிழா குழுவின் சார்பாக வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு 'வருக ! வருக !' என்று அழைக்கிறேன்.

இன்று திருப்புகழ் குருஜி அவர்கள் 75 வயது நிறைந்து, 76 வயதில் காலடி எடுத்து வைக்கிறார்கள். இந்த புனிதமான நாளில் கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து இதர ஆயுஷ், நவகிரஹ, மிருத்யுஞ்சய ஹோமங்களையும் முடித்துக் கொண்டு தம்பதிசமேதராக கொலு இருக்கிறார்கள். கமிட்டியின் சார்பாக அவர்களை 'வருக, வருக' என்று அழைத்து எல்லோருடைய நமஸ்காரத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்து வருஷத்திற்கு முன்னால் 1998 செப்டம்பர் மாதத்தில் திருப்புகழ் குருஜியின் 70 வயது பூர்த்தியான நாளையும், திருப்புகழ் அன்பர்கள் இயக்கத்தின் 40 வருஷம் பூர்த்தியான வளர்ச்சியையும், சென்னை கிளையின் வெள்ளி விழாவையும் கொண்டாடும் வகையில், 50க்கும் மேலான வேத விற்பன்னர்கள் வேத கோஷம் எழுப்ப, திருப்புகழ் இசை பக்திபரவசத்துடன் சங்கீத மழையாகப் பெய்ய, அவ்வப்போது அடியார் வேண்டிய போது வேண்டிய சிற்றுண்டிகள் வழங்கப்பட, 5 நாள் உற்சவத்தில் வெகு விமரிசையாக தன்னை அலங்காரம் பண்ணிக் கொண்டு, மேடையிலிருந்து ஜாஜ்வல்யமாயிருந்த AVM ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் முருகன் எல்லோரையும் அனுக்கிரஹம் பண்ணிக்கொண்டிருந்த கோலாகலமாய் நடந்த விழாவை மறக்க முடியாது. இன்னும் 5 வருஷம் கழித்து, திருப்புகழ் இயக்கத்தின் Golden Jublieeயும், திருப்புகழ் குருஜியின் சதாபிஷேக வைபவமும் சிறப்புடன் நடக்கும் என்பதில் ஐயமில்லை. இன்று நடக்கும் பவழவிழா ஒரு நாள் விழாவாக குரு-சிஷ்ய உறவின் (relationship) வாசனையை, 12 மணி

நேரமும் கூடவே இருந்து அனுபவிக்கும் வகையில் (with 100% accessibility) தங்களுடைய பக்தி கலந்த நமஸ்காரங்களை வேறு diversion இல்லாமல் தெரிவித்துக்கொள்ளவும், ஏற்பாடாகி இருக்கிறது. அவர்களுடைய சந்தோஷத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த விழாவை கொண்டாடுவதற்கு என்னை தலைவர் ஆக்கி ஒரு குழுவை ஏற்படுத்தியவுடன், குருஜி அவர்களுடன் தொலை பேசியில் பேசினேன். பெரிய மேதையினுடைய பவளவிழாவைக் கொண்டாடுவதற்கு எனக்கு வயோதிகன் என்கிற qualification தவிர வேறு ஒன்றும் இல்லை. விழா நன்றாக நடப்பதற்கு குருஜியினுடைய அனுக்கிரஹமும், ஆசீர்வாதமும் தேவை என்றேன். குருஜி அவர்கள் இங்கு இந்த விழாவில் வருவதற்கு சம்மதித்து எல்லாம் நன்றாக நடக்கும் என்று சொன்னார்கள். அதன்பிறகு நான் சென்னையிலிருந்து Himalayas பக்கத்தில் இருக்கும் New Delhi ல் இருக்கும் குருஜியுடன் பேசியதை வேறொரு கோணத்தில் பார்ப்பதற்கு என் மனது தூண்டியது.

பகீரதன் சிவனுடைய சிரசிலிருந்து கங்கை பூதலத்தை நோக்கி விழுவதை பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு சித்திரம், என் சிந்தையில் எப்படி பகீரதன் பல இன்னல்களையும் தாண்டி பூதலத்திற்கு அமிர்த மான கங்கையைக் கொண்டு வந்தாரோ அதே போல, கடினமான தமிழிலும் சந்ததாளத்திலும் தொகுக்கப்பட்ட திருப்புகழ் பாக்களை தேனூர அமிர்தமாக ஊட்டி போதித்த வரலாறு பகீரதப்பிரயத்தினத் திற்கு ஈடானதே. கங்கை நதி கங்கோத்ரியில் உற்பத்தியானது போல், Connaught Placeல் ஒரு ரூமிலும், கரோல் பாக்கில் ஒரு garageலும் கைவிரலால் எண்ணக்கூடிய மாணாக்கர்களோடு ஆரம்பித்து Hardwarல் கங்கை என்ற நாமதேயம் எப்படி சூட்டப்பட்டதோ, அதேபோல் லோடி காலனி, சரோஜினி நகர், ராம கிருஷ்ணாபுரம் இடங்களில் மாணாக்கர்கள் பெருகின பிறகு திருப்புகழ் அன்பர்கள் என்ற நாம தேயத்தோடு, யமுனா என்ற உபநதி சேர்ந்தது போல் Mumbai வழியாக சென்னை வந்து சேர்ந்து, அங்கு Kosi நதி கங்கையை சேர்ந்தது போல பிரவாகமாக பெரிய இயக்கமாக மாறி திருப்புகழ் நதி தமிழ்நாட்டில் பாய்ந்து, சகர புத்திரர்களை கரையேத்தின மாதிரி அருணகிரிநாதர் எந்த நாட்டில் முருகனுடைய கோவில்களில் எல்லாம் அவனைப்பாடி உருகி பக்திரசம் ததும்பிய அமுதை படைத்திருந்தாரோ, அங்கு சென்று பாய்ந்து அருணகிரிநாதரின் பெருமையை திரும்பி நிலைநாட்டியது. தமிழ் நாட்டையும் கடந்து கடலில் கலந்து அந்த அலைகள் மலேசியா, இன்டோனேஷியா, அரபு நாடுகள், London, United States, Canada என்று உலகம் பூராவும் வியாபித்துவிட்டது.

இப்படி ஒரு மகத்தான காரியத்தை சாதித்த திருப்புகழ் குருஜியைப் பற்றி எப்படிப் புகழ்வது? கடினமான தமிழில் இருந்த திருப்புகழ் சாகித்யத்தை மிக லாகவமாக எல்லோருக்கும் புரியும் படியாக பிரித்து தன்னுடைய தமிழ் மொழியில் அவருக்கு இருக்கும் ஆற்றலை புகழ்வதா, அல்லது, சந்த தாளத்தில் அமைக்கப்பட்டிருந்த பாட்டுக்களை ஒவ்வொன்றிற்கும் உகந்த ராகத்தில் மெட்டு போட்டு அதை அற்புதம் என்று சொல்ல வைத்த அவருடைய சங்கீத ஞானத்தை புகழ்வதா, அல்லது பாட்டுக்களை சொல்லித்தரும் திறமையையும் அதைவிட ஒரு பத்ததி ஏற்படுத்தி இசைவழிபாடு மூலமாக ஆயிரக் கணக்கான அன்பர்களை உருகவைக்கும் மேதாவிலாசத்தைப் புகழ்வதா, அல்லது இந்த திருப்புகழ் இயக்கம் வளர வளர அதை சரியான பாதையில் பராமரிக்க Infrastructure measures எடுத்து திருப்புகழ் மேலும் பரப்புவதற்கு உதவிய அவருடைய administrative capabilityஐ புகழ்வதா என்று நாம் திக்கு முக்காடும் பொழுது, கந்தர் அனுபூதியின் ஒரு பாட்டு நம்மை திசை திருப்புகிறது. ''யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்'' என்று அருணகிரிநாதர் உணர்ந்த மாதிரி, முருகனே முன்பு சொன்ன எல்லா குணங்களையும் மகா தேஜஸ்வியான திருப்புகழ் குருஜியிடம் ஒருங்கிணைத்து அவரைப் பாடவைத்து தான் மகிழ்ச்சி அடைகிறார் என்றுதான் சொல்ல வேண்டும். குருஜி எப்பொழுதும் ''எல்லாம் செந்தில் ஆண்டவன் செயல்'' என்றுதான் சொல்லிக்கொண்டே இருப்பார்.

பகவத் சங்கல்பம் என்று சொல்லி மனுஷனுடைய சாதனை களை ஒதுக்கிவிட முடியாது. சரித்திரத்தில் எத்தனையோ மஹா புருஷர்கள் அவதரித்து தங்கள் தலைமையினால் அந்தந்த சமயங்களின் அமானுஷ்யமான காரியங்களை முடித்து வெற்றி வாகை சூட்டிக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம். அதே போல் நமது குருஜியினுடைய outstanding leadership ஒரு திருப்புகழ் இயக்கத்தை உருவாக்கி பாரெங்கும் அருணகிரிநாதரின் பாக்களை ஒலிக்க வழி வகுத்தது. ஒரு தலைவனுடைய கீர்த்தி அவனுக்குக் கிடைக்கும் ஆதரவைப் பொருத் திருக்கிறது. அந்த ஆதரவு எல்லாவிதத்திலும் பூரணமாக அமைய வேண்டும்.

இவ்வளவு பெரிய இயக்கம் உருவாவதற்கு முக்கிய அஸ்திவாரம் mass support. குருஜியினுடைய திருப்புகழ் பாக்களை அரை நிமிஷம் கேட்டாலும் instant attraction என்று சொல்லும்படி கேட்பவர்கள் அதை மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும், அந்த அமிருதத்தை பருகிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ருசியானது, ஆயிரக்கணக்கான ரசிகர்களை இந்த இயக்கத்தில் ஈடுபடச் செய்தது, செய்து கொண்டிருக்கிறது, செய்து கொண்டே இருக்கும்.

இப்படி ஒரு attraction ஏற்படுவதற்குக் காரணம், அவருடைய பஜனையின் பந்தா, கட்டுப்பாடு, பக்திகலந்த உசத்தியான சங்கீதம் என்று மட்டுமில்லாமல் ஒரே குரல் போல் தோணும்படி mass participation மூலம் 2, 3 மணி நேரம் ஆனாலும் சலிக்காத உற்சாகத்துடன் எல்லோரும் சேர்ந்து அனுபவித்துப் பாடுவது.

இவ்வளவு பெரிய இயக்கத்தை நடத்த வேண்டுமானால், நல்ல மாணாக்கர்கள், அவர்களில் பெரிய அளவில் சிஷ்ய பரம்பரை மேலும் மேலும் திருப்புகழ் பரவுவதற்கும், அதை போதித்து வளர்ப்பதற்கும் உருவாக்கப்பட வேண்டும். எத்தனை மாணவர்கள், எத்தனை சிஷ்யர்கள், டில்லியில், பம்பாயில், சென்னையில் இன்னும் இதர இடங்களில் உருவாக்கப்பட்டு ஆயிரக்கணக்கான அன்பர்கள், குருஜி மெட்டு போட்ட திருப்புகழ் பாக்களை பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு இயக்கம் சாஸ்வதமாக, எந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டதோ, அந்த வழியாகவே சென்று கொண்டே இருக்க வேண்டு மானால் அதற்கு infrastructure மிக அவசியமானது. திருப்புகழ் அன்பர்கள் என்ற ஒரு organisationஐ உருவாக்கி அதன் கிளைகள் மூலமாக, அதன் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தி புஸ்தகங்கள், ஒலி நாடாக்கள், வைபவங்கள் என்ற tools மூலமாக கட்டுமானத்தை பலப் படுத்தி, ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு இயக்கத்தின் தரம், அதனுடைய mass supportல் மாத்திரம் அடங்கவில்லை. அதனை ஆன்மிகக் கலையில் மக்களிடையே மதிப்புக்கும், புகழுக்கும் பாத்திரமான விற்பன்னர்கள் அதன் மேன்மையை ரசித்து அனுபவிப்பது.

காலஞ்சென்ற வாரியார் சுவாமிகள் தன்னுடைய சொற்பொழிவு களில் அடிக்கடி குருஜியின் திருப்புகழ் பாட்டின் அமைப்பைப் புகழ்ந்து பேசியது மட்டுமல்லாமல், சில வைபவங்களில் கலந்து கொள்வது மூலம் குருஜியிடம் அவருக்கு இருந்த மதிப்பை வெளிப் படுத்திக் கொண்டிருந்தார்.

இன்னொரு பெரிய கலைஞர் வாகீச கி.வா. ஜகன்நாதன் அவர்கள் குருஜியுடைய பஜனை என்றால், விநாயகஸ்துதி ஆரம்பிக்கும் பொழுதே வந்திருந்து, ஒரு ரோஜாமாலையை குருஜிக்கு அணிவித்து, தான் ஒரு பக்கத்தில் கண்ணை மூடி உட்கார்ந்து கொண்டு தாரை தாரையாய் கண்ணீர் மல்கி உருகி அனுபவித்துக் கொண்டிருப்பார். அவருக்கு குருஜியிடம் இருந்த ஒரு அன்பும், மதிப்பும் ஒரு சாஸ்வத இணைப்பாக மாறி திருப்புகழ் அன்பர்கள் அவர்கள் குடும்பத்தாருடன்

சேர்ந்து, குருஜியின் பாணியால் அமைக்கப்பட்ட திருப்புகழ் பாக்கள் ஒலித்துக் கொண்டே இருக்க வகை செய்திருக்கிறது.

மற்றும் ஒரு பெரிய உபன்யாசகர் காலஞ்சென்ற ஸ்ரீ கீரன் அவர்களுடைய ஈடுபாடு பற்றி சொல்லி முடியாது. எத்தனையோ வைபவங்களில் கலந்து கொண்டு குருஜியை பெருமைப்படுத்தி இருக்கிறார்.

முக்கியமாக இன்னொரு வேதவித்து காலஞ்சென்ற சுகபிரம்மம் ஸ்ரீராமசாமி சாஸ்திரிகள் குருஜியுடன் அத்யந்த பிரேமையோடு இருந்தார். அதை வெளிப்படுத்தும் வகையில் அவர் குருஜியை, ''நினைத்த காரியம் அனுகூலமே புரி பெருமாளே'' என்று சொல்லி வாழ்த்தி இருக்கிறார்.

ஒரு இயக்கத்தின் தலைவருக்கு ஊக்கமளிப்பதற்கு ஆதரவு எங்கிருந்து கிடைத்தாலும் சந்தோஷமே. இருப்பினும், ஒரு ஜனாதிபதி யாய் இருந்தவர் Sri R. Venkataraman. பதவியில் இருந்தபோதும், அதற்குப் பிற்பாடும் அத்யந்த பிரியத்துடன் அநேக விழாக்களில் கலந்து கொண்டு தன்னுடைய ஆதரவையும் குருஜியிடம் இருந்த மதிப்பையும் தெரிவித்துக் கொண்டே இருந்திருக்கிறார். அது மட்டுமில்லாமல் *1960-1980* (three decades) வியக்கத்தக்க அளவில் நூற்றுக்கணக்கான Senior Government officials in Delhi குருஜியினுடைய வகுப்புக்களில் கற்றுக்கொண்டு திருப்புகழ் வளர்ச்சிக்கு ஒரு thrust கொடுத்தார்கள்.

முன்பு சொன்ன விற்பன்னர்களுடைய ஆதரவுக்கும் மேலாக மடாதிபதிகளுடைய அனுக்கிரஹமும் பரிபூரணமாகக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. சிருங்கேரி மடாதிபதி முன்னால் பட்டத்தில் இருந்த அபிநவ வித்யாதீர்த்த சுவாமிகளுக்கு குருஜியிடம் அத்யந்த பிரியம். குருஜி திருப்புகழ் தொண்டைப் பாராட்டி அவருடைய ஷஷ்டியப்த பூர்த்தி வைபவத்தை சிருங்கேரியிலே நடத்த வேண்டு மென்று சொல்லி வெகு விமரிசையாக நடத்தி வைத்து அனுக்கிரஹம் பண்ணினதை மறக்க முடியாது. குருஜிக்கு நாடுமுழுவதும் இருக்கின்ற ஆதரவை (following) குறிப்பிட்டு அவரும் ஒரு மடாதிபதி என்று சொன்னாலும் மிகையாகாது என்ற அளவுக்கு அவருடைய மதிப்பு இருந்தது என்று சொன்னால் அதைவிட குருஜிக்கு வேறு என்ன பட்டம் வேண்டும். இப்பொழுது சிருங்கேரி மடத்தில் பட்டத்தில் இருக்கும் ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகள், காஞ்சி சங்கராசார்ய சுவாமிகள் எல்லோரும் திருப்புகழ் குருஜியின் தொண்டை மிகவும் பாராட்டு கிறார்கள். சிவானந்த ஆசிரமத்தின் தலைவர் ஸ்ரீ சிதாநந்தாஜீ அவர்களுடைய ஆதரவும் இதே போல் வெகுவாக போற்றத்தக்கது.

மற்றும் பொங்கி மடத்தை ஸ்தாபனம் பண்ணின ஸ்ரீ சாதுராம் சுவாமிகள் குருஜியின் திருப்புகழ் பாக்களின் அமைப்புக்களைப் பற்றிச் சொல்லும்போது திருஎழுகூற்றிருக்கையில் ''ஓருருவாகிய'' என்ற பாட்டுக்கு மெட்டு அமைத்தது வெகு அற்புதம் என்று சொல்வார். எத்தனையோ பேர் முயற்சி செய்தும் அதற்கு மெட்டு அமைக்க முடியவில்லை என்று சொல்வார். ஒவ்வொரு பஜனையிலும் அதைப்பாட வேண்டும் என்று சொல்வார்.

மற்றும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கர்நாடக சங்கீத உலகில் குருஜியினுடைய பாக்களுக்கு ஏதேனும் ஆதரவு இருந்ததா என்று கேட்கலாம். அதை ஒப்புக்கொண்டு கச்சேரியில் பிரபலப்படுத்தும் வகையில் ஆதரவு இல்லை என்றாலும், அதன் மேன்மையை ஒப்புக் கொள்வதற்கு சார்பாக 75 பாக்களை ஸ்வரப்படுத்தி வெளியிட்ட நூல் ஸ்ரீ லால்குடி ஜெயராமன் அவர்கள் மேற்பார்வை இட்டு அச்சடித்து பிரசுரமாகி இருக்கிறது என்பது ஒரு சான்று. ஒரு பழம் வித்வான் ஸ்ரீ ராம்நாத் ஈஸ்வர ஐயர் அவர்கள் வருஷக்கணக்காக ஸ்ரீ குருஜியின் பஜனைகளில் கூடவே வாசித்து, அவருடைய தாள ஞானத்தை வெகுவாகப் புகழ்ந்து கொண்டு, தன் வீட்டில் ஷஷ்டி தோறும் பஜனைகளை நடத்திக் கொண்டும், தன்னுடைய அளவில்லாத அன்பை குருஜியின் மேதையை வெளிப் படுத்துமாறு காட்டிக் கொண்டிருந்தார்.

1960 முதல் 1980 வரை நடந்த பெரிய பஜனைகளில் பக்கவாத்தியமாக ஹார்மோன்யத்தில் வாசித்த ஸ்ரீ நாராயணன் அவர்களையும் மறக்கமுடியாது. மணிக்கணக்காக நடந்தாலும் அலுக்காத பஜனைகள்.

இந்த சமயத்தில் சென்ற 45 வருஷமாக வளர்ந்து கொண்டிருக்கிற ஒரு இயக்கத்திற்கு குருஜியுடன் அவருடைய கட்டளைக்கு ஏற்ப தொண்டு செய்து, வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்த சில அன்பர்களைப் பற்றி சொல்லத்தான் வேண்டும்.

முதன் முதலாக குருஜி திருப்புகழ் வகுப்புகள் ஆரம்பிப்பதற்கே காரணமாயிருந்தவர் காலம் சென்ற Sri R. Narayanan அவர்கள். மறக்க முடியாத உதவிகள் புரிந்து திருப்புகழ் இயக்கம் இவ்வளவு பெரிய நிலைக்கு வருவதற்குத் துணையாயிருந்தவர்களில் Sri A.G. Krishnan, Sri Saravanai, Sri Singara Sundaram, Sri S.V.S. Ratnam, Sri T.M. Subramaniam, R.V. Subramaniam, N. Subramaniam, Lakshmi Narayanan, Sri N. Ramamurthy, Treasurer for decades, Sri Mohan, former Secretary from Delhi, Late A.S. Subramanian (Guruji's brother) from Bombay, Late R. Venkataraman from Bangalore, Late Ramasamy

Iyer, D. Santanam and K.N. Sivaraman from Chennai and countless from within the country and abroad.

அதே மாதிரி முக்கிய சிஷ்யர்களில் சிலரையும் குறிப்பிட வேண்டும். Sri Mali, Sankara Narayanan, Natarajan, N.S. Mani, G. Krishnan (Jikki) Smt. Tara Krishnan, Smt. Kumari Lakshmi Narayanan, Smt. Vasantha Krishnamoorthy, Smt. Saraswathy Subramanian, Smt. Saraswathi Doraiswami, Sri & Smt. Balasubramaniam and A.S. Mani of Bombay, Smt. Kalyani Ramaswamy, Alamelu Santhanam, Indira Krishnamoorthy, Bhagyam Sundaram from Chennai, Smt. Mangalam Mani from Calcutta etc.

இவர்கள் மூலமாக சிஷ்ய பரம்பரை விருத்தியாகிக் கொண்டிருக்கிறது.

ஒரு சில வார்த்தைகள் சென்னைக் கிளையைப் பற்றி. இங்கு திருப்புகழ் பரவுவதற்கு மூலகாரணமா யிருந்தவர் Smt. Kalyani Ramaswamy அவர்கள். அவரிடம் கற்றுக் கொண்ட அநேக சிஷ்யர்கள் இப்பொழுது நூற்றுக்கணக்கானவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து சென்னையில் திருப்புகழ் மழையே பெய்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர், ஸ்ரீ சந்தானம், ஸ்ரீ சிவராமன் அவர்கள் பண்ணி இருக்கிற தொண்டு ரொம்பப் புகழப்படவேண்டியது. மதாணி, திருப்புகழ் இசை வழிபாடு முதலிய புத்தகங்கள் ஒலிநாடா தயாரிப்பு முதலிய பெரிய projects வெற்றிகரமாக நடப்பதற்கு அவர்கள் பெரிதும் உதவி இருக்கிறார்கள். அந்த பரம்பரையில் இப்பொழுது Smt. Padma Venkataraman அவர்கள், அவருடன் Sri Thiagarajan மற்றும் குழுவில் இருக்கும் அங்கத்தினர்கள் 24 மணி நேரமும் திருப்புகழ் பரப்புவதற்காகவே உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். 900 students திருப்புகழ் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். 24 ஆசிரியர்கள் மூலமாக பெரிய பெரிய விழாக்களை நடத்தி ஒரு பெரிய சாதனையே புரிந்திருக்கிறார்கள். Sri N.S. Mani, Bhagyam Sundaram, Smt. Alamelu Santhanam அவர்களுடைய Special Contributionஐ பற்றிச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு தினமும் திருப்புகழ் பஜனையையோ வகுப்புகளோ நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டு முழுக்க பரணி நக்ஷத்திரம்தோறும் மாசா மாசம் 800க்கும் மேற்பட்ட அன்பர்கள் குழாம் கூடி, பாடி 475- பாட்டுக்களையும் பாடி பூர்த்தி செய்வித்த ஆசிரியர்களுக்கு கமிட்டியின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். செப்டம்பர் 1998இல் இருந்து இன்றுவரை நடந்து

கொண்டிருக்கும் எண்ணிலடங்கா வைபவங்களை நடத்துவதில் ஈடு கொடுத்த எல்லோருக்கும் வாழ்த்துக்கள்.

நான் இப்படி ஒரு பட்டியல் வாசித்தேன் என்றால் சென்னையில் குருஜியிடம் இருக்கும் அளவு கடந்த மரியாதையும் மதிப்பும் அவர்களை மேலும் மேலும் திருப்புகழ் பணியில் ஈடுபட வைத்துக் கொண்டிருக்கிறது. என்னே குருஜியின் பெருமை என்பதை எடுத்துக் காண்பிப்பதற்குத்தான்.

To sum up, the Thiruppugazh Anbargal organisation had its birth in the political capital of India. But it never dabbled in politics. On the other hand while the political parties could not agree on women's representation in Loksabha & elsewhere, the gents in this organisation have willingly or helplessly allowed women to snatch almost cent percent representation in all its activities. The growth of the organisation in Delhi has been contemporaneous with the emergence of Uttaraswamimalai temple in the heart of the city which has generated a very great awareness of Kathikeya among North Indians.

In Bombay, business capital of India, the organisation was not interested in commercial activities. It had no share capital to seek listing in the share market. Its commodity is propagating material for the spread of Love & Avirodha through Isai Vazhipadu. The tution was free and the books & audio tapes were sold at heavily subsidized rates. Here again the movement's progress was contemporaneous with the growth of Chembur Murugan Temple which has become a household word throughout the country thanks to the Thiruppugazh Isai Vazhipadu held there particularlly through Padi Vizha at Chembur Murugan Temple.

When the movement reached Chennai, the cultural capital of India, the resurgence of the tamilian psyche for worshipping the Tamil God, variously described by Arunagirinathar, found its echo by the massive crowds that have been thronging the Isai Vazhipadu functions. It has helped to fill a cultural gap. Here again the Bhajans at Mylapore Kapali Temple on Krithigai Day, at Valleeswaram Temple on Sashti Day, and Marundeeswarar Temple, Thiruvanmiyur on Visakam day have set the pattern and moulded many a devotee thronging the temples towards Thiruppugazh singing.

Ultimately, in keeping with the globalisation trend, the export of Thiruppugazh Isai Vazhipadu, through free entry as a most favoured nation treatment without any constraints as from WTO, the propagation of Love & Avirodha has reached its desired goal at a global level.

கடைசியாக சிஷ்யர்கள், ரசிகர்கள் சார்பாக சுருட்டி ராகத்தில் அமைத்து வழங்கி இருக்கும் ''ஆனாத ஞான புத்தியை கொடுத்தும்'' என்ற திருப்புகழ் பாட்டில் அருணகிரிநாதர் முருகனுக்கு தன்னுடைய கிருதக்ஞையை தெரிவித்தபடி சிஷ்யர்களும், குருஜியை நோக்கி

''...மி கப்ர சித்தி பெற்றினி துலகேழும்
யானாக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற வோதி யெத்தி சைப்பு றத்திநும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும்
..................அநுக்ர கித்ததும் மறவேனே'' என்று சொல்லி

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், நாகஸ்வராளி கீரத்தனையில் ''ஸ்ரீ பதே, நீ பத சிந்தநே ஜீவனமு'' லக்ஷ்மி நாயகனே உன் திருவடிகளை தியானிப்பதே இந்த தியாகராஜனுக்கு ஜீவனம் ஆகும் என்று சொன்ன மாதிரி ''ஜானகி பதே நீ பத சிந்ததே ஜீவனமு'' என்று சிஷ்யர்கள் சார்பாகச் சொல்லி எல்லோருடைய வாழ்த்துக்களையும் திருப்புகழ் குருஜி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மரபில் நமஸ்காரங்களை தெரிவித்துக் கொள்ளும் பொழுது தம்பதிகளாய் வணங்குவது விசேஷமாய் கருதப்படுகிறது. அப்படி குருஜியுடன், திருமதி ஜானகி ராகவன் அவர்களும் சேர்ந்து இந்த விழாவில் கலந்து கொண்டதில் எல்லோருக்கும் தனிப்பெருமை. தர்மபுத்திரர் **भार्या दैवकृतः सखा** என்று சொன்ன மாதிரி 24 மணி நேரமும் துணையாக இருந்து குடும்பத்தினுடைய க்ஷேமத்துக்குண்டான பணி களையும் பூர்த்தி செய்துவிட்டு, குருஜியின் இயக்கத்தில் முழு மூச்சாக இறங்கி அவருக்கு பக்கபலமாக எல்லாவிதத்திலும் உறுதுணையாக இருந்து திருப்புகழ் பாட்டுக்களை ராக தாள இசை nuances தவறாமல் அவருடன் கூட வகுப்புகளிலும், பஜனைகளிலும் கலந்துகொண்டு ஒரு பெரிய தொண்டை செய்து கொண்டிருக்கிறார்கள். அவருடைய சாதனையை மிகவும் புகழ வேண்டும்.

எல்லோருடைய சார்பாக வாழ்த்துக்கள்.

இந்த பவழ விழா வைபவத்தில் கலந்து கொள்ள எனக்குக் கொடுத்த வாய்ப்பிற்கு என்னுடைய அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு இப்பொழுது ஸ்ரீ சுந்தரம் அவர்களையும், திருமதி. கல்யாணி ராமஸ்வாமி அவர்களையும் முருகனுடைய அனுக்கிரஹத்தை பரிபூர்ணமாக பெற்றுக் கொண்டிருக்கும் குருஜி தம்பதிகளுக்கு மாலை அணிவித்து கௌரவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***

கல்கி ஆசிரியை திருமதி சீதா ரவி அவர்கள் உரை

இங்கே இவ்வளவு இனிமையாகவும், பக்திசிரத்தையாகவும் திருப்புகழ் பாடிய பிறகு, பேச்சுக்கு அவசியமே இல்லை. இருந்தாலும் ஸம்ப்ரதாயம் கருதி என்னை அழைத்ததில், என்னுடைய அனுபவங் களைக் கூற விரும்புகிறேன்.

சுமார் 20 - 22 வருஷங்களுக்கு முன்னால் எங்கள் பக்கத்து வீட்டில் திருப்புகழ் பஜனை நடக்கும். வீட்டில் பெரியவர்கள் 'அவசியம் போய்வா' என்று சொன்னதன் பேரில் நானும் போக ஆரம்பித்தேன். எனக்கு திருப்புகழைப் பற்றியோ, அதிலுள்ள அழகு பற்றியோ, பக்தி சுவை பற்றியோ அதிகம் தெரியாது. திருப்புகழை அருணகிரிநாதர் எழுதினார் என்றுமட்டும்தான் தெரியும். ஆனால் அங்கு கொடுக்கும் பஞ்சாமிர்தம், சுண்டல் ப்ரஸாதம் ரொம்பப் பிடிக்கும். அதற்காகவே அங்கு சென்று கொண்டிருந்தேன். அப்படி செவ்வாய்க்கிழமைகளில் போக ஆரம்பித்து, மற்ற சில விஷயங்களிலும் கவனம் செலுத்தினேன்.

அங்கு, தஞ்சாவூர் பாணியில் வரையப்பட்ட வள்ளி தெய்வயானை ஸமேதராக முருகன் படம் இருந்தது. பஜனை முடியும் சமயத்தில், தீபாராதனை காட்டும்போது, ''கண்களும் முகங்களும் சந்திர நிறங்களும் கண்குளிர எந்தன் முன் சந்தியாவோ'' என்ற வார்த்தைகளைச் சொல்லி, முகத்திற்கு நேராக கற்பூரத்தட்டைக் காட்டும்போது, முருகனுடைய தாமரை முகத்தைப் பார்த்து, கொஞ்ச நேரத்திற்கு சுண்டலையெல்லாம் மறந்துவிடுவேன். இப்படி, பல செவ்வாய்க்கிழமைகள் சென்றன. ஒருநாள் திடீரென்று, இதுமாதிரி கண்குளிர எந்தன் முன் சந்தியாவோ என்று பாடுகிறோமே, நம்மால் முருகனைப் பார்க்க முடிந்தால் எப்படி இருக்கும் என்று ஒரு எண்ணம் வந்தது. என்ன அஞ்ஞானம் பாருங்கள்! சுண்டல் வாங்கப் போய் விட்டு, முருகனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம். அந்த எண்ணம், ஆசை, நிறைவேறவில்லை. ஆனால் கிட்டத்தட்ட அது நிறைவேறியது என்றால், அது குருஜி ராகவன் அவர்களுடைய எழுத்துக் கைங்கர்யத்தின் மூலமாக நடந்தது.

'கல்கி' பத்திரிகையில் அவர் எழுதிய **''தலம்தோறும் தமிழ்க்கடவுள்''** என்ற மிக அழகான, அற்புதமான பக்தித் தொடர் மூலம், அந்த சந்தோஷமும் பாக்கியமும் எனக்கு மட்டுமல்ல, உங்கள் எல்லோருக்கும் கிடைத்தது. திருப்புகழையும் திருத்தலங்களையும் இணைத்து, அவர் எழுதிய அத்தொடரை, நாம் எல்லோரும் படித்தோம், மகிழ்ந்தோம், முருகனை தரிசித்தோம். அவரை எழுதச் சொல்லிக் கேட்டபோது தயங்கினார், யோசித்தார். அப்புறம், படம் போடுவதற்கு செந்தில்குமார் என்கிற ஓவியரைத் தேர்ந்தெடுக்கிறோம்

என்றவுடன், அவருக்கு மிகவும் சந்தோஷமாகிவிட்டது. அதற்கு முருகனின் கட்டளையே கிடைத்து விட்டதாக எண்ணி உடனே ஒப்புக் கொண்டார். இந்த சந்தர்ப்பத்தில், அவருக்கு உங்கள் எல்லோர் முன்னிலையிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியோர்களே! நண்பர்களே! உலகில் மலிவான விஷயங்கள் பால் ஈடுபாடு ஏற்படுத்துவது என்பது ரொம்ப சுலபம். பக்தி, சேவை என்ற இரு விஷயங்களில், ஒரு பெரிய கூட்டத்தை, நிறைய மனிதர் களை, ஈடுபடுத்துவது என்பது ரொம்ப ரொம்ப கஷ்டமான காரியம். அதை குருஜி அவர்கள் செய்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம், அவருடைய உழைப்பு, ஈடுபாடு, பக்தி, என்பதோடு, முருகனின் திருவருள் அவருக்கு பரிபூர்ணமாக இருக்கிறது என்பது முக்கியமான காரணம் என்று நான் நினைக்கிறேன். குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டு, உலகளாவிய ஒரு இயக்கத்தை நடத்துவது என்பது லேசுபட்ட காரியம் அல்ல.

குருஜியை இப்பணியில் இயக்கிவரும் செந்திலாண்டவனுக்கு முதலில் தலைவணங்கி பிரார்த்தனை செலுத்துவோம். பவழ விழா காணும், குருஜி ராகவனும், அவருடைய குடும்பத்தாரும், நீண்ட ஆயுள், ஆரோக்கியம் பெற்று அவர்களுடைய சேவை தொடர, வணக்கமும் வந்தனமும் தெரிவித்துப் பிரார்த்திப்போம். அவர் சொற்களைக் கொண்டே, இந்த உரையை முடிக்க விரும்புகிறேன்.

அவர் எழுதுகிறார் - அருணகிரிநாதர் நமக்கு அறிவிக்கும் முருகனின் இயல்புகள் என்ன:-

- அவனே பரம்பொருள்.
- உலகை உய்விக்க வந்த தெய்வம்.
- யாவும் அவனிடத்தில் உள.
- அவனே யாவற்றிலும் உளன்.
- ஸர்வ வியாபகம் உடையவன் அவன்.
- மாறாத இளமையும் அழகும் வாய்ந்தவன்.
- அவன் வடிவமே ஆனந்த மயம்.
- எல்லா உயிர்களையும் தன்னிடத்தே ஈர்ப்பவன்.
- அன்பே உருவான முருகன்.
- அப்படிப்பட்டவனை தரிசிக்க தரிசிக்க நம் மனமும் அன்பால் நிறைகிறது.

- ➢ சாந்தமாக, மனம் குவிந்து, ஏகாந்த மோன நிலை பெறுகிறது.
- ➢ அந்த அன்பு தன்னை மறக்கச் செய்கிறது.
- ➢ அன்பு நிறைந்த பிறருடன் நம்மைச் சேர்த்து தொண்டாற்ற வைக்கிறது.
- ➢ அன்பு நம் மனத்தை உருக்கி இளகச் செய்கிறது.
- ➢ பிறர்மேல் அன்பைப் பொழியச் செய்கிறது.
- ➢ நம் அன்பை ஏற்பவர் மனமும் இளகி நம்முடையதுடன் ஒன்றுபடுத்துகிறது.
- ➢ அன்பால் உள்ளங்கள் நிறைய நிறைய, வேறுபாடுகள் தகர்ந்து போகின்றன.
- ➢ அமைதி பிறக்கிறது, சாந்தி பிறக்கிறது, தலம் தோறும் புன்னகை தவழ, தரிசனம் தரும் தமிழ்க்கடவுள் முருகன் உணர்த்தும் தத்துவமும் இதுவே.
- ➢ வாழ்வியலும் இதுவே.

அவர் எழுதியதை, இன்று இங்கே நிதர்சனமாகப் பார்க்கிறேன். அன்பினாலும், பக்தியினாலும் இணைந்த ஒரு கூட்டம், இங்கே அந்த அன்பை வெளிப்படுத்த, ஒரு அழகான பவழ விழா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறது. எவ்வளவு அழகாக நடந்து கொண்டிருக்கிறது. ஒரு கோயில் வைபவம் மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஏற்பாடு செய்தவர்களுக்கும், என்னை அழைத்தவர்களுக்கும், இங்கே நன்றி சொல்லி, திரும்பவும் முருகக் கடவுளைப் பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

***

குருஜியின் மிகப்பழமையான சிஷ்யை
திருமதி. கல்யாணி ராமசாமி சார்பில், அவர் மகள்
திருமதி. லக்ஷ்மி ரமணன் உரையாற்றினார். அவர் பேசியது:

இன்று விழா நாயகராக இருந்து, பவழ விழா காணும் குருஜி ஸ்ரீ ராகவன் அவர்களே! அவருடைய சாதனைகளின் துணையாய் நிற்கும் துணைவி திருமதி. ஜானகி ராகவன் அவர்களே! இந்த பவழ விழாவை சிறப்பான முறையில் கொண்டாட, வெகுபாட்டுபட்டு இங்கு ஒரு மனிதப் பிரவாகத்தையே சேர்த்திருக்கும் விழாக்குழு அங்கத்தினர்கள் அவர்களே! மற்றும் திருப்புகழ் குடும்பத்தின்

அங்கத்தினர்களாய் விழா வில் பங்கேற்க, இங்கு வந்து குழுமியிருக்கும் சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கங்கள். என் தாய் திருமதி கல்யாணி ராமசாமி சார்பில் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வந்திருக்கும் எனக்கு இந்த வாய்ப்பை தந்ததற்கு மிகவும் நன்றி. அம்மாவின் உடல்நிலை காரணமாக அவரால் அதிகம் பேச முடியாது. அதனால் எனக்குத் தெரிந்ததை தெரிந்த விதத்தில் சொல்கிறேன்.

டில்லியில், குருஜியின் முதல் சுற்று சிஷ்யைகளில் அம்மாவும் ஒருவர். திருப்புகழ், அபிராமி அந்தாதி, பதிகம் போன்ற வகுப்புக் களைப் பற்றித்தான், அம்மாவும் அவர் சிநேகிதிகளும் எப்போதும் பேசிக்கொண்டிருப் பார்கள். வகுப்பு முடிந்ததும் வீட்டிற்கு வந்து, ஒலி நாடாவைப் போட்டு, அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வார்கள். தன் மாணவிகள், கசடறக் கற்க வேண்டும் என்ற விஷயத்தில், குருஜி மிகவும் கண்டிப்பானவர். சில சமயம், ஒரே பாட்டை அவர் எடுத்து முடிக்க, மூன்று வகுப்புகள்கூட ஆகும். இசைவழிபாட்டில், பாவமும், தாளமும், ஜீவனும் இருக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்பில், கொஞ்சம்கூட குறை இருந்ததாகத் தோன்றினால், அவர் மேலே போக மாட்டார். அதனால் அந்த பயத்தில்தான் வீட்டிற்கு வந்து, அவ்வளவு தூரம் practice பண்ணி, அடுத்த கிளாஸிற்குப் போவார்கள். இல்லேன்னா, அவர் மேலே சொல்லிக் கொடுக்க மாட்டார்.

நாலு பெண்கள் ஒன்று சேர்ந்தால், நகைகளையும், புடவை களையும் பற்றித்தான் பேசுவார்கள் என்ற trend-ஐ உடைத்தெரிந்ததும் அப்போதுதான். எப்போதும் திருப்புகழ் எல்லா வீடுகளிலும் முழங்கிக் கொண்டே இருக்கும். ஒரு சின்ன நிகழ்ச்சி. அப்போது நாங்கள் ஜெய்ப்பூரில் இருந்தோம். 1975 என்று நினைக்கிறேன். அம்மா ஜெய்ப்பூர் வந்தபோது, ஒரு சின்ன பெண்கள் குழுவை அமைத்து, திருப்புகழ் கற்றுக்கொடுத்தாள். 'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே புசியுமாம்' என்பது போல, நானும் அந்த திருப்புகழைக் கற்றுக் கொண்டேன்.

அடுத்த வருஷம் அம்மாவும் அப்பாவும் வந்தபோது, அம்மா வின் உடல்நிலை மிகவும் மோசமாகி, விரைவு சிகிச்சைப் பிரிவில் சேர்த்தோம். மயக்க நிலைக்குப் போய்விடுவார்களோ என்ற நிலை. நான் அம்மா பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டு, முணுமுணுப்பாய் திருப்புகழ் பாடி, முருகா! 'துணையாய் காவல் செய்வாய்' என்று மனதுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன். இரண்டு நாட்கள் நகர்ந்தன. மூன்றாவது நாள் நான் திருப்புகழ் பாட ஆரம்பித்ததும்,

அம்மா சடாரென்று திரும்பி 'ச்யாமளா! தலைமாட்டில் உட்கார்ந்து திருப்புகழைத் தப்புத் தப்பாய்ப் பாடாதே! குருஜி காதிலே பட்டு துன்னா, இந்த லக்ஷணமா பெண்ணுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறாள் என்று மனம் நொந்துப்பார். எனக்கு உடம்பு சரியான பிறகு நான் பாட சொல்லித்தருகிறேன்; திருத்திக்கோ; இப்போது புத்தகத்தை மூடி வை என்றார்கள்' அம்மா நிச்சயம் பிழைத்து விடுவாள் என்று அப்போதே எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது.

அரை ஞாபக நிலையிலேயே, குருஜி சொல்லிக் கொடுத்த பாணி, அவர்கள் மனதிலே அத்தனை ஆழமாக வேரூன்றி நிற்கு மானால், அந்த சாதனை அடைய, குருஜி என்ன பாடுபட்டிருக்க வேண்டும் - யோசித்துப் பாருங்கள். ஸ்ரீராகவன் அவர்கள், தான் குரு, இவர்கள் மாணவர்கள், மாணவிகள் என்று ஒதுங்கிப் பழகியவர் அல்ல. திருப்புகழ் என்பது ஒரு குடும்பமாக அவரால்தான் உருவாக்கப் பட்டது. திருப்புகழ் கற்பவர்கள் எல்லோருமே அவருக்கு வேண்டிய வர்கள். எல்லோருமே, அண்ணன், தம்பி, தங்கைகள் குடும்பத்தார்கள் அவருக்கு. அப்பரிவுடன்தான் அவர் எப்போதும் பழகுவார். அப்பாவுக்கு அவர் நண்பர் மட்டுமல்ல. ஒரு சகோதரர். எங்களுக்கு well-wisher, வழிகாட்டுபவர் எல்லாம் அவர்தான். எங்கள் வீட்டு விசேஷங்கள் எப்போதும் அவருடைய ஆசியுடன்தான் நடக்கும். முடிந்தபோ தெல்லாம், நேரில் வந்து கலந்து கொள்வார். என்னுடைய கவலை நேரத்தில், அவர் 'முருகனை நம்பு, எல்லாம் நல்லபடி ஆகும்' என்று ஆசீர்வதிப்பார். அவர் வாக்கு பலிக்கும். பிரச்சனைக்கு தானே தீர்வு ஏற்பட்டுவிடும். அவர் திருப்புகழில் என் பெற்றோருக்கு ஏற்படுத்திய ஈடுபாடு, இன்று இரண்டு தலைமுறைகளைக் கடந்து, கடல் கடந்து, சிகாகோவில் வசிக்கும் என் பேரன், பேத்தி வரை போயிருக்கிறது என்றால் பாருங்கள்! அமெரிக்காவில் நம் நாடு மட்டுமல்ல, தாய்மொழியும் அந்நியம். அந்தக் குழந்தைகள் வளரும் சூழ்நிலை அப்படி. 'உனக்குத் தரான், எனக்கு வரான்' என்று பேசும் குழந்தைகள்.

வெளிநாட்டில் வாழும் தமிழருக்காக, தமிழ் தெரியாத தமிழருக் காக,, பக்க எண், பாடல் எண், எதுவுமே மாறாமல், அர்த்த சுருக்கத் துடன், ஆங்கில எழுத்துக்களில் வடிக்கப்பட்ட திருப்புகழ் புத்தகத்தை பிரித்து வைத்துக் கொண்டு சிலர் பெஹாக் ராகத்தில் 'கருமமான பிறப்பற வொருகதி காணா தெய்த்து தடுமாறும்' என்று கொஞ்சங்கூட தடுமாறாமல் அவர்கள் பாடுகிறார்கள் என்றால், அது குருஜியின் மகத்தான சாதனை என்றுதான் சொல்வேன். இந்த திருப்புகழ், தெரு வெல்லாம் முழங்க, திரைக்கடல் கடந்து, அந்நிய தேசங்களிலெல்லாம் சிறப்போடு வளரக் காரணம், அது அமைக்கப்பட்ட, எளிமையான, இனிமையான இசைவழிபாடுதான் என்பேன்.

சில சமயம் எனக்கு சந்தேகம் வரும். குருஜி ராகவன், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, திருப்புகழ் பாட, இன்னின்ன ராகங்களில் தான் அமைப்பார் என்று எதிர்பார்த்தே, அருணகிரிநாதர் அவற்றை அப்படிப் படைத்துவிட்டாரோ என்று தோன்றும். இதில் எனக்கு ஒரு சின்ன குறையும் உண்டு. தான் படைத்த திருப்புகழுக்கு இவ்வளவு வைபவம் இருப்பதை நம்முடன் இருந்து பார்க்க அருணகிரிநாதர் இல்லையே என்பதுதான் அது.

பிறந்த நாளை மெழுகுவர்த்தி ஏற்றிக் கொண்டாடுவது உண்டு - அது மேற்கத்திய வழக்கம். திருப்புகழ் இசைவழிபாடு என்ற தீபத்தை, இத்தனை உள்ளங்களில் அவர் ஏற்றிவைத்து ஒருமைப்பாடும், இறை யன்பும், அன்பு உள்ளமும், அவிரோதமும், உலக அமைதியும் வேண்டும் என்கிற நற்சிந்தனை நாயகனாய், இங்கு திகழும் குருஜி, நம் அத்தனைபேருக்கும் குருவாக வாய்த்தது நம் பாக்கியம். இன்று அவருடைய பிறந்த நாளைக் கொண்டாட நாம் இங்கு அனைவரும் சேர்ந்திருப்பது, நம் அதிர்ஷ்டமே. அவருடைய இந்தத் தலைமுறை யில், அவருடைய contemporaryயாக - அதாவது அவர் வாழும்போதே நாமும் வாழும் நிலை - ஆண்டவன் நமக்குக் கொடுத்ததற்கு, நாம் என்றுமே கடமைப்பட்டிருக்கிறோம். அவருடைய இந்தத் தொண்டு, நெடுங்காலம் நீடித்து, நீண்ட வாழ்க்கைப் பயணத்தில், நல்ல ஆரோக்கி யத்தையும், மகிழ்ச்சியையும், முருகன் அவருக்கும் அவர் மனைவி யாருக்கும் குடும்பத்தினருக்கும், அளிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

***

டில்லி பிராந்திய சிஷ்யர்கள் சார்பாகவும், திரு. கி.வா. ஜகன்நாதன் அவர்கள் குமாரர் திரு. ஜே. ஸ்வாமிநாதன் சார்பாகவும், திருமதி உமா பால சுப்ரமணியன் அவர்கள் பேசினார்கள். அவர் பேசியது:

நமது பெருமதிப்பிற்குரிய ஸ்ரீ குருஜி அவர்களின் பாதகமலங் களுக்கு, எங்களுடைய அனந்தகோடி நமஸ்காரங்கள். குருஜியைப் பற்றி என்ன பேசுவது? குருஜி ஒரு பெரிய திருடர். பணத்திற்காகவோ, நகைகளுக் காகவோ திருடுபவர் அல்லர். பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். நமது குருஜி ஒரு குழந்தை. பதவி, பணம், புகழ் எதையும் கருதாமல் யாவருக்கும் அன்பு மழை பொழிபவர். அவர் குணத்திலே இமயமலை, கருணையிலே

கங்கை, ஞானத்திலே ஆழ்கடல். நமது குருஜி ஒரு ஆலமரம். பல விழுதுகள் மூலமாக பாரெங்கும் திருப்புகழைப் பரப்பி வருபவர். அவர் வாழ்கின்ற காலத்தே நாம் வாழ்வது என்பதே, நமக்கு மிகப் பெரிய பாக்கியமாகும். அவர் ஒரு ஞானச்சுடர். பக்தர்களின் மனக் கவலைகளை, சூரியனைக் கண்ட பனிபோல் விலக்குபவர். பாபனாசம் சிவன் அவர்கள் பாடியபடி 'என்னமோ இருக்குதடி மாயம்' நம் குருஜியிடம். அவர் குணம் குழந்தையாக இருந்தாலும், கடமைகளில் மிகவும் கண்டிப்பானவர். அவர் செய்கிற காரியங்கள் அனைத்திலும் பக்தி உணர்வும் கலை உணர்வும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

சில ஆண்டுகளுக்கு முன் குன்றத்தூரில் வழக்கம்போல் படிவிழா நடைபெற்றது. குருஜி அவர்கள், அந்த வெய்யிலையும் பொருட் படுத்தாமல், ஒவ்வொரு படிக்கும் ஒவ்வொரு புகழாகப் பாடி வந்தார்கள். பக்தர்கள் கூட்டம் அலை மோதியது. கோவிலுக்குள் சென்ற பிறகும் பல திருப்புகழ் பாடல்களைப் பாடினார்கள். நான் குருஜி அருகில் அமர்ந்திருந்தேன். எல்லோருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. எனக்கு குருஜியுடன் சேர்ந்து சாப்பிடவேண்டுமென்று ஆசை. நாங்கள் பிரசாதத் திற்கு காத்திருந்தபோது, பரிமாறுபவர் 'எல்லாம் தீர்ந்து விட்டது' என்றார். நான் குருஜி அவர்களிடம் 'இன்று பட்டினியா' என்று கேட்டேன். அதற்கு 'பட்டினி என்று சொல்லாதீர்கள், விரதம் என்று சொல்லுங்கள்' என்றார். பிறகு நாங்கள் வேனில் திரும்பி வரும் போது, அவர் முகத்தில் எந்தவிதமான சோர்வும் காணப்படவில்லை. அன்ற லர்ந்த செந்தாமரைப்பூ போலிருந்ததைக் கண்டு நான் வியந்து போனேன்.

இரும்பை காந்தத்துடன் தேய்த்தால், இரும்பும் காந்தமாகும். ஆனால் மரத்தை பல ஆண்டுகள் தேய்த்தால் மரம் மரமாகவே இருக்கும். அதுபோல, திருப்புகழ் அன்பர்களை தன் காந்த சக்தியினால் ஈர்த்து காந்தமலையாகவே விளங்குகிறார். அவர் மூச்சுக்கு மூச்சு முருகன் திருநாமம்தான். பேச்சுக்குப் பேச்சு முருகன் கருணை பற்றித் தான். பாட்டுக்குப் பாட்டு திருப்புகழ்தான். நாம் அருணகிரிநாதர் காலத்தில் பிறக்கவில்லையே என்ற தாபம் வேண்டாம். எங்கள் தந்தையார் குருஜியைப் பற்றிக் குறிப்பிடும்போது, இரண்டாவது அருணகிரிநாதர் என்று சொல்லுவார். இதைவிட குருஜியைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது?

இன்னும் பலர் பேச இருப்பதால், எனக்குப் பேச வாய்ப்பளித்த பவழவிழா குழுவினருக்கு, என் தாழ்மையான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது குருஜி இன்னும் 100 ஆண்டுகள் வாழ்ந்து, மேலும் மேலும் திருப்புகழைப் பரப்ப வேண்டும் என்று, நாங்கள் நித்தம் தொழும் கந்தகோட்டத்து முருகப் பெருமானை வேண்டுகிறோம். அந்த நூற்றாண்டு விழாவில் நாங்களும் பேச ஆசைப்படுகிறோம்.

***

FELICITATION SPEECH BY Smt. PADMA VENKATARAMAN

on behalf of disciples of Chennai Region

Respectful Pranams to our beloved Guruji and Guruji Mami. We seek their blessings for the successful conduct of the Pavazha Vizha celebrations today.

It is indeed a real pleasure to be in the company of all our special guests and distinguished members present here, to whom I convey my affectionate greetings.

The Vizha Committee President, Sri.S.K.R. Ji has, just a while ago, presented a comprehensive felicitation address focussing on the multi-dimensional personality attributes of our Guruji and, on how these unusual qualities have mingled together, in course of time, with other supportive factors at the right juncture, to create a divinely vibrant and disciplined mass movement in the spread and propagation of Thiruppugazh. In fact, as most of you are already aware, our Guruji's untiring and committed service to this noble cause has won the compelling attention and admiration from all those who have been fortunate enough to be associated with him either directly or, through the portals of the organization from which he makes an unmistakable impact.

The divinely blessed person that he has come to be, each of us, in turn, feel very fortunate to have been able to offer our humble services to Guruji's mission, in some way or other, reflecting his enduring efforts for the eternal shine and glory of Thiruppugazh as the very **"Song of Life".** The numerous opportunities that he has been offering, during the last 50 years, for us to learn, sing and understand the tenets of truth contained in that classic treatise, have certainly improved the quality of our sense of value in life and, resulted in a harmonious flow of **real service** for the spread and propagation of Thiruppugazh and its Isai Vazhipaadu, both in India and abroad. Slowly but surely, we have begun to experience an unmixed feeling of peace and

happiness within us. This is a unique realization, and our minds, effortlessly begin to share the wonder which Arunagirinathar expessed so eloquently in the sweet melody:

"அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப் பதுவே?"

Surely, **behind** all these pleasant evolution within us, there must be an individual with some, specially endearing traits worthy of heralding the "arrival" of a GURU who has stood the test of Time. Some of these, which the disciples identify in Guruji as winning their appreciation and admiration are, among others:

i. **His uncomprising dedication and devotion** in maintaining the dignity and purity of Thiruppugazh, marked by his absolute, unconditional surrender at the Lotus Feet of The Lord is common knowledge to us. As he has, very often, said unless we learn to focus our minds on this point, our other endeavours will not be right-result-oriented.

ii. His **utter humility** despite the dazzling but pleasing genius for meticulous chandams soaked in bhakti-bhava music which complements Thiruppugazh most effectively, by making us understand the text. The rewards of this divine grace are showered on all of us at various levels or stages of our association with him, as he continues to teach and help in strengthening our bonds with the organization with purpose and meaning.

iii. **His easy accessibility** to one and all, inspite of the hectic schedule behind his immense contributions/achievements/recognition, laurels etc.

iv. His **totally unselfish nature.** The kindness and confidence with which he encourages his well-trained disciples to become teachers themselves and carry forward the mission of Thiruppugazh sincerely, is indeed a bountiful blessing as seen by the large number of

dedicated teachers working tirelessly for the continued growth in Thiruppugazh propagation.

v. His **ready willingess** to teach, guide and correct, without ever diluting the divinity of the subject is always based on goodwill and love. We carry this lesson always in our minds and we **actually** begin to improve.

vi. His **constant exhortation** to the disciples ***to maintain absolute discipline and peace*** during Thiruppugazh related events especially Isai Vazhipaadu programs. This, certainly enhances the depth of our union with the Divine and we have a better chance to enjoy the bliss of pure joy. The value of this advice is well matched by the truth of our experience indeed.

When disciples are exposed to the wholesomeness of such emulative qualities in the person of "Guruji", they are, invariably rightly resolved to listen, receive, learn, absorb and retain the fine points of Thiruppugazh, isai and the text as well. Small wonder that learning to sing even difficult lines with tricky, chandams becomes incredibly easier. We just love it. Even before one can realize, there is a surging desire to practice such songs either at home or in a regularly conducted Thiruppugazh class.

It must be mentioned here, that the enchanting appeal of Guruji's bhakti- soaked Isai descends smoothly into the hearts and minds of even those, alien/totally new to the subject of Thiruppugazh, so far. Naturally many of us feel rather short at having missed learning at his feet all these years; like having lost some priceless treasure because we did not spot or recognize the same, earlier. We bow very humbly at the holy feet of such a bejewelled treasure personified as our Guruji and who continues to teach and guide us with so much love and affection. We wish to involve more and more with the content of Thiruppugazh and participate as much as we can, in Thiruppugazh Isai Vazhipadu.

Just to have an over-view of some of his highly rewarding contributions which have benefited disciples everywhere substantially:

i. His tuning and teaching of 475 songs so far, in 111 enchanting ragas besides Kandar Anubhuti, Vel, Mayil, Sheval Vrittams and select Vaguppus.

   ➢ Additionally, the tuning and teaching of Abhirami Andhadi and Padikams in a rather pleasing combination of highly evocative ragas. Considered a blessing by those who have learnt the same.

ii. Five editions of Thiruppugazh Isai Vazhipadu book (total 16,000 copies)

   ➢ The latest containing the text for all 475 songs. Virtually a text - book for Thiruppugazh lovers.

   ➢ Two editions of Thiruppugazh Madani (3000 copies) with text for all 1325 songs available so far .

iii. Two editions of Audio Cassette Album the latest one released on May 1st this year with all the 475 songs, Viruttams, Vaguppus and Anubhuti contained in 36 volumes.

By the power of his intellectual and intuitive grasp on the basic values of life lighlighted in Thiruppugazh, our Guruji has taken special efforts to reach that message -i.e., of a model code of conduct for righteous and peaceful living in today's highly materialistic and tension-ridden world. In this context, he has displayed unusual organizational skills, by successfully conducting a number of Aanmeeka Peruvizha's – be it a Seminar / Symposium or Workshop, focusing on a variety subjects found in Arunagirinathar's works at different intervals of time. These special functions held at Delhi, Mumbai, Bangalore and Chennai have, unitedly focussed on the need to develop a positive approach which, in turn, helps in improving the quality of our lives.

In Chennai, even within the last six years, the beaming success of the 3-day celebrations of Thiruppugazh Thiruppani Thiruvizha in September 1998 and the 2-day function of Arunagirinathar Aanmeeka Peruvizha and Valli Kalyanam in March 2001, underscored the growing, interest in Thiruppugazh as a subject for purposeful and meaningful study, leading the real seekers to better quality of lives. No doubt, Guruji's contribution was fundamental to such progress. The combined magnetic pull of these enobling qualities of our Guruji became at once crystal clear in the recently concluded series of monthly Bharani Nakshatram Thiruppugazh Isai Vazhipadu held in Chennai. During this period, adopted as the Pavazha-Vizha year of Guruji, the disciples had an unique opportunity by the grace of Lord Muruga, to offer their obeisance, to him by rendering all the 475 Thiruppugazh songs, Vrittams, Vaguppus and Anubhuti which he has so for tuned and taught.

These monthly functions, held at different places in Chennai attracted wide spread participation, growing every month. The disciples, admirers, well-wishers and even mere spectators seemed to be completely absorbed in the Naada-Isai-Aanmeeka-Inbam and almost everyone **must** have been in communion with the divine light within. Yes, we had indeed risen above our personal problems and burdens and **tried to qualify** to taste the elixir of pure joy, even if only, for a few moments.

We **share** this **sacred** happiness with our master who taught us to sing in prayer.

''உயர்கருணை புரியு மின்பக் கடல் மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே''

Even more, the well-versed and rightly resolved teachers imbued with a feeling of love and Avirodha, inspired their students and well-wishers in a similar way to work as a united team and every function, therefore, flowered as a Jewel, radiating the spirit of goodwill and harmony. Surely, the pervading

influence of Guruji's invaluable advice and guidance encouraged us to sing our prayer.

" ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து நடுவேயன்
பான்நூ லிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான
வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி யளிபாட
மாத்ருகா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி லணிவேனோ
(முருகா)

As we all get together to celebrate this sacred Pavazha-Vizha day, in the immediate and auspicious Company of Guruji and his *"திருமால் அளித்த ஞானபத்தினி"* i.e. our Guruji Mami, we offer our respects, love and reverential regards to them. We wish the celebrated couple all the very best with many more years of divine service, good health, happiness and welfare.

We are very happy to offer our obeisance to our "Gurunathar" who has given us the most sacred Japamalai -of Thiruppugazh, with a growing desire to qualify ourselves to realize the "ultimate". Each of us carry in our minds, this soulful prayer seeking Lord Muruga's grace through Guriji's unbounded blessings.

" எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாள்நி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே"

முருகா! ஸத்குருநாதா !

With humble pranams to both of them once again.

Thank you.

* * *

சென்னை திருப்புகழ் ஆசிரியர் குழாத்தின் சார்பில், குருஜியின் மூத்த சிஷ்யர் திரு. N.S. மணி அவர்கள் ஒரு கவிதையை வாசித்தளித்தார். அக்கவிதை:

பவழவிழா காணும் குருஜி அவர்களுக்கு

குரு வந்தனம்

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக்கும் தீந்தமிழில்
அன்பன் அருணகிரி எடுத்துரைத்த திருப்புகழை
பாரெல்லாம் பரப்பிடவே அவன் பெயர் கொண்ட செந்திலில்
அந்தம் ஆதியில்லா குகன் உம்மைப் படைத்தானோ !!

வந்தவினை அகற்றும் மாலோன் மருகன் உமது
சொந்தவினை நீக்கி உம்மைப்பாடப் பணித்தானே!
அழித்துப் பிறக்க வொட்டா அருணகிரியின் கவியையன்பால்
சந்தப் பிழையின்றி இசை வடிவில் அமைத்தீரே!!

பெறுதற்கரிய பிறவிபெற்று அகரமுதல் பொருளறிந்து
மறை சதுர் விதம் தெரிந்து வேலவனின் அடிபணிந்து
மாசில் அடியார்கள் வாழ்கின்ற ஊர்தோறும் சென்று
தேனென்று பாகென்று கந்தன் புகழ் பாடினீரே!!

துக்கத் துக்கத்தில் சிக்குண்டு உழலாமல்
இருவினை மருந்தாகத் திருப்புகழ் அமுதூட்டி
பாடாத நாவினையும் பாடவைத்து உள மகிழ்ந்து
எல்லோரும் இன்புறவே ஞானபோத மருளினீரே!!

இறவாமல் பிறவாமல் எமையாளும் குருவாகி
என்றென்றும் தொண்டு செய்ய எம்மை பணித்தீரே!
சந்தச் சபைதனில் உளமுருக இன்னிசைத்து
பகதிப் பரவசத்தில் எமை மூழ்கச் செய்தீரே!!

குகன் புகழே ஓதி யாம் இனி அன்புடனே இசை பாட
அறிய அறிய அறியாத அறிவுதனை அருள்வீரே!
நீ நான் என வேறாதிருக்க திருமுருகன் தாள் தொழ
பிறவிகள் தோறும் எம் குருவாய் நீரே வரவேணும்!!

குருவும் கோவிந்தனும் ஒரு சேர முன்னின்றால்
கோவிந்தன் காட்டிய குருவே தெய்வமென்றான் கபீர்
குருவும் குமரனும் ஒருசேர எம் முன்னின்றால்
குமரன் காட்டிய இந்த குருவே தெய்வமென்போம் யாம் !!

குரு சரண கமலம் பணியும்
சென்னன ஆசிரியர் குழாம்

குரு சரண கமலம் பணியும் அநேக கோடி சிஷ்யர்களின் சார்பாக, இதை குருகமலங்களில் சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்.

பின் குறிப்பு : இந்தக் கவிதையுடன், குருஜியின் எல்லா சிஷ்யர்களின் சார்பாக பாத காணிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. எல்லோரும் அவரவர் இருக்குமிடத்திலிருந்து குருவந்தனம் செய்தார்கள்.

***

பவழவிழா குழு அமைப்பாளர் / காரியதரிசி திரு. முத்துஸ்வாமி பேசினார்கள். அவருடைய உரை:

பொதுவாக நான் பேசினால், எனக்கு நேரம் போவதே தெரியாது. ஆனால் உங்களுக்கு அது தெரியும். ஆகவே, மிக மிகச் சுருக்கமாக, எனது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

குருஜியின் திருப்புகழ் இசைவழிபாட்டில், இரு அம்சங்கள் மிகவும் முக்கியம்.

1. **கட்டுக்கோப்பான இசைவழிபாடு:** அமெரிக்காவில் பாடினாலும் சரி, ஆப்பிரிக்காவில் பாடினாலும் சரி, அம்மங்குடியில் பாடினாலும் சரி, எல்லோரும் ஒரே மாதிரியாகப் பாடுவார்கள். அம்மாதிரியான கட்டுக்கோப்பான இசைவழி பாட்டை அமைத்துக் கொடுத்த பெருமை, குருஜியைச் சாரும். ஏனென்றால், இந்த சிஷ்யர்களில் இசை ஞானம் உள்ளவர்கள் பலபேர் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய மனோ

தர்மத்துக்கு இடம் கொடுக்காமல், குருஜியின் மனோ தர்மத்துக்கு மட்டும் இடம் கொடுத்து, இம்மாதிரி பாடுவது மிகமிகச் சிறப்பான விஷயம்.

2. **அவர் தேர்ந்தெடுத்து இசை அமைத்த ராகங்கள் :** முக்கிய மாகக் குறிப்பிடப் போனால், சங்காரந்தப்ரியா, சந்த்ர கௌன்ஸ், சுப பந்துவராளி, பாகேஶ்ரீ ராகங்களில் அவர் இசை அமைத்ததைப் பாடினால், உள்ளம் உருகப் பாடும்போது, நம்மையும் அறியாமல் கண்ணீர் தாரை தாரையாக வரும். நான் அனுபவித்திருக்கிறேன். நீங்கள் எல்லோரும் அனுபவித்து இருக்கிறீர்கள். நான் பாடிக் காண்பிப்பேன். நீங்கள் பயந்து விடுவீர்கள். சொல்வதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட குருஜிக்குப் பொதுவாக 'சதமானம் பவதி சதாயு:' என்று வாழ்த்துவார்கள். ஆனால் நமக்கு அதில் உடன் பாடில்லை. வேதத்தில், 'ஸத்யம், ஞானம், அனந்தம் ப்ரம்மா' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ப்ரம்ம தத்வத்தை, திருப்புகழ் மூலமாக உணர்த்திக் கொண்டிருக்கும் குருஜிக்கு, அனந்தம் ஆயு: - நீண்ட ஆயுள் வேண்டும் என்றே, எல்லாம் வல்ல செந்திலாண்டவனை உங்கள் அனைவர் சார்பிலும் வேண்டிக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட 'அநந்தம் ஆயு: - நீண்ட ஆயுள்' கேட்பதற்குக் காரணம் உண்டு. பவரோக நிவாரணம் - பிறப்பு இறப்பு அற்ற நிலை - வாழ்க்கையின் குறிக்கோள் என்பார்கள். அப்படிப்பட்ட பவரோக நிவாரணம் - பிறப்பு இறப்பு அற்ற நிலைபற்றி திருப்புகழில் பல இடங் களில் வருகிறது. திருப்புகழ் இசைவழிபாடு மூலமாக, உலகிலுள்ள பல சிஷ்யர்களுக்கு பவரோக நிவாரணம் பற்றி போதிப்பதற்கு முன், குருஜிக்கு பவரோக நிவாரணம் கிடைப்பது எப்படி? ஆகவே, நம் எல்லோருக்கும் பவரோக நிவாரணம் கிடைப்பதற்கு வழிகாட்டி விட்டு, பிறகு தன்னுடைய பவரோக நிவாரணத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே 'அநந்தம் ஆயு: - நீண்ட ஆயுள்' செந்தில் ஆண்டவன் அருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.'

***

புலவர் மா.கி. ரமணன் அவர்கள் உரை

ஜானகி ராமச்சந்திரன் பட்டாபிஷேக வைபவம் போல், இன்றைக்கு நாம் முருகப் பெருமானை குருஜி திரு. ராகவன் வடிவில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனக்குத் தெரிந்த இரண்டு விஷயங்களை 5 நிமிஷங்களில் சொல்லி முடித்துவிடுகிறேன்.

நான் குருஜி அவர்களின் பரமார்த்த சீடனாய் நேரிடையாக அவரிடம் பழகமுடியவில்லை. வெளியிலிருந்து - correspondence course - நான் படித்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், நீங்கள் எல்லாம் University Students. நேரிடையாக குருஜி அவர்களிடம் படித்து பட்டம் வாங்கியிருக்கிறீர்கள். நான், குருஜியிடம் நல்லவன் என்ற பட்டத்தை மட்டும்தான் வாங்கி இருக்கிறேன். குருஜியின் ஒவ்வொரு விழாவிலும், குருஜி அவர்கள் 'நாயேனையும் ஒரு பொருளாக நயந்து வந்து நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்' என்பதைப் போல என்னை ஆசீர்வதிப்பார்கள்.

எனக்கு இரண்டு விஷயங்கள் இன்னும் புரியாமல் இருக்கிறது. முதல் விஷயம், ஒவ்வொருவரும் ஒரு அமைப்பு தொடங்கும்போது, அதை அஃறிணையில்தான் தொடங்குவார்கள் - மன்றம், கழகம், கட்டிடம் என்று அஃறிணையில் ஆரம்பிப்பார்கள். ஆனால் குருஜி அவர்கள்தான் மனிதர்கள் பேரிலே ''திருப்புகழ் அன்பர்கள்' என்ற அமைப்பினைத் தொடங்கினார்கள். இது கட்டடமல்ல, கழகமல்ல மன்றமல்ல. இங்கே மனித மனங்கள் உள்ளன. அந்த மனத்தை, முருகப் பெருமானுடைய திருப்புகழால் செம்மை செய்ய வேண்டும் என்பதற்காக. நான் எவ்வளவோ திருப்புகழ் மன்றங்களில் பேசியிருக் கிறேன். அதெல்லாம் கட்டடங்களால் ஆனது. அவை செங்கல்களால் ஆனது. ஆனால் திருப்புகழ் என்ற ஒரு ஜீவனால், திருப்புகழ் என்ற ஒன்றால், மனதால், ''அன்பர்கள்'' என்று Registration பண்ணப்பட்ட ஒரே அமைப்பு, உலகிலேயே நம்முடைய ''திருப்புகழ் அன்பர்கள்'' தான். வேறு எந்த அன்பர்களும் இம்மாதிரி Registration பண்ணியிருக்க மாட்டார்கள். அனேகமாக, Registration பண்ணும்போது, வேண்டாம் என்று சொல்லியிருப்பார்கள். அன்பர்கள் என்றால் யார்? என்ன Qualification என்று Registration பண்ணுவதற்கு முன் கேட்பார்கள்.

இரண்டாவது விஷயம் திருப்புகழ் என்ற புதையலை, 500 ஆண்டுகளுக்கு முன்னால் அருணகிரிநாதர் கொடுத்தபோது, நீண்ட காலம் அதை எடுத்துப் பயன்படுத்த முடியாமல் இருந்தபோது,

மஹான் சேஷாத்திரி ஸ்வாமிகள் அவர்களிடம் தீக்ஷை பெற்ற, வள்ளி மலை ஸச்சிதானந்த ஸ்வாமிகள், பகவான் ரமணர் அவர்களின் ஈடு பாட்டின் காரணமாக, அந்தப் புதையலை பெயர்த்து எடுத்துவந்து எல்லோருக்கும் கொடுத்தார். பிறகு, வள்ளிமலை ஸச்சிதானந்த ஸ்வாமிகள் எடுத்துக் கொடுத்ததை, துடைத்து, அதிலுள்ள அற்புதமான விஷயங்களை எடுத்து உரை எழுதிக் கொடுத்தவர் தணிகைமலை செங்கல்வராயப் பிள்ளை அவர்கள். மறந்துவிடக்கூடாது. அவர் அந்தப் பொக்கிஷத்துக்குப் பொருள் எழுதிக் கொடுத்தார். அவர் பொருள் எழுதிக்கொடுத்ததை, கோயிலில் வைத்துவிடக்கூடாது என்று, அழகாக அதைக் கொண்டுவந்து, தெருவெல்லாம் பிரசாரம் செய்தவர் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள். மறந்துவிடக்கூடாது. அந்தத் தெருவிலே பிரசாரத்திலிருந்த திருப்புகழை வீட்டுக்குள்ளே கொண்டு வந்து, நமக்கெல்லாம் கிருஹப்பிரவேசம் செய்து வைத்தவர் குருஜி ராகவன் அவர்கள். அந்தப் புதையல் வீட்டிற்குள் வந்துவிட்டது.

ஒவ்வொரு வீட்டிலும், யாரெல்லாம் திருப்புகழ் பாடுகிறார் களோ, அந்த வீட்டில் முருகப்பெருமான் இருக்கிறார். குருஜி இருக் கிறார். அதில் ஒன்றும் சந்தேகமே கிடையாது. குருஜி சொல்வார்:- 'திருப்புகழைப் பாடு. திருப்புகழ் எங்கெல்லாம் பாடுகிறார்களோ, அது யாகம். அது வேள்வி. திருப்புகழை சிரிப்பவர் தமக்கு நெருப்பு' என்று சொல்லியிருக்கிறார். ஏனென்றால், யாகம் பண்ணுவதற்கு நெருப்பு வேணும். அருணகிரிநாதர் பெருமான் சொல்லியிருக்கிறார் - திருப்புகழ் நெருப்பு என்று அறிவோம். அதனால், திருப்புகழ் எங்கெங்கு பாடப் படுகிறதோ, கணபதி ஹோமம் பண்ணுவதைவிட, நவக்ரஹ ஹோமம் பண்ணுவதைவிட ஆயுஷ்ய ஹோமம் பண்ணுவதைவிட, மிகப்பெரிய யாகங்கள் பண்ணுவதைவிட, திருப்புகழ் வேள்வி - இசை வேள்வி - செய்வதை குருஜி அவர்கள்தான் நமக்குக் கற்றுக் கொடுத்தார். இந்த ஹோமம் எங்கெல்லாம் நடந்து கொண்டிருக்கிறதோ அங்கு வேறு ஹோமங்களே செய்ய வேண்டாம். நாமே செய்யலாம். மற்ற ஹோமங் களுக்கு சாஸ்திரிகளைக் கூப்பிடவேண்டும். தக்ஷிணை கொடுக்க வேண்டும். ஆனால் நம் கையில் அந்த ஹோமங்களைக் கொடுத்திருக் கிறார். ஏனென்றால் திருப்புகழ் ஒரு வேள்வி.

இந்த வேள்வியை அவர் எப்படிச் சொல்லிக் கொடுத்தார்? மற்றவர்களெல்லாம் திருப்புகழ் பாடும்போது, உதட்டிலிருந்து பாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இவர் சொன்னார் - உள்ளத்திலிருந்து பாடவேண்டுமென்று. அப்போதுதான் மனோலயம் வரும் என்று

சொன்னார். 'வாக்கும் மனமும் இல்லா மனோலயம் தேய்த்தே எந்தன் சிந்தை தெளிவித்து' என்று சொல்வதைப் போல மனோலயம் என்று, மனம் இணைந்து, மனம் தோய்ந்து பாடவேண்டும் என்று சொன்னார். குருஜி அதற்கும் மேல் போனார். 'உதட்டினால் நீ பாடினால், முருகப் பெருமான் வருவான், நீ கேட்டதைத் தருவான் - இகத்திற்கு. யார் ஒருவர் மனத்தினால் பாடுகிறாரோ, அவர்களுக்கு முருகப் பெருமான் வருவார் - இகமும் பரமும் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு - இசைபயில் ஷடாக்ஷரமதாலே, இகபர சௌபாக்கியம் அருள்வார்! யாருக்கு? உதட்டினால் பாடினால் இகத்திற்கு - உள்ளத்திலே பாடினால் இகபரத்திற்கு. அதாவது குருஜி நமக்கு ஆத்மாவிலிருந்து திருப்புகழ் பாடவேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார். ஆத்மானுபூதி வரவேண்டும் என்று சொன்னார். ஆத்மாவிலிருந்து பாடுவதற்கு concentration ரொம்ப முக்கியம். எப்படி ஒரு பாட்டுக்கு சுருதி முக்கியமோ, அப்படி நாம் பாடும்போது ஆத்மசுத்தி, ஆத்மானுபூதி முக்கியம் என்று சொல்வார். அந்த ஆத்மானுபூதியைப் பெறுவோம் என்று சொல்லி அனைவருக்கும் நன்றிகூறி விடை பெறுகிறேன்.

***

ஹைதராபாத் சிஷ்யர்கள் சார்பாக திரு. என். சுப்ரமணியன் அவர்கள் பேசியதாவது :

''குருஜி அவர்களுக்கும் திருப்புகழ் அன்பர்கள் கூட்டத்திற்கும் குருஜி மாதா அவர்களுக்கும் எல்லோருக்கும் நமஸ்காரம். நான் பேசப் போறது மூன்று விஷயம், அதை ரொம்ப சுருக்கமாகத்தான் சொல்லப்போகிறேன்.

ஒன்று குரு, குருதத்வம் என்றால் என்ன? அவர் நமக்கு என்ன சொல்லித்தருகிறார்? ஒரு மந்திரம். மந்திரம் என்றால் என்ன? அதற்கப் புறம், அதனால் உண்டாகிறவர் யார்? அடியவர்கள். அடியவர்கள் என்றால் யார்? இவைகளைப் பற்றி திருப்புகழில் என்ன சொல்லி யிருக்கிறது? இந்த மூன்று விஷயங்களைப் பற்றி ஐந்து நிமிடங் களுக்குள் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

குரு என்றாலே ஸமஸ்கிருதத்தில் பெரிசு என்று அர்த்தம்.

நமக்கும் தெரியும். மாதா, பிதா, குரு தெய்வம். குரு தெய்வத் திற்கு முன்னாடி. குருமகராஜ் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் Gospelல்

சொல்லியிருக்கிறார். 'நாம் த்யானம் செய்யும்போது, பகவானுடைய தரிசனம் கிடைப்பதற்கு முன்னால், இதுதான் உன்னுடைய இஷ்டம் என்று காண்பிப்பாராம். காண்பித்தபிறகு, அதோடு ஒன்றிவிடுவார். குருவும், குருதத்வமும் அந்த பரப்ரும்மத்துடன் ஐக்கியமாகிவிடுவார். அதுதான் அந்த குரு நமக்கு பண்ணும் பெரிய தொண்டு''. அருணகிரி நாதர் அந்த குரு தத்வத்தைப் பற்றி மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். காஞ்சீபுரம் திருப்புகழ் ''கறையிலங்குக்ர'' நமக்கு எல்லாம் தெரிந்த திருப்புகழ்தான். அதுலே, definition கொடுக்கிறார். அருணகிரிநாதர் திருப்புகழில் பல இடங்களில் ப்ரம்மதத்வத்தை define பண்ணி இருக் கிறார். குருதத்வம் என்றால் என்ன என்று சொல்லி இருக்கிறார். குறையில் அன்புற்று - அதுதான் குருஜி தினமும் சொல்கிறாரே - அன்பு, அவிரோதம் - அதுதான். குறையில் அன்புற்று குற்றமறுக்கும் பொறைகள்நந்த அற்ப புத்தியை விட்டு என் குணமடங்கக் கெட்டு குணமற்று - கெட்ட குணமெல்லாம் அடங்கணும்; அப்புறம் நிற் குணமான நிலையை அடையணும். குணமற்று, ஒன்றிலதான குணம் அடைந்து, எப்பற்றுகளும் அற்று, குறியொடும் சுத்தபக்தர் இருக்கும் குருபதம் - குருபதம் என்றால் இம்மாதிரியான குணங்கள் கொண்ட - குணம், குணாதீதம், நிற்குணம் என்ற நிலையை அடைந்த குரு - அப்படிப்பட்ட குரு நமக்கு கிடைத்திருக்கிறார். நாம் எல்லோரும் செய்த பூர்வ ஜன்ம புண்ணியத்தினால், இப்பேர்ப்பட்ட குரு நமக்கு கிடைத்திருக்கிறார்.

நமக்கு குருஜி என்ன உபதேசம் பண்ணுகிறார்? திருப்புகழ் சொல்லித் தருகிறார். திருப்புகழ் என்பது ''மந்திரத்திற்கு மந்திரம் தான்'' என்பதற்கு இரண்டு உதாரணங்கள் சொல்கிறார். சேஷாத்திரி ஸ்வாமிகள் வள்ளிமலை ஸ்வாமிகளுக்கு திருப்புகழ் சொல்லிக் கொடுத்த போது, வள்ளிமலை ஸ்வாமிகள் அவரிடம் 'உபதேசம்' பண்ணுங்கோ என்று கேட்கிறார். அதற்கு, சேஷாத்ரி ஸ்வாமிகள் சொல்கிறார்- 'நீதான் திருப்புகழைப் பாடுகிறாயே, அதுதான் உனக்கு மந்திரம்; வேறு ஒன்றும் வேண்டாம் போ' என்று. அதனால் திருப்புகழே மந்திரம் என்று நமக்கு தெரிஞ்சிருக்கு. குருஜி சொல்லிக் கொடுப்பது எல்லாம் மந்த்ரோபதேசம்தான். மந்த்ரோபதேசம் சாதாரண மாக வலது காதில் சொல்வார்கள். ஆனால் எப்படி முருகன் பரம சிவனுக்கு சொல்லும்போது 'இரு செவிமீதும் பகர் செய் குருநாதா' என்று சொல்வதுபோல, குருஜி நமக்கு இரு காதுகளிலும் படும் படியாக, அழகாக திருப்புகழ் உபதேசம் பண்ணி இருக்கிறார். மந்திரம் என்று திருப்புகழிலே சொல்கிறோமே அதற்கு என்ன அர்த்தம்? 'மனனா த்ராயதே இதி மந்த்ர:' என்று ஸம்ஸ்கிருதத்தில் சொல்லி

இருக்கிறது. எதை நாம் த்யானம் செய்கிறோமோ, எதை ஜபிக்கிறோமோ அது நம்மைக் காப்பாத்தணும். அதற்குப் பெயர்தான் மந்திரம். 'சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்த பகை எரித்தெறிய உருக்கி எழும் எனக்கு ஓர் துணையாகும்' என்று சொல்கிறார். 'திருத் தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலைவிருத்தன் எனதுளத்தில் உறை கருத்தன் மயில் நடத்து குகன் வேலே!'

அதாவது, வேல் நம்மை காப்பாற்றுகிறது என்கிறார். எப்படி மந்திரம் நம்மை காப்பாற்றுகிறதோ, அதேபோல் வேல் நம்மை காப்பாற்றுகிறது என்கிறார். சிவானந்த ஸ்வாமிஜி சொல்கிறார். முருகனை த்யானம் பண்ணும்போது- நிர்க்குண உபாசனை பண்ணும் போது ஒரே ஒளிமயமான வேல் நமக்குத் தோன்றும். அதாவது முருகனும் வேலும் ஒன்றே, வேறில்லை என்கிறார். திருப்புகழிலே வரும் முருகன்தான் நம்மைக் காப்பாற்றுகிறார்.

அடுத்து, அடியவர்களைப் பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லணும். அதாவது 'சூரில் கிரியில் கதிர்வேல் அருந்தவன் தொண்டர்குழாம் சாரில் கதியின்றி வேறில்லை காண்' என்று சொல்லி இருக்கிறார். அவ்வையார், எல்லோரையும்விட பெரியவர் அடியவர்கள் தான் என்று சொல்லி இருக்கிறார். திருப்புகழில் அடியாரைப் பற்றி சொல்லும்போது - 'மூலமந்திர' திருப்புகழிலே - 'கூடுகொண்டுழல் வேனை அன்போடு ஞான நெஞ்சினர்பால் இணங்கிடு கூர்மை தந்தினியான வந்தருள் புரிவாயே' என்று சொல்கிறார். திருமயிலை திருப்புகழில் - 'வரைமாதுமையாள் தரு மணியே, குகனே என, அறையா அடியேனும் உன் அடியாராய் வழிபாடுறுவாரொடு அருள் ஆதாரமாயிடு மகநாள் உளதோ சொல் அருள்வாயே' என்று சொல்கிறார். அப்புறம் 'சயிலாங்கனைக்கு' திருப்புகழில், 'செயல் மாண்டு சித்த மவிழ நித்தத்வம் பெறப் பகர்ந்த உபதேசம் சிறியேன் தனக்கும் உரை செயலில் சற்றும் குருத்வம் குறையுமோதான்' என்று கேட்கிறார். இது மாதிரி பல இடங்களில், அடியார்களின் பெருமை யைச் சொல்கிறார்.

குருவுடைய ஸௌலப்யம் என்பது என்ன? திபெத்தில் ஒரு பெரிய மகான் மேலாரக்கான் என்று இருந்தார். அவரைப் பற்றி படித் திருப்பீர்கள். 2000 வருஷங்களுக்கு முந்தி இருந்தார். அவர் குருவைத் தேடி 30 தடவை போனாராம். காட்டிலும், மலையிலும் ஒரு மாத காலம் பிரயாணம் செய்து குருவிடம் செல்வாராம். ஆனால், குரு 'நீ இன்னும் தகுதியாக இல்லை. அப்புறம் வா' என்று திருப்பி அனுப்பி விடுவாராம். இப்படி பல வருஷங்கள் இது மாதிரி போனபிறகுதான்

குருவின் அனுக்ரஹம் கிடைத்தது என்பார்கள். இப்போது, ஸ்ரீ ராமானுஜரை எடுத்துக் கொண்டால், அவர் பல தடவை போய் குருவை உபதேசத்திற்காக அண்டியிருக்கிறார்.

'அஷ்டாக்ஷரீ' உபதேசம் கிடைத்ததா? மீண்டும் மீண்டும் போனபிறகு, அவருடைய குரு 'அஷ்டாக்ஷரீ' உபதேசம் செய்தார்.

நம்முடைய குருஜியைப் பாருங்கள். டில்லியில் எனக்குத் தெரியும். அவர், பேட்டை பேட்டையாக நம்மைத் தேடிக் கொண்டு வந்து, நமக்கு உபதேசம் பண்ணியிருக்கிறார். அதோட பெருமை எல்லாம் நமக்கு சாதாரணமாகத் தெரியாது. சுலபமாகக் கிடைத்திருப்ப தால் நமக்கு அதன் அருமை புரியாது. அதைப் புரிஞ்சுக்கணும். இப்பேர்ப்பட்ட குரு நமக்குக் கிடைத்திருப்பதற்கு நாம் எவ்வளவோ புண்ணியம் செய்திருக்கணும்.

பகவானுக்கே பல்லாண்டு பாடிய நாடு நம் நாடு. ஆதலால், நாமும் குருஜி பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து, திருப்புகழ்த் தொண்டு தொடர்ந்து செய்ய வேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொள்வோம்.

ஹைதராபாத், ஸெகண்டராபாத் சிஷ்யர்கள் சார்பாக இந்த காணிக்கையை குருஜிக்கு சமர்ப்பிக்கிறோம்.

***

**சென்னை திருவல்லிக்கேணி,
முருகன் திருவருட் சங்கம், தலைவர் திரு. வே. கணேசன் அவர்கள் உரையாற்றினார்கள். அவர்களின் உரை:**

காலையில்எ ழுந்துன் நாமமெமொ ழிந்து
காதல் உமை மைந்த! எனஓதிக்
காலமும்உ ணர்ந்து ஞானவெளி கண்கள்
காண அருள் என்று பெறுவேனோ

இங்கு கூடியிருக்கும் திருப்புகழ் அன்பர்களுக்கும் ஏனைய அடியார் பெருமக்களுக்கும் குருஜி என்று அன்பர்களால் அழைக்கப் பெறும் ஸ்ரீ A.S. ராகவன் அவர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத் தையும், வாழ்த்துக்களையும் முருகன் திருவருட் சங்க அடியார்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

குருஜி அவர்களைப் பற்றி என் சிற்றறிவிற்கு எட்டியவரை இங்கு பேச ஆரம்பிப்பதற்கு முன்பாக இன்றளவில் 49 ஆண்டுகளை நிறைவு செய்து 50வது பொன்விழா ஆண்டில் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் திருவல்லிக்கேணி முருகன் திருவருட் சங்கத்தின் செயலர் திரு. D. அனந்த ஸுப்ரமணியன் அவர்களை இன்று பவழ விழா காணும் குருஜி அவர்களுக்கு பொன்னாடையுடன், மலர் மாலையையும் முருகன் திருவருட் சங்க அடியார்கள் சார்பில் அணிவிக்கும்படி வேண்டுகிறேன்.

இன்றைய தினம் குருஜி அவர்களின் பவழ விழாவினை இங்கு கூடியிருக்கும் அன்பர்கள் சிறப்பாக கொண்டாடுகிறார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணகர்த்தாவாக விளங்கும் ஒரு சிலரை இந்த குளிர்ந்த வேளையில் நாம் நினைவு கூறுதல் வேண்டும். அவர்களில் முதன்மையானவர் திருப்புகழ் பாக்களை தேடி எடுத்து அதை நமக்கு கிடைக்கும்படியாக முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்ட வ.த. ஸுப்ரமண்ய பிள்ளை அவர்களையும் அவற்றைப் பின்னம் செம்மையாக்கிப் பல புதிய திருப்புகழ் பாக்களைச் சேர்த்து ஆராய்ந்து முழுவதற்கும் உரை எழுதிய அவர் திருமகனார் வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்களையும் இந்நேரத்தில் நாம் நினைத்து நன்றி பாராட்டுவது குருநாதனின் அருள் நமக்க கிடைத்ததற்கு ஒப்பாகும் என்பதில் சந்தேகமில்லை. இவர்கள் இல்லையென்றால் இன்றைய தினம் குருஜி அவர்களின் பவழ விழாவைக் காணும் பாக்கியம் நமக்கு கிடைத்திருக்காது.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்
தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்.

ஆகிய தெய்வப்புலவரின் இரண்டு குறட்பாக்களின் ப்ரதிபலிப்பாக விளங்கும்படி குருஜி அவர்களை உருவாக்கிய வணக்கத்திற்குரிய அவர்களின் தாய், தந்தையாரையும் இன்று நாம் நினைத்து நன்றி பாராட்ட வேண்டும். இவையாவற்றிற்கும் மேலாக ‘மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ் சொல்’ என்ற குறளுக்கு ஏற்ப குருஜி அவர்கள் இன்றளவில் ஒரு முன் மாதிரியாக திகழ்வது எல்லாம் வல்ல செந்திலாண்டவன் திருவருள் தான் என்றால் அதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அருணகிரியாரின் திருப்புகழால் குருஜி அவர்கள் ஒரு மதாணியாக விளங்குவதை நினைக்கும் பொழுது அபியுக்தர் என்ற மஹானின் பாடல்கள் ஒரு சிலவற்றை இங்கே நினைவு கூறுதல் இன்றி யமையாதது.

ஞானம் பெறலாம் நலம் பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம் - மோனவீ(டு)
ஏறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேஇக் கூறு.

வள்ளிமண வாளன் மயிலேறும் வள்ளல்தனைத்
தெள்ளுதமி ழாற்புனைந்து சீர்பெறவே - உள்ளபடி
வைப்பாம் அருணகிரி வாழ்த்தும் திருப்புகழைக்
கற்பார் கரையேறு வார்.

ஆறுமுகம் தோன்றும் அழகியவேல் தோன்றும் அவன்
ஏறுமயில் தோன்றும் எழில் தோன்றும் - சீரிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

திருப்புகழ் இசைவழிபாட்டினால் பெற்ற இன்பத்தை ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற கோட்பாட்டிற்கிணங்க இன்றைய தினம் பவழ விழா காணும் குருஜி அவர்கள் செந்தில் ஆண்டவன் திருவருளினால் சகல செல்வ யோக மிக்க பெரு வாழ்வையும், இசைபயில் ஷடாக்ஷரத்தினால் இகபர சௌபாக்கியத் தையும் பெற்று இன்று போல் அடுத்து வரவிருக்கும் 25ஆம் ஆண்டில் அதாவது 15.09.2028 அன்று நடைபெற இருக்கும் வைர விழாவையும் நாம் எல்லோரும் காணும் படியான பாக்கியத்தை ''வேண்டிய போதடியர் வேண்டியதை வேண்ட வெறாதுதவும்'' படி அந்த நாலாந்த வேதத்தின் பொருளோன் அருள வேண்டும் என்று இந்த பவழ விழா நாளில் இங்கு கூடியிருக்கும் அடியார்கள் அனைவரும் ப்ரார்த்திப் போம். அவ்வாறாகில் அடுத்த 25 ஆண்டுகளில் மேலும் பல லக்ஷக் கணக்கான திருப்புகழ் அன்பர்கள் உருவாக அவர் காரணமாக விளங்குவார் என்பது வெள்ளிடைமலை.

முருகனைத் துதிக்கும் பாடலான 'பத்தர்கணப்ரிய' என்று தொடங்கும் பாடல் பிற்காலத்தில் நமது குருஜியைப் போல் வரும் அடியார்களுக்காகவே அருணகிரியார் இயற்றினாரோ என்று நினைக்கத்

தோன்றுகிறது. எங்கு நோக்கினும், எந்த இடத்திற்கு சென்றாலும் திருப்புகழ் அன்பர்களின் புகழ் குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் போல பிரகாசித்து பலகாலும் உனைத் தொழுவோர்கள் மறவாமல் திருப்புகழ் கூறி படி மீது துதித்துடன் வாழ அருளும் அந்த பவரோக வைத்தியநாதப் பெருமானின் திருவருள் என்றும் குருஜி அவர்கள் பக்கலில் இருந்து காப்பதுடன் அவரைப் பின்பற்றும் அடியார் பெருமக்களுக்கும் கிடைக்க இந்த பவழ விழா நாளில் ப்ரார்த்திக்கிறேன்.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு தும்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கிய பெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா

***

சென்னை ரமண கேந்த்ரா டிரஸ்டின் தலைவர் திரு. R. வெங்கட கிருஷ்ணன் அவர்களின் உரை :

திருச்செந்திலாண்டவனையே, தன் குருவாக தெய்வமாக, தாயாக, தந்தையாக, பந்துவாகவும் நினைத்து, அவன் புகழ்பாட, ஸ்ரீ அருணகிரி நாதர் தந்தருளிய திருப்புகழ் பாடி, பரவசமாவதே தன் வாழ்க்கையின் லக்ஷ்யமாகக் கொண்டு, ஆயிரமாயிரம் பேர்களை, உலகம் பூராவும் அந்த நல்வழியில் நடத்திச் செல்லும் ஸ்ரீ குருஜி ராகவன் அவர்களின் பவழவிழா பிறந்தநாள் விழாவில், ரமண கேந்த்ராவின் சார்பில், ஸ்ரீ குருஜி அவர்களைப் பணிந்து வணங்கு கிறோம்.

உண்பதும், உடுப்பதும், உறங்குவதுமாய், தன் வாழ்நாட்களை வீண் பொழுதாக்கும் கோடானுகோடி மனித மாக்களின் மத்தியில், இப்படி ஒரு மாமனிதனாகத் திகழும் ஸ்ரீ குருஜி அவர்களே! இன்னும் ஆயிரம் பிறைகாண ஸ்ரீ ரமண பகவானை, அந்த செந்திலாண்டவனை வணங்கிப் பிரார்த்திக்கிறோம். ஸ்ரீ ரமணபகவானே முருகனின் அவதாரம் என்று ஸ்ரீ கணபதி முனி என்ற மாமுனிவர் அவரை முருகனாகத் தரிசித்தபின் பறை சாற்றினார். உலகுக்குத் தெரியாத ஒரு விஷயம். ஸ்ரீ அருணகிரி

நாதரின் திருப்புகழ் சுமார் 70/80 ஆண்டுகளுக்கு முன், உலகத்திற்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாதபோது, ஒரு விஷயம் நடந்தது. அந்த செந்திலாண்டவன் அருளால், ஸ்ரீ ரமண பகவான் அண்ணாமலையில் ஸ்கந்தாச்ரமத்தில் இருக்கும்போது, ஒரு மலையாள இளைஞன், அதிகம் படிப்பு அறிவு இல்லாத நிலையில், ஸ்ரீ பகவானை வந்து அடைந்தான். ஸ்ரீ பகவான் ஒரு நாள் அந்த இளைஞனிடம், திருப்புகழ் புஸ்தகம் ஒன்றைக் கொடுத்து, அதில் உள்ள பாடல்களைப் பாடச் சொன்னாராம். அதற்கு அந்த இளைஞன், தனக்கு தமிழே சரியாகத் தெரியாத போது, இந்த கடினமான தமிழ் திருப்புகழை எப்படிப் பாடுவது என்று கூறினானாம். அதற்கு பகவான் - 'நீ பாடு, தானே வரும், என்று சொன்னாராம். ஸ்ரீ பகவானின் வாக்கை தெய்வவாக்காக எடுத்துக் கொண்டு அந்த இளைஞன் திருப்புகழ் பாடத் தொடங்கினானாம். அவன் தான் பிற்காலத்தில் வள்ளிமலை ஸ்வாமிகளாக உருவாகி, திருப்புகழை உலகுக்கு கொண்டு வந்த ஆளாவார். அப்படி ஸ்ரீ பகவான் மௌனமாக இருந்து, திருப்புகழ் பரவும்படி அவருக்கு அருளினார். இப்படி பகவானுக்கும் கந்தனுக்கும் இணக்கம் பல. ஸ்ரீ குருஜி அவர்கள் மயிலாப்பூர் ரமணகேந்த்ராவில், மிகவும் ஈடுபாடு உடையவர். அதன் வளர்ச்சியில் அக்கரை உள்ளவர். அவர் கேந்திரத்துக்கு வருகை தந்து, அந்த மயில் வாகனின் திருப்புகழ் பாடல்களை, மணிக்கணக்காக, உட்கார்ந்த நிலையில் மாறாமல், பக்தியில் மூழ்கி, பரவசமாக்கி உள்ளார்.

அவருடைய இந்த 75வது பிறந்தநாள் விழாவில், நாங்கள் கலந்து கொண்டு, அவர்களுடைய ஆசியையும், அன்பையும் அடையும் பாக்கியம் பெற்றோம். இந்த மகத்தான குருஜியின் பவழவிழாவில், ரமண பக்தர்கள் சார்பில், ஸ்ரீ குருஜி அவர்களுக்கு தீர்க்க ஆயுசையும், ஆரோக்கியத்தையும் அருளுமாறு, ஸ்ரீ பகவானை பிரார்த்தித்து, உலகம் முழுவதும் முருகன் அருளைப் பரப்பும் தொண்டினை இன்னும் பலகாலம் செய்ய பிரார்த்தித்து, எங்களுக்கு இந்த வாய்ப்பினைத் தந்த நிர்வாகிகளுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். ஸ்ரீ குருஜி அவர்களுக்கு, ரமண கேந்த்ரா அன்பர்கள் சார்பில், பகவானுடைய அழகான பத்மாஸன திருஉருவப் படத்தை உங்கள் சார்பில் கொடுக்கிறேன்.

* * *

சென்னை நங்கைநல்லூர் வள்ளிமலை வள்ளல் திருப்புகழ் மன்றம் காரியதரிசி அருள் இசை மணி திரு. S.V. சுப்ரமணியன் அவர்கள் உரையாற்றினார்கள். அவர்களின் உரை:

திருப்புகழை இயற்குதெரிய புகட்டி கருப்புகுதா மார்க்கமதை காட்டும் குருப்புகழ் சேர் ஸச்சிதானந்தனின் தாள் மலரில் என் சிந்தை இச்சையாய் வைத்தேன் இசைந்து''- திருப்புகழ் அடியார்களுக்கு அரோஹரா; பக்தஸ்ரீ அருணகிரிநாத ஸ்வாமிக்கு ஜெய்; ஸ்ரீ ஸச்சி தானந்த குரு மகராஜ்கி ஜெய்; ஸ்ரீ ஸாதுராம் மஹாராஜ்கீ ஜெய்; குருஜி ஸ்ரீ A.S. ராகவன் அவர்களுக்கு அரோஹரா!

ஆறுமுகமங்கலம் தந்த திருச்செந்தில் ஆறுமுகன் அடியாராக இருக்கக்கூடிய, ப்ரம்மஸ்ரீ ராகவன் அவர்களுக்கு பவழவிழா நடந்து கொண்டிருக்கிறது. மிகச்சிறப்பாக எல்லோரும் கண்டுகளித்துக் கொண்டிருக்கிறீர்கள். கேட்டுக் களித்துக் கொண்டிருக்கிறீர்கள். அனு பவித்துக் கொண்டிருக்கிறீர்கள். 1958வது ஆண்டிலே அவர் திருப்புகழ் பணி தொடங்கி, 1998வது ஆண்டிலே 40வது ஆண்டு விழாவாக நடந்தது. அதே தினத்தில், சென்னை கிளைக்கு 25வது வெள்ளிவிழா ஆண்டு நிறைவு விழாவும் நடைபெற்றது. இப்போது அந்த திருப்புகழ் செம்மலுக்கு பவழ விழா 75 ஆண்டுகள் நிறை வடைந்து, 76வது பிறந்த நாள் இன்றிலிருந்து தொடங்குகிறது. அந்த விழா இப்போது நடந்து கொண்டிருக்கிறது. எல்லோராலும் அன்புடனும் மரியாதையுடனும் குருஜி, குருஜி, குருஜி என்று அழைக்கப்படும் அந்தப் பெரியவர். அவருக்கு எப்படி பெரியதொரு அன்பு அடியவர்களிடத்திலே வந்தது, பெருமை எப்படி வந்தது என்றால், குருவுக்கு என்ன இலக்கணம் இருக்கவேண்டுமோ, அவ்வளவும் அவரிடத்திலே கொண்டு இருக் கிறார். அவிரோதம், அன்பு, வெறுப்பேயில்லாத தன்மை, எல்லோரை யும் விரும்பக்கூடிய தன்மை, இவை எல்லாம் சேர்ந்து, அவரை ஒரு சிறந்த குருவாக ஆக்கியிருக்கிறது.

குரு யார்? எப்படிப்பட்டவர்? கடவுளைவிட குருவானவர் பெரியவர். 'ந குரோரதிகம்' என்பது வாக்கியம். குருவுக்கு மேலாக, குருவுக்கு அதிகமாக பெருமையோடு கூடியவர் யாருமே உலகத்தில் கிடையாது என்பது கருத்து. அந்த குரு என்ற நிலையிலே இருந்து, தனக்கு என்ன தெரிகிறதோ, நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டு, எல்லா அடியார்களுக்கும் சொல்லிக் கொடுப்பார்கள். பாடல் சொல்லிக் கொடுப்பார்கள். ராகம் சொல்லிக் கொடுப்பார்கள். ஆனால், பொருளுடன் சேர்த்து அவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதுமட்டு

மன்றி, அந்தச் சொற்களில் உள்ள, பொருளிலே உள்ள நயங்களையும், பக்தி பாவங்களையும், ஆன்மீகமான விஷயங்களையும் சேர்த்து, அவர்கள் அடியார்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்ற காரணத்தினாலே, திருப்புகழ் பாடல்களை எல்லாம் அவர் பாடும்போது, தானும் 'முருக, சரவண மகளிர் அறுபர்முலை நுகரும் அறுமுக, குமர சரணமென அருள்பாடி, ஆடி மிகமொழி குழற, அழுது தொழுது உருகும் அவர் விழியருவி முழுகுவதும், வருக, வருக, என அறைகூவி ஆளுவதும், மணநாறு சீரடியே' பகவானுடைய திருவுருவம் முழுவதற்கும் பன்னீ ரால் அபிஷேகம் செய்கிறோம். அருணகிரிநாதர் என்ன சொல்கிறார். அடியார்கள் அன்பினாலே, அவருடைய திருவடியை நினைந்து மனம் உருகி, பாடுகின்றபோது, அவர்களுடைய கண்களிலிருந்து பெருகக் கூடிய அந்த ஆனந்தபாஷ்பம் என்கிற கண்ணீர் இருக்கிறதே, அந்தக் கண்ணீரிலேதான் முருகப் பெருமானின் திருவடிகள் நனைகின்றன வாம். 'வருக வருக என அறைகூவி ஆளுவதும் மணநாறு சீரடியே' என்று சீர்பாத வகுப்பில், அருணகிரிநாதர் அவருடைய திருவடியை முழுகுவதற்கு, எந்த பன்னீரை நாம் உபயோகிக்க வேண்டும், எந்த தண்ணீர் கந்தனுக்கு உகந்தது என்று சிறப்பாகச் சொல்லி இருக்கிறார். அப்படித்தானும் மனம் உருகி கண்ணீராலே நீர் விட்டுப் பாடி, எதிரே வந்து கேட்கக்கூடிய அடியார்கள், தொடர்ந்து பின்பற்றி பாடக்கூடிய அடியார்கள் எல்லோரையும் அந்தப் பெரிய நிலைக்கு அழைத்துக் கொண்டு போகும் பெரிய சாமர்த்தியவான். தபோபலம் உடையவர். தபோநிதியாக இருக்கக் கூடியவர் நம்முடைய இந்த விழா நாயகனாக இருக்கும் A.S. ராகவன் அவர்கள். திருப்புகழ் என்பது ஒரு பெரிய தேவ அமிர்தம். மாணிக்கவாசகர் சொன்னார். பரமேச்வரனைப்பற்றி சொல்லும் போது அந்த அடியார்கள் எப்படி இருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையிலே என்ன ஓடுகிறது- ''கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போல, சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறிநின்ற, சிறந்த பிறப் பறுக்கும் எங்கள் பெருமான்'' என்று கருப்பஞ்சாற்றையும் தேனையும், கறந்த பாலையும், நெய்யையும் சொல்லி இருக்கிறார்கள். நெய்யை பாலில் போட்டுக் குழப்பினால், நன்றாக இருக்காது என்று நினைக்க லாம். அப்படி நினைத்துப் பார்க்கக்கூடாது. அதனுடைய சுவையை மேலோட்டமாகப் பார்த்து, நம் மனக்கண்ணினாலே நினைத்து, சுவைத்துப் பார்க்க வேண்டும். அதுபோல், திருப்புகழ் என்பது மணி ப்ரவாள நடையில் அமைந்த இசைச்சுவை, சந்தபாநடைச் சுவை, பொருள் சுவை, ஆன்மீகம் கலந்த பக்தி சுவை, இப்படி நான்கு விதமான சுவைகளும் கலந்த பெரிய பா. திருப்புகழ் பா. அதனை உங்களுக்கு எல்லாம் சொல்லிக்கொடுத்திருக்கிறார்கள்.

அருணகிரிநாதர் திருச்செங்கோட்டுத் திருப்புகழில் சொல்லு கிறார்- நமது குருஜி அவர்களுக்கு பெரிய பட்டம் ஒன்றும் கிடையாது. திருப்புகழ்த் தொண்டன் என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறார். அது எப்படிப்பட்ட பட்டம் தெரியுமா? ''சம்ப்ரமித்து தும்பிபட்சிக்கும் ப்ரசச் செய்படி மீதே தொண்டுபட்டுத் தெண்டனிட்டு கண்டு பற்ற தண்டை வர்க்கத் துங்கரத்தப்பங்கயத்தை பிண்டுவைத்து பண்பு பெற்றவரு''- தொண்டுபட்டு, தண்டனிட்டு, கந்தப் பெருமானுடைய திருவடியாகிற சிறந்த தாமரையால், அதனுடைய அனுக்ரஹத்தால், நற்பண்பு களையும் எல்லாம் ஒன்றாகப் பெற்றவர். அருணகிரிநாத ஸ்வாமிகள், பழனி, திருச்செந்தூர், திருத்தணி இந்த மூன்று ஸ்தலங் களையும் பல இடங்களில் கோத்துக் கோத்து சொல்லி இருக்கிறார். அந்த மூன்று ஸ்தலங்களில், ஒரு ஸ்தலம் செந்தில்.

''செந்திலை உணர்ந்து, உணர்ந்து உணர்வுற கந்தனை அறிந்து அறிந்து அறிவினில் சென்று செருகும் தடம் தெளித்தரத்தணியாத சிந்தையும் அவிழ்ந்து அவிழ்ந்து, உரை ஒழித்து, என் செயல் அழிந்து அழிந்து அழிய மெய்சிந்தை வர என்று நின் தரிசனபப்படுவேனோ'' என்று பாடுகிறார் திருச்செந்தூர் பாடலில். அந்த திருச்செந்தூர் ஆண்டவனுடைய திருவடிக்கு அடிமைப்பட்டவர்தான் இந்த நம் விழாவின் நாயகர் பிரம்மஸ்ரீ ராகவன் அவர்கள். மேவு திருத்தணி செந்தில் நீள் பழனிக்குகந்து திரு ஏரகத்தமர்ந்த பெருமாளே! என்று அருணகிரிநாதர் மிகச்சிறப்பாக சொல்லிய 3 ஸ்தலங்களில், ஒரு ஸ்தலத்தில் இருக்கக்கூடிய, கந்தப் பெருமானுடைய திருவடியை மனம் உருகி வணங்கி நிற்பவர், குருவாய் வந்து நமக்கு உபதேசித்தார். அதனால்தான் அருணகிரிநாதர்- 'சுருதியாய், இயலாய், இயல்நீடிய தொகுதியாய், வெகுவாய், வெகுபாஷைகள் கொள் தொடர்புமாய், அடியாய், நடுவாய், மிகு துணையாய், மேல்துறவுமாய், அறமாய், நெறியாய், மிகுவிரிவுமாய், விளைவாய், அருள் ஞானிகள் சுகமுமாய், முகிலாய், மழையாய், எழுசுடர் வீசும் பருதியாய், மதியாய், நிறை தாரகை பலவுமாய், வெளியாய், ஒளியாய், எழு பகலிராவிலையாய், நிலையாய், மிகுபரமாகும் பரம மாயையின் நேர்மையை யாவரும் அறியவொணாததை, நீ குருவாய் இது பகருமாறு செய்தாய்' - அருணகிரிநாதர் தனக்கு முருகப்பெருமான் அனுக்ரஹம் பண்ணி யதைச் சொல்லி, நீ குருவாய் இது பகருமாறு செய்தாய் முதல் நாளுறு பயனோதான் என்று தான் திருப்புகழ் பாடியதைச் சொல்லி, அதற்கு பூர்வ ஜென்ம புண்ணியம் என் பாக்கியம் என்று சொல்லி முடிக்கிறார். இந்த பாட்டை, அப்படியே திருப்புகழ் அன்பர்கள் எல்லோருக்கும் வைத்துக் கொள்ளலாம்.

திருப்புகழ் அன்பர்கள் எல்லோரும் குருஜி அவர்களிடம் பாடம் கற்றார்கள். குருஜி அவர்கள் மிகச் சிறப்பாக திருப்புகழ் பாடல்களையெல்லாம் பொருளோடு, நல்ல கருத்துக்களோடு, ராகங்களோடு, தாளங்களோடு, உங்களுக்கு பயிற்றுவித்திருக்கிறார்கள். அப்போ 'நீ' குருவாய் இது பகருமாறு செய்தாய்' என்று பக்தர்களெல்லாம் முதல் நாளுறு பயனோதான் நாங்கள் எல்லாம் பூர்வ ஜென்மாவிலே பண்ணின புண்ணியம்தான் நீங்கள் எங்களுக்கு குருவாக வந்து, இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான திருப்புகழ் பாடல்களை நீங்களும் பாடி, எங்களையும் கேட்கவைத்து, மறுபடியும் எங்களையும் பாடும் படி வைத்திருக்கிறீர்களே என்று, அருணகிரிநாதர் சொன்ன அதே வார்த்தைகளை நம்முடைய குருஜி அவர்களுக்கு மாற்றியமைக்கும் படியான நிலையிலே, நீங்கள் எல்லோரும் பெரும் பாக்கியம் செய்திருக்கிறீர்கள் என்பது நன்றாக விளங்குகிறது. ஆதி காலத்திலே, வள்ளிமலை ஸ்வாமிகள் திருப்புகழ் பாடினால் அரசாங்கத்தார் பிடித்து விடுவார்கள் என்ற நிலை இருந்த காலத்திலே, சமுத்திரக்கரையிலே பேசி போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று விட்டார்கள் வள்ளி மலை ஸ்வாமிகளை – இவர் அரசாங்கத்துக்கு எதிராக விடுதலைப் போராட்டம் நடத்துகிறார் என்ற எண்ணத்திலே. அரசை ஆளலாம், சித்தியாகலாம், வெற்றியாகலாம் என்று வரும் கடைக்கண்ணியல் வகுப்பிலிருந்து அதைக் கேட்டு விட்டு, அப்படி இருந்து, மிகவும் கஷ்டப்பட்டு பெரிய அஸ்திவாரத்தை வள்ளிமலை ஸ்வாமிகள் அப்போது போட்டு விட்டுப் போய்விட்டார்கள். இப்போது அந்த அஸ்திவாரத்தின் மேலே, பல நாடுகளோடு கூடிய பல கட்டங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

அப்படி உங்களுக்கெல்லாம், இந்தியாவிலும் இன்னும் பல இடங்களிலும், மேல் நாடுகளிலும் உள்ள எல்லோருக்கும், நம் குருஜி அவர்கள், தேக ஆரோக்கியத்துடன் இன்னும்பல ஆண்டுகள் வாழ்ந்து, 475 பாட்டுக்கள் மட்டுமல், 1329 பாட்டுக்கள் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்து, அவர் 'சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழவேண்டும்' என்று செந்திலாண்டவன் திருவடிகளையும், வள்ளி மலை ஸ்வாமிகளையும், கந்தப் பெருமானையும் வணங்கிக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி சொல்லிக் கொணடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்'.

***

Shri A.S. MANI SPOKE ON BEHALF OF DISCIPLES OF MUMBAI REGION

''குருர் ப்ரம்மா, குருர் விஷ்ணு, குருர்தேவோ மஹேச்வர: குருஸ்ஸாக்ஷாத் பரப்ரம்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம:''

The Guru is Brahma, the Guru is Vishnu, the Guru is Lord Maheswara, the Guru is the supreme Brahman Himself. prostrations to the Guru.

Dear Devotees, On behalf of Thiruppugazh disciples of Bombay Region, I offer my humble pranams to Parama Pujya Sri Guruji and all of you assembled here to celebrate the divine occasion of the Pavazha Vizha of Sri Guruji. The Skanda Purana Brahma Samhitha describes the GURU as the one who removes the darkness of ignorance and reveals the true nature of "Brahman' which is infinite, indivisible and which prevails in all creations both moving and non-moving. Our own Sri Arunagirinathar has said- *''பரம மாயையின் நேர்மையை யாவரும் அறியொணாததை நீ குருவாய் இது பகருமாறு செய்தாய் முதல் நாளுறு பயனோதான் முருகா''* - "Lord Muruga appearing as Guru has removed the sins of maya and has made to realise the truth not easily realisable." The same is also true of all the Thiruppugazh Anbargal. The Lord appearing in the form of our revered Guruji, has removed many of our shortcomings through "Thiruppugazh' which is exquisite music and philosophy combined.

Our feelings of reverence and love of our Guruji cannot be adequately expressed in words. Perhaps, the tears of joy and gratitude appearing in your eyes right at the moment, reveal the true feelings of all disciples of Guruji. On this auspicious occasion of our Guruji's Pavazha Vizha, we offer our "Sashtanga Namaskarams' at his holy feet and seek his blessings. We reverently offer a humble token of our love and regard to our Guruji. We pray to Lord of Chendil to bestow on Guruji "His choicest Blessings'. Om Muruga!"

***

பிரபல ஸங்கீத வித்வான் நெய்வேலி ஸ்ரீ சந்தான கோபாலன் அவர்கள் பேசியது:

குருஜி அவர்களுடைய பொன் அடிகளுக்கு என்னுடைய நமஸ்காரங்கள். குருஜி அவர்கள் எவ்வளவோ பேர்களுக்கு எவ்வள வோ விதமான தெய்வீக அனுபவங்களைக் கொடுத்துக் கொண்டிருக் கிறார். அவர் ஒரு பெரிய ஸங்கீத வித்வான். என்னிடம் ரொம்பவும் பிரியம் கொண்டவர். என்னிடம் சொல்லியிருக்கிறார்- 'நான் கச்சேரி யெல்லாம் பண்ணிக்கொண்டு இருந்தேன். முருகன் என்னை இழுத்துண்டுட்டார்'. என்ன ஒரு தெய்வீகமான வாழ்க்கை அது. எனக்கு இரண்டு அனுபவங்கள் மறக்க முடியாதது. இங்கே அதை பகிர்ந்துக்கணும். அது ஒரு ரொம்ப புண்ணியமான அனுபவம்.

வடபழனி திருப்புகழ் சபையில் குருஜி அவர்களுக்கு 'திருப்புகழ் மாமணி' award-title கொடுத்தார்கள். அப்போது 2 மணி நேரம் 3 மணி நேரம் ஒரு மயில் பக்கத்திலேயே இருந்தது. அந்த function ஆரம்பித்ததிலிருந்து முடியும் வரை மயில் பக்கத்திலேயே இருந்தது. குருஜி அவர்கள் மயில் விருத்தம் பாடி முடித்தபிறகுதான் அந்த மயில் பறந்து போச்சு. அது ஒரு பெரிய தெய்வீக அனுபவம். எங்க வாழ்க்கை யிலே யாருமே மறக்க முடியாதது. நினைத்தாலே சிலிர்க்கிறது. இது ஒரு ப்ரத்யக்ஷ அனுபவம்.

எனக்கு personalஆக ஒரு அனுபவம் கிடைத்தது. டில்லிக்கு கச்சேரிக்கு போயிருந்தபோது, குருஜி வந்து, தேடி வந்து, அனுக்ரஹம் செய்திருக்கிறார். பெங்களூரில் குருஜி இருக்கும்போது, பெங்களூரில் என் கச்சேரிக்கு வந்து, இருந்து கேட்டுவிட்டு, எனக்கு ஆசீர்வாதம் பண்ணிவிட்டு போயிருக்கிறார். அதே மாதிரி ஒவ்வொரு ஊரிலும். டில்லியில் அப்போது அவர் வீட்டிற்கு சாப்பிடப் போயிருந்தேன். அம்மையார் ஆனந்தமான சாப்பாடு போட்டார்கள். சாப்பாடு முடிந்தபிறகு 2-2½ மணி நேரம் குருஜி திருப்புகழிலிருந்து அர்த்தங்கள் எடுத்து சொன்னார். அப்படியே அழுது அழுது சட்டையெல்லாம் நனைந்து போய்விட்டது. பிரியவே முடியவில்லை. அது ஒரு தனி அனுபவம். அது ஒரு தரம் தான் எனக்கு கிடைத்தது. அது போதும். அதைப் பற்றி நினைத்தாலே சிலிர்க்கிறது. பகவானைப் பற்றி அழுதால் அவனைப் பெறலாமே என்று சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார். அதன் பொருளை சொல்லி சொல்லி எனக்கு நிசிக்கரு அறுக்கும்னு பூர்வ ஜன்ம கர்மா எல்லாம் போய்விட்டது. Pure ஆகிவிட்டேன். அப்படிப்பட்ட ஒரு தெய்வீக அனுபவத்தை அவர் கொடுத்தார். இப்பகூட நமஸ்காரம் பண்ணினேன். எனக்கு ஒரு முருகன் படம் கொடுத்திருக்கிறார்.

என் குரு சேஷகோபாலன் ஸார் சொல்லுவார். எந்த பிரச்னை இருந்தாலும், ஒரு பாடகனுக்கு தொண்டை சரியில்லை அல்லது ஏதோ ஒரு பிரச்னை இருந்தால் 'திருப்புகழைப் பாடு' என்று சொல்வார். 16வது வயது வரை, சேஷகோபாலன் ஸார் திருப்புகழ் பாடிவிட்டு, அதற்குப் பிறகுதான் சங்கீதத்திற்கு வந்தார். திருப்புகழில் அவ்வளவு விஷயம் இருக்கிறது. சேஷகோபாலன் ஸாருக்கு எவ்வளவோ titles வந்திருக்கிறது. ஆனால் திருப்புகழ் மணி ஸார் கொடுத்த அந்த மாலையைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருப்பார். அதுமாதிரி குருஜி எனக்கு ருத்ராக்ஷமாலை போட்டிருக்கிறார். அதைப் பற்றித்தான் எப்போதும் சொல்வேன். முருகன் படம் கொடுத்தார். முருகன் எப்படி இருக்கிறார் என்று கேட்டார். உங்காத்துக்கு வரணுமே என்றார். நான் அவருடைய குழந்தை மாதிரி; காத்திண்டிருக்கேன்.

இந்த மாதிரி ஒவ்வொருத்தருக்கும் தேடித்தேடி, முருகன் எப்படி அடியார்களுக்கெல்லாம் அனுக்ரஹம் பண்ணுவாரோ அதே மாதிரியே குருஜி அவர்கள் எங்களைப் போன்ற எல்லோருக்கும் அனுக்ரஹம் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். இதே அனுக்ரஹம் என்னிக்கும் எங்கள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு, உங்கள் எல்லோருக்கும் நமஸ்காரத்தைச் சொல்லி விடை பெற்றுக் கொள்கிறேன்.

***

பெங்களூர் மற்றும் கர்நாடகா பிராந்திய சிஷ்யர்கள் சார்பாக திரு K.N. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசினார்கள். அவர்களின் உரை:

உயர்திரு குருஜி அவர்களுக்கும் அவருடைய உறுதுணைவி யாக இருக்கும் திருமதி ஜானகி ராகவன் அவர்களுக்கும் மற்றும் சென்னையிலிருக்கும் மாநில திருப்புகழ் சிஷ்யர்களுக்கும் மேலும் எனக்கு பேச அனுமதி அளித்த இந்த விழா குழுவினருக்கும் ஏனைய மாநில திருப்புகழ் சிஷ்யர்களுக்கும், எல்லோருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றியை பணிவன்புடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் மந்திரம், வெற்றி, புகழ், வாழ்வு, வளம் இதற்கு நிரந்தரம். சமீபத்தில் பார்த்த ஒரு விளம்பர வாசகம். 'மாதா பிதாவை நாம் தேர்ந்தெடுப்பதில்லை. அவர்கள் நம்மை உருவாக்கிய வர்கள். ஆனால் குருவை தேர்ந்தெடுக்கலாம்! முக்தியை அடைவதற்கு,

இறை அருளை வேண்டி, சுலபமாக பக்தி மார்க்கத்தை பெறுவதற்கு, குருவின் அருள் கண்டிப்பாக வேண்டும். குருவின் மூலமாகவே, பக்தி மார்க்கத்தில் நாம் இறைவனை அடைய முடியும். இது நிதர்சன உண்மை. மற்ற யோக மார்க்கம், ஞான மார்க்கம், இவைகளை கடைபிடிப்பது மிகவும் கடினம். பக்தி மார்க்கமே மிகவும் உகந்தது. நாம் தேர்ந்தெடுத்திருக்கும் குருஜி ஸ்ரீ A.S. ராகவன், நம்முடைய பொக்கிஷம். பொக்கிஷம் என்றால் அதை பாதுகாக்க வேண்டும். அவர்கள் வரையறுத்து கடைபிடித்து நமக்கு கொடுத்த திருப்புகழ் இசைவழிபாடு என்பது ஒரு உயர்ந்த தத்துவம்.

இசையை சாதாரணமாக 4 வகையாகப் பிரிக்கலாம். சுருக்கமாகச் சொல்லுகிறேன். கீர்த்தனம், ஸங்கீர்த்தனம், நாம ஸங்கீர்த்தனம், திவ்யநாம ஸங்கீர்த்தனம் என்று திவ்ய நாம ஸங்கீர்த்தனத்தை எடுத்துக் கொண்டால், திவ்யநாம ஸங்கீர்த்தனத்தில் தோடய மங்களம்பாடி, விநாயகரிலிருந்து எல்லா கடவுள்களையும் துதித்து, பகவானை விளக்கு தீபத்தில் ஆவாஹனம் செய்து, 'ஹெச்சரிகராரா' என்று அழைத்து, 'உபசாரமுலு' என்று உபசரித்து, 'பூலசண்ட்லானனே' என்று விளையாடி, டோலோத்ஸவத்தில் பகவானை நித்திரை செய்யச் செய்து, திருப்பள்ளி யெழுச்சியுடன் மங்கள ஹாரத்தியுடன் முடிக்கிறோம்.

இசை வழிபாட்டை எடுத்துக்கொண்டால், திருப்புகழ் இசை வழிபாடு என்பது என்ன என்று கேட்டால், அந்த இசைவழிபாட்டில் முன்னே முழுமுதற்கடவுளான விநாயகரைத் துதித்து, குருவான அருணகிரிநாதரை வணங்கி, முருகனின் அறுபடை வீடுகளுக்குள் சஞ்சரித்து, தலம்தோறும் உள்ள முருகக் கடவுளை குன்றுதோறும் சென்று தரிசித்து, வாழ்வின் தத்துவமான பஞ்சபூதங்களை, திவ்யமான ஸ்தலங்களிலே வேண்டிக்கொண்டு, அனுபூதி, வேல், மயில் விருத்தங்கள் மற்றும் வகுப்புகளும் முருகன் புகழ் பாடி, பூஜை, நைவேத்தியம், எல்லாம் செய்து மனம் உருகப் பிரார்த்தனை செய்து, மங்கள ஹாரத்தி, சாந்தி கீதத்துடன் முடிக்கிறோம். இந்த இசை வழி பாட்டிற்கு, ஒரு உருவம் கொடுத்து உலவ விட்டிருப்பதற்கு குருஜி அவர்களுக்கு, நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். இதை பஜனை என்றில்லாமல், இசைவழிபாடாகச் செய்வதால் தான், மனம் உருகி உன் புகழ் பாடி, நான் உன்னை அன்புடன் ஆசார பூஜை செய்து, உன் அற்புத சீர்பாதம் மறவாமலிருக்க அருள்வாயே என்று ஜபித்து, மயிலு மாடி, நீயுமாடி வாராய், மனக்கவலை தீராய் என்று சுதந்திரத்தோடு வேண்டிக்கொண்டு, குன்று தோறும் குமரனுடைய அனுக்ரஹத்திற்கு பாத்திரமாகிறோம். மன அமைதி பெறுகிறோம். இந்த இசை வழி பாட்டின் முக்கிய அம்சம் என்னவென்றால், கடைசியில் நாம் கடை

பிடிக்கும் மௌனம். மன அமைதி வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்யும் மௌனம். பாரதியார் சொல்லியிருக்கிறார். துணிவெளுக்க மண்ணுண்டு எங்கள் முத்துமாரியம்மா, மனம் வெளுக்க வழியில்லை எங்கள் முத்து மாரியம்மா.

மனம் ஒரு குரங்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மனத்தை ஒரு நிலைப்படுத்தி, இறைவனின் தியானத்தில் ஈடுபடுபவர்களுக்கு, இசைவழிபாடு மிகவும் உதவியாக இருக்கிறது. அந்த முறையிலே, அதை வழிப்படுத்தி நமக்கு அளித்திருக்கும் நம் குருஜிக்கு, நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

குருஜி அவர்கள் அடிக்கடி கூறி வருவது - நாம் இந்த இசைவழிபாட்டைச் செய்வது உலக சமாதானத்திற்கும் அவிரோதத்தை வளர்ப்பதற்கும் - இது மிகவும் தன்னலமற்ற தத்துவம். இந்த சந்தர்ப்பத்திலே குருஜி அவர்களை வாழ்த்துவதற்கு எனக்கு வயதும் பற்றாது. அறிவும் பற்றாது. மேலும், காஞ்சி சங்கராச்சாரியாள், ஸ்ரீங்கேரி சங்கராச்சாரியாள், ரமணகேந்திரம் எல்லோரும் வாழ்த்துக்கூறிய பிறகு, நான் வாழ்த்துக் கூறுவது என்பது அர்த்தமே இல்லை. திருச்செந்தில் ஆண்டவன் கருணை அவருக்கு பரிபூர்ணமாக இருக்கிறது. நான் வேண்டிக் கொள்வதெல்லாம், அவர்கள் கண்டிப்பாக சதாபிஷேகம் காண வேண்டும். அந்த சதாபிஷேக நூற்றாண்டு விழாவில் பங்கு பெற நம் எல்லோருக்கும் இறைவன் அருள் புரிய வேண்டும்.

1997ல் Detroitல் ஒரு இசைவழிபாடு இருந்தது. அதற்கு Torontoவிலிருந்து 20 பேர் வந்திருந்தார்கள். குருஜிக்கு பின்னால் உட்கார்ந்து பாடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த இசைவழிபாடு முடிந்தவுடன் Madras அன்பர் ஒருவர் நீங்கள் நன்றாகப் பாடினீர்கள் என்றார். பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பதற்கு சிறந்த உதாரணம். அதில் அருள் இருப்பதற்கும் சிறந்த உதாரணம்.

இந்த சந்தர்ப்பத்திலே, இங்கு கூடியிருக்கும் சிஷ்யர்கள் முன்னிலையில் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன் கர்நாடக மாநிலம் சார்பாக முன்பு பேசிய விழாத்தலைவர் S.K. ராமனாதன் அவர்கள், இன்னும் 5 வருஷங்களில் குருஜியுடைய சதாபிஷேகம் வர இருக்கிறது. அத்துடன் 1958ல் ஸ்தாபிதமான திருப்புகழ் அன்பர்கள் இயக்கத்தின் பொன்விழா நடக்க இருக்கிறது. பவழ விழா சந்தர்ப்பத்தை சென்னை சிஷ்யர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். குருஜியின் சதாபிஷேக வைபவத்தையும், திருப்புகழ் அன்பர்கள் இயக்கத்தின் பொன்விழாவையும் ஏற்பாடு செய்ய கர்நாடக மாநில

சிஷ்யர்களுக்கு கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். It is only a suggestion. But the decision has to be made by central Committee. I am aware of it. ஆனால் எங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தால், அதை மிகவும் சிறப்புடன் நடத்திக் கொடுக்க கர்நாடக மாநில சிஷ்யர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை சிஷ்யர்கள் கடந்த 12 மாதங்களில் குருஜியின் பரணி நக்ஷத்திரத்திலே, ஒவ்வொரு மாதமும் இசை வழிபாடு நடத்தி, இதுவரை குருஜி அமைத்துள்ள 475 பாடல்களையும் பாடி, அஞ்சலி செலுத்தினார்கள் என்று கேட்க மிகவும் ஆனந்தமாக இருக்கிறது. இதைவிட ஒரு பெரிய குருவந்தனம் இருக்க முடியாது. இந்தக் கருத்தை சொன்ன சென்னை சிஷ்யருக்கும், அதை நடத்திக்கொடுத்த சென்னை விழாக்குழுவினருக்கும், கர்நாடக மாநில சிஷ்யர்கள் மூலமாக எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வளர்க திருப்புகழ் இயக்கம்! வாழ்க திருப்புகழ் சிஷ்யர்களின் இசைவழிபாடு தொண்டு! என்ற பிரார்த்தனையுடன் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

***

திரு. வ.சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்களின் மகள் திருமதி சசிவல்லி அவர்கள் உரையாற்றினார்கள். அவர்களின் உரை:

திருப்புகழ் குருஜி அவர்களுக்கும் மற்றும் இங்கு அமர்ந்துள்ள அனைவருக்கும், முதற்கண் என் அன்புகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தம் ஆதி இல்லா இறைவனுக்க அன்று அந்தாதி உரைத்தும், திருப்புகழ் பாமாலை சூட்டியும், பேரானந்த பெருவாழ்வு பெற்று வாழ்ந்தவர் அருணகிரிநாத ஸ்வாமிகள். அந்தத் திருப்புகழ் பாடல்களையும், இன் ஓசையும், பொருளையும் கேட்டு அறிந்தவர், அந்தப் பாடல்கள் எங்கே உள்ளன என்று அறிந்து, முயன்று, தேடி எடுத்து, அச்சிட்டு, அதனை உலகிற்கு நூலாக அளித்த பேராளர் வ.ச. சுப்ரமணியன் அவர்கள். அவர் எங்களது பாட்டனார் ஆவார். அவர் அறிய முனைந்து எடுத்த திருப்புகழ் நூல், அப்படியே தேங்கி நூல் வடிவில் இல்லாமல், அதில் உள்ள திருப்புகழ் அமுதை,

நங்கு சுவைபட, இசையோடும், ராகத்தோடும், தான் மட்டும் பாடி மகிழ்வதோடு அல்லாமல், அதை மற்றவர்களுக்கும் பயிற்றுவித்து, உலகெங்கும் திருப்புகழ் ஓசை பரவச் செய்து, அதன் வழி மக்கள் நல்வாழ்வு பெறும்படி, வாழ்வாங்கு வாழ்ந்து வருபவர்கள், இங்கு நம்மிடையே பவழவிழா காணும் திருப்புகழ் குருஜி ராகவன் அவர்கள் ஆவார்கள். அருணகிரி பெயர் வள்ளல் சொல்ல திருப்புகழ் வல்லவர் அவர்கள். அவரை இந்த சந்தர்ப்பத்திலே வாழ்த்த வேண்டியது, திருப்புகழ் குடும்பத்தாராகிய எங்கள் கடமையாகும்.

அன்னார் ஆல் போல் தழைத்து, பன்னெடுங்காலம் வாழ்ந்து மேன்மேலும் திருப்புகழ் ஓசை பரவச் செய்து வரவேண்டும் என்ற வேண்டுகோளோடு, நன்றி கூறி அமர்கிறேன்.

***

ஆன்மீகத்தைப் பற்றி நிறைய புத்தகங்கள் எழுதியுள்ள திரு. லக்ஷ்மி சுப்ரமணியன் அவர்களின் உரை:

இந்த விழா காணும் குருஜி அவர்களுக்கும் அவர் துணைவியார் அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 4 நிமிஷங்களுக்கு மேல் பேசமாட்டேன் என்று ஒரு உறுதிமொழி கொடுத்து, இந்த சிறிய உரையைத் தொடர்கின்றேன்.

குருஜிக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு உங்கள் எல்லோருக்கும் கிடைத்த அனுபவத்தைவிட சற்று வித்தியாசமானது. 5 ஆண்டுகளுக்கு முன்னால் நான் 'ஞானபூமி' பத்திரிகையில் பணியாற்றி ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த சமயத்திலே, அவர்கள், அவருடைய 70வது வயது ஆண்டு நிறைவு விழா, AVM கல்யாண மண்டபத்திலே நடந்தபோது, ஒரு விழாமலர் தயாரிக்க வேண்டுமென்று, என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். அப்போது, அவருடன் உட்கார்ந்து, நாள் தோறும் அந்த விழாமலரைப் பற்றி பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒரு வித்தியாசமான அனுபவம் அது. விழா மலரிலே, மற்ற படங்களைப் போடும் போது, குருஜி பேசாமல் இருந்து விடுவார். ஆனால், முருகனுடைய படம் போடும் போதெல்லாம், இங்கே ஒரு trace காகிதம் போடுவீர்களா என்று கேட்பார். அது சற்று வித்தியாச

மாக இருக்கும். நான் அவரிடம் கேட்டபோது அவர் சொன்னார். Sweet எல்லா இடத்திலும் கொடுக்கிறார்கள். ஆனால் பாதாம் அல்வா மாத்திரம் trace காகிதத்தில்தான் கொடுக்கிறார்கள் தெரியுமா உங்களுக்கு? அதேபோல், முருகனுடைய ருசியும் அனுபவமும் அவருக்கு ஒரு பாதாம் அல்வா. அவருடைய திருப்புகழ் பாடல்களையும், அவர் பாடுவதையும், நீங்கள் எல்லோரும் உடன் இருந்து பாடி ரசித்துக் கேட்டு இருக்கிறீர்கள். எனக்கு திருப்புகழ் தெரியாது. எனக்கு பாடவும் வராது. ஆனால், அவருடன் இருந்து அவர் பாடுவதை ரசித்து இருக்கிறேன்.

அது சற்று வித்தியாசமான அனுபவம். ''காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி'' என்று நாம் படித்திருக்கிறோம். அவர் பாடும்போதே, கண்ணீர் மல்கி அழ ஆரம்பித்துவிடுவார். நாம் எல்லாம் பாடினால், சற்று அழுவது போல இருக்கும். ஆனால் அவர் அழுவதுகூட பாடுவது போல இருக்கும். அவ்வளவு இனிமையாக பாடிக்கொண்டே யிருப்பார். பாடிக்கொண்டேயிருப்பவர், திடீரென 'யார் அது?' என்று ஒரு கூச்சல் போடுவார். அது ஒரு 'கர்ஜனை' என்னவென்றால், அங்கே யாரோ ஒருவர் வழக்கமாக அவர் சொல்லிக்கொடுத்ததற்கு மாறாக, பிசிறுபட கொஞ்சம் பாடுகிறார்கள் என்று அர்த்தம்-ஒரு நிமிடம் பாடமாட்டார் - மறுபடியும் பாட ஆரம்பிப்பார் - அது ஒரு செல்லமான கண்டிப்பு. உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவருக்கு கோபமே வராது. வந்தாலும், வந்த உடனேயே போய்விடும். அவருடைய பாடல்களை ரசித்து கேட்டுக்கொண்டு இருக்கும்போது, 3 மணி நேரம் 4 மணி நேரம் எல்லோரும் உட்கார்ந்து பாடிக்கொண்டிருப்பதை நான் பார்த்து வியந்து கொண்டிருக்கிறேன். ஏனென்றால் 4 மணி நேரம் ஒருவர் பாடினால்கூட, நம்மால் உட்கார்ந்து கேட்க முடியாது. ஆனால், நீங்களும் பாடுகிறீர்கள். அவரும் பாடுகிறார்- 4 மணி நேரம் கால் மடங்காது, விரியாது, உடம்பு அசையாது, எழுந்திருக்க மாட்டார். சோர்வு தெரியாது. பசி தெரியாது. அப்படியே அதில் மூழ்கிப் போய்விடுவார். இது பார்ப்பதற்கு ஒரு வித்தியாசமான அனுபவமாக இருக்கும்.

முடிவில், ஒரு முத்தாய்ப்பு வைப்பதுபோல், **முருகா முருகா முருகா முருகா** என்று கால் மணி நேரம் பாடுவார். முருகா என்று ஒரு

தடவை சொல்லலாம். 10 தடவை சொல்லலாம். கால் மணி நேரம் பாடினார். எல்லோரும் பாடினார்கள். மெய்மறந்து இருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போதும், கேட்கும் போதும், எனக்கு ஒரு வித்தியாச மான அனுபவம் மனத்தில் தோன்றுகிறது.

பஜனை சம்பிரதாயத்திற்கு, முதலில் விதை போட்டவரான ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு, ஸ்ரீ ரங்கத்திற்கு வந்திருந்தார். அவர் ஸ்ரீரங்கம் கோயிலிலே 'பகவத்கீதை' பற்றி சொற்பொழிவாற்றிக் கொண்டி ருந்தார். கூடவே பாடிக்கொண்டிருந்தார். ஒரே ஒருவர் மட்டும் ஒன்றும் செய்யாமல், பேசாமல், உட்கார்ந்து கொண்டிருந்தார். பாடி முடிந்தபின், அவரிடம் இறங்கி வந்து, அவரிடம் ஏன் இங்கு வந்து உட்கார்ந்தீர்கள்? ஒரு வார்த்தை பேசவில்லை. வாய்திறந்து பாட்டு பாடவில்லை. என்ன வித்தியாசமான அனுபவம். நான் பாடியது உங்களுக்குப் பிடிக்க வில்லையா? என்று கேட்டார். ஸ்வாமி! அப்படி சொல்லாதீர்கள். உங்களுக்குப் பின்னால் பகவத் கீதையின் அடையாளமாக பகவான் விஷ்ணு சக்கரத்துடன் உட்கார்ந்திருக்கும் படம் இருக்கிறது. அதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தச் சக்கரம் சுற்றிக் கொண்டே இருந்தது. அது எப்போது நிற்கிறதோ அப்போது நானும் பாடலாம் என்று நினைத்தேன், நிற்கவே இல்லை என்று சொன்னார்.

அதுபோல, குருஜி பாடும்போது நானும் கவனித்து இருக்கிறேன். எனக்கு திருப்புகழ் தெரியாது. தொடர்ந்து நீங்கள் பாடும் அனுபவம் தெரியாது. ஆனால் அங்கு முருகன் இருப்பது போன்ற ஒரு உணர்வு உண்டாகும். அந்த உணர்வு இருந்து கொண்டே இருக்கும் வரை, நாமும் அங்கேயே இருக்க வேண்டும் என்ற ஆசையும் உண்டாகும். அப்படிப்பட்ட ஒரு வித்தியாசமான அனுபவம் - பாடத் தெரியாதவர் களுக்கும் முருகனுடைய உணர்வை ஊட்டக் கூடிய அனுபவம் - பாடினாலும் பாடாவிட்டாலும், கண்டித்தாலும், பேசினாலும், முருகன், முருகன் என்று சொல்லி, கண்ணால் கசிந்து, கண்ணீர் மல்கி அழுது, அதன் மூலமாக நமக்கு 'முருகனை' உணர்த்திய பெருமை அவருக்கு உண்டு. முருகப் பெருமான் அன்று உலக முழுவதையும் ஒரு மாம்பழத்திற்காக சுற்றி வந்தார் என்ற கதை நம் எல்லோருக்கும் தெரியும். குருஜி கையிலே 'திருப்புகழ்' என்ற ஒரு இனிமையான பழத்தை எடுத்துக் கொண்டு உலகத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். அவருடைய புகழ் ஓங்குக! அவருடைய தொண்டு வளர்க! என்று கூறிக் கொண்டு விடைபெறுகிறேன்.''

***

சென்னை சிஷ்யை ஸ்ரீமதி கௌஸல்யா கவிதை வாசித்து அளித்தார். அவரது கவிதை:

ராக ராகவ மகிமை

பவளவிழா காணும் ஞானப்பழமே
தரணியில் புகழ் பெறுவதற் கென்றே
பரணி தாரகையில் அவதரித்த மகானே
உம்மை பெற்றெடுத்த பெற்றோர்கள்
முன்னம் அறிந்திருந்தனர் போலும்
பின்னம் இசைமேதையாக வளர்ந்து
உலகெங்கும் பெருமை சேர்க்கப்போகும்
தங்கள் குமாரருக்கு ராகவன் என்ற
பெயரை சூட்டினார்கள் போலும்
பெயருக்கேற்ப ராகங்கள் பலப்பல.
கட்டுக்கடங்கா காட்டாற்று வெள்ள மென
கடல் அலைகள் மோதிவருகின்ற எண்ணத்துள்ளே
நிகழ்வோடு வையத்துள் நிலைநிற்க வேண்டின்
அமிழ்தான திருப்புகழுக்கு ராகங்கள் அமைத்த
ஆற்றலெல்லாம் அவணிக்கு அறிமுகப்படுத்த
ஆறுமுகனின் அருள் பெற்ற மகானே
தான் இயற்றிய பாடலுக்கு
தானே இசை அமைக்க
குருநாதர் குருஜியாக பிறந்து விட்டாரோ? அறியேன்
ஒவ்வொரு பாடலின் பொருளுக்கேற்ப
ஒலிகள் பல படைத்து எவரும் பாடிபரவசமடைய
உம் உள்ளத்து பெருங்கடில் உதித்தெழுந்த ராகங்கள்
உமையாள் மைந்தனை உளம் உருகி பாடிட
பொங்கிவரும் வெள்ள மென அன்பர்கள் கூட்டம்

அலையென திரண்டு வர
உமது ராகங்களை உச்சரிக்கா உதடில்லை உள்ளமில்லை
பாரெங்கிலும் உமது ராக மகிமைகள்
பரவி நிலைத்து நிற்க பரமனின் அருள்பெற்ற மகானே
வாழ்க வாழ்க வாழ்க
நூறாண்டு காலம் வாழ்க
கோடிமக்கள் பாடி மகிழ ராகம் அமைத்தாயே
தகிட தகிட தனன தனன என்று தாளம் சேர்த்தாயே
மாசில்லாத அன்பர்கள் கூடிமால் மருகனை வழிபடுவோம்
மாண்புமிக்க மகானுக்கு வணக்கம் கூறுவோம்
வாழ்க வாழ்க வாழ்க

***

தமிழ்நாடு, கோயம்புத்தூர் வட்ட சிஷ்யர்கள் சார்பில் திரு. ஹரிஹரன் அவர்கள் பேசியது:

நமஸ்காரம், எல்லோரும் படித்தவர்கள். எவ்வளவோ புகழ் பெற்றவர்கள். எல்லோரும் சொன்னார்கள். பாமரன் என்ற முறையில், என்னுடைய அபிப்ராயத்தைச் சொல்லுகிறேன். என்னுடைய Driver கதிர்வேல் என்பவர். குருஜியை கோயம்புத்தூரில் அழைத்துப் போய்க் கொண்டிருந்தார். பிறகு திருச்சிக்கு அழைத்துக் கொண்டு போனார். கதிர்வேல் Driverஆகப் போனவர் ஒரு பக்தனாக திரும்பி வந்து விட்டார். போகும்போது என்னுடைய காரில் பலவித ஸ்டிக்கர்கள் இருந்தது. ஆனால் வரும்போது- ''குகன் உண்டு குறையில்லை, கந்தன் உண்டு கவலை இல்லை'' என்ற ஸ்டிக்கரை ஒட்டிக் கொண்டு வந்து விட்டான்.

அந்த அளவுக்கு ஒரு பாமரனை, நம் குருஜி ஈர்க்கிறார் என்றால், நாம் எல்லோரும் அவர் புகழ் பாடுவது ஒன்றுமே இல்லை. இதோடு நான் முடித்துக் கொள்கிறேன்.

***

திருவனந்தபுரம் சிஷ்யர்கள் சார்பாக
திரு. S.R.S. ஐயர் அவர்கள் பேசியது:

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஸ்ரீ குருஜி அவர்களே, திருமதி ஜானகி ராகவன் அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, அன்பர்களே, திருவனந்தபுரம் வாழ் திருப்புகழ் சிஷ்யர்கள் சார்பில், இவ்வரிய பவழவிழாவில் பேச முன் வருகிறேன்.

சித்ரகவித்துவ சத்தமிகுந்த அறுமுகவர் திருப்புகழை அமைதி யிலே ஓதவும், அதனூடே மக்களிடையே அன்பையும் அவிரோதத் தையும் பரப்பவும், அவனாலே நியமனம் செய்யப்பட்ட அருணகிரி பெருந்தகையின் மறு அவதாரமாகத் திகழும் நம் குருஜியின் மேன்மையைப் பற்றியோ, அவருடைய மகத்துவத்தைப் பற்றியோ, அவருடைய மேதாவிலாஸத்தைப் பற்றியோ, அவருடைய இசைத் தேர்ச்சியை பற்றியோ பேச எனக்கு வார்த்தைகளே கிட்டவில்லை. அப்படியே வார்த்தைகள் கிடைத்தாலும், அது கதிரவனின் முன் காண்பிக்கும் தீபத்தைப் போன்றும், அலைமோதும் கடலுக்கு இரண்டு கைகளாலும், அளிக்கப்படும் அர்க்கியம் போன்றும் மங்கிப் போகும். உததிமீதிலே சாயும் உலகமோடு சீர்பாத ஊனமூர்தி மறை மாமாயின னான பத்மநாபப் பெருமாள் அருள்பாலிக்கும் அனந்தபுரியிலே, நம் குருஜி இரண்டு தடவை விஜயம் செய்தபின் அந்த நகரில் திருப்புகழ் இயக்கத்திற்கு பெரிய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது அங்கே வரும் அன்பர்களுக்கு நன்றாகப் புரியும். மேன்மேலும் மாணவர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று திருப்புகழ் கற்க, மிக்க உற்சாகத்துடன் முன் வருகிறார்கள். அந்த ஆர்வம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டு இருக்கிறது. அந்த உயர்வுக்கு குருஜியின் பேரருள் தான் காரணம்.

தனிப்பட்ட முறையிலும் குருஜியுடன் பழகும் வாய்ப்பினை, கருணைக்கடவுள் கந்தன் எனக்கு அளித்து இருக்கிறான். பம்பாயில் இருக்கும்போதும், சென்னையில் இருக்கும்போதும், இப்போது திருவனந்தபுரத்தில் இருக்கும்போதும் அவருடன் பழகும் வாய்ப்பை கடவுள் எனக்கு கொடுத்திருக்கிறார். அப்போதெல்லாம், அவருடைய ஸௌலப்யத்தைப் பார்த்து நான் கண்கலங்கிப் போயிருக்கிறேன்.

"Grandeur of Thiruppugazh - the hallowed hymns of Arunagirinathar' என்ற என்னுடைய பாரதீய வித்யா பவன் பப்ளிகேஷனுக்கும், 'அறிபவரே வழிபடு ஆயிரம் நாமங்கள்' - அந்த தலைப்பே குருஜி கொடுத்தது - இந்த புத்தகங்களை compile பண்ணும்போது எனக்கு வழிகாட்டியாக இருந்தார்.

அனந்தபுரிவாழ் திருப்புகழ் சிஷ்யர்கள் சார்பிலும் என் சார்பிலும், நம் குருஜி அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத் தாண்டு, வாழ்ந்து, நமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல முருகப் பெருமானை வணங்கி விட்டு, திருவனந்தபுரத்தில் வாழக்கூடிய ஸ்கந்தப்ரியா திருப்புகழ் சிஷ்யர்கள் சார்பில் எழுதிக் கொடுத்திருக்கும் வாழ்த்துக்களை குருஜி அவர்களுக்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

வாழ்த்து

குந்தல வராளி **ஆதி**

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதான

திருப்புகழ் புகல இசைவழிபாடு தந்த
திருப்புகழ் மாமணி *குருஜி காண்*

நெல்லையிலே பிறந்து தில்லியிலே திகழும்
திரு ஏ.எஸ். ராகவன் *குருஜி... காண்*

அருணகிரி அருளிய அமுதமாம் திருப்புகழை
அறுமுகனருளா லிசைத்த *குருஜி...காண்*

நல்ல கர்நாடக இசையிலே மெட்டிட்டு
அன்பர் களுக்களித்த *குருஜி...காண்*

கடல் கடந்து சென்று கனடா அமெரிக்காவிலே
திருப்புகழ் பரப்பிய *குருஜி...காண்*

பவழ விழாவைத் தொடர்ந்து விழாக்கள் காண
பாஹுலேயனருளனும் *குருஜி...காண்*

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பத்னி ஜானகியோடு வாழணும் *குருஜி...காண்*

(திரு) அனந்தபுரத்தில் வந்து அருளமுதம் தந்திட
அழைக்கின்றோம் அன்பர்கள் *குருஜி...யே*

***

வெளிநாட்டிலுள்ள குருஜியின் சிஷ்யர்கள் சார்பாக, சிகாகோவிலிருந்து வந்துள்ள திரு R.V. DURAI பேசியது

"குருர்ப்ரம்மா குருர்விஷ்ணு குருர்தேவோ மஹேச்வர:।
குருஸ்ஸாக்ஷாத் பரப்ரம்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥

As one lamp lights another glows no less, nobleness enkindeth nobleness!

This has been written by one John Milton in his poem called Pilgrims's Progress; that very much suits our Guruji. Guruji has lit many a chapter lamps, and one of them is Chicago Chapter of Thiruppugazh disciples. In the year 1997- it is a memorable year for Chicago Chapter - Poojya Guruji visited Chicago in that year. He not only came to Chicago, but also visited many places and conducted Thiruppugazh Isai Vazhipadu and he stayed in Chicago for more than a fortnight, to teach us some of the excellent Thiruppugazh compositions of Arunagirinathar set by him in music and thala. We were benefited very much by his able teachings and he was instrumental for and let 'Skanda Shashti Vizha', on November 9th and also 'Valli Thirumanam' next day. During his stay with us, he was so simple. He accepted our hospitality in all grace and never demanded anything out of the way. He was so congenial and we are very much thankful to him. We cherish even today, the fond memories of how he stayed with us, ate lunch with us and dinner too and conducted Thiruppugazh Isai Vazhipadu at every home and taught us some of the songs, which we still memorise, and 'ஒருருவாகிய' was one of the songs taught by Guruji himself to us.

A small note about Chicago Chapter. It was started in 1992 and one of the first teacher was Radha Shivakumar who happens to be the daughter of Sri S.R.S. Iyer who spoke before. We have two excellent teachers - Smt. Poorna Sethuraman & Smt. Soumya Kumar. Both of them are daughters of "Kathadi' Ramamurthy. They teach in the midst of their pressing time, every alternate Friday. The Friday class is a kind of gathering, where we transact so many good things between us. We feel a sense of comradere and that give us lot of happiness and bliss. Of course, Guruji's blessings are always there with us and we thank Guruji for all the blessings he has conferred on us.

***

One of the oldest members Sri Shiva Sankaran has written a small commemorative note for Guruji as follows:

வாழ்க வளமுடன் ! 75வது பிறந்தநாள் விழா வாழ்த்து மடல்

செந்தமிழ்க் கடவுளாம், செந்தூர் முருகனின் புகழ்பாடும் ஸத்குரு அருணகிரிநாதரின் பக்திபாமாலையாம், திருப்புகழ் தொகுப்பை இனிய இசையிலே, சிறப்பாக அமைத்து, பாரெங்கும் பக்தர்கள் பாங்காய் பாடவே, தன் இனிய வாழ்க்கையையே அற்பணித்த திருப்புகழ் குருஜி திரு ராகவன் அவர்கள் நீவிர் என்றென்றும் நல் உடல் நலத்துடன் இல்லற வாழ்க்கையும் கண்ணும் இமையும் போலவே உறுதுணையாக வாழ்க்கை நடத்திடும் அன்பு மனைவியாம் திருமதி ஜானகி அம்மையாருடன் நீண்ட ஆயுளுடன் இருவரும் நலமும் வளமும் பெற்று, ஆயிரம் பிறைகண்டு சதாபிஷேகமும் - நூற்றாண்டு வாழ்த்து, கனகாபிஷேகம் இனிதே கொண்டாடிட, எல்லாம் வல்ல இறைவன் செந்திலாண்டவன் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் துணை நின்று பாதுகாத்து வழி நடத்துவாயாக! முருகன் அருள் என்றென்றும் பொழியவேண்டும் என்றும் பிரார்த்திக்கொள்கிறோம்.''

***

சென்னை சிஷ்யை திருமதி பிரேமா வெங்கடராமன் அவர்கள் கவிதை வாசித்து அளித்தார்கள் அவரது கவிதை:

1. *சற்குரு அருணகிரிக்கு குகனே குருவானார்*
சற்குரு அருணகிரியை குருவாய்த் தாம்கொண்டு
நற்குருவாய் நமக்கவரின் திருப்புகழக் கிசைகூட்டி
*நம் குருஜி அருளினார் **திருப்புகழ் இசைவழிபாடு***

2. *இராகவனார் திருமருகனை மனதில் ஏற்று*
இராகமெலாம் இறையருளால் மனதில் பெற்று
இராப்பகலாய் லயமமைத்து ரசனையுடன் தொகுத்து
*இராகவனார் அருளினார் **திருப்புகழ் இசைவழிபாடு***

3. *சற்றேனும் சோர்வின்றி அயர்வின்றி சலிப்பின்றி*
பொற்பாத சரணமன்றி மற்றேதும் நினைவின்றி
நாற்றிசையும் நல்லுலகும் நாள்தோறும் பயனுறவே
*நற்றவமாய் அருளினார் **திருப்புகழ் இசைவழிபாடு***

4. சந்தமிகு திருப்புகழின் பொருளேதும் சிதையாமல்
உந்திவரும் உள்ளுணர்வால் உரியபல மெட்டமைத்து
கந்தனவன் பெரும்புகழைக் கருத்தோடு பாடிடவே
தந்தருளினார் நந்தமக்கு **திருப்புகழ் இசைவழிபாடு**

5. இசையமைக்கும் எங்களினிய குருவுக்கு வந்தனம்
இசைந்து கற்பிக்கும்உம் கருணைக்கு வந்தனம்
இயக்கிநற் பணியிலெமை ஈடுபடுத்தும் உங்கள்
இறைப்பணிக்கு வந்தனம் இறைவனுக்கு வந்தனம்

பல்லவி

சிறப்புடைய குன்றுகளில் சரவணனின் ஆட்சி
திருப்புகழில் இருக்குதய்யா அவனுடைய மாட்சி

சரணங்கள்

1. பிறப்பறுக்கும் பெம்மானைப் போற்றுவதே இன்பம்
கருத்துடனே கந்தன்உரு சிந்திப்பதும் இன்பம்
வருத்தமெலாம் போக்கிவிடும் வண்ணமயில் வாகனன்
முருகனவன் நாமம்மூச்சில் ஓடுவதே இன்பம்.

2. படிதோறும் பாடிடவே திருப்புகழைத் தந்தவனை
நெடிதான புவிவாழ்வில் வழிகாட்டும் ஐயனை
அடியாரின் குறைகருதும் அருணகிரி நாதனை
குருவாக ஏற்றுகுகனை கும்பிடுவ தின்பம்.

3. அருணகிரி நாதன்தந்த அற்புத நற்செல்வத்தை
அருமையான ராகமதில் அநுபவித்து அமைத்திட்டு
அநுதினமும் நாம்பாடும் திருப்புகழ்இசை வழிபாட்டை
(நம்)குருஜிதந்த மெட்டுக்களில் பாடுவதே இன்பம்

4. துள்ளுமயில் வாகனனின் தூயநல்ல ஆசிகளை
வெள்ளமென வந்திருக்கும் அன்பரெலாம் கூடியே
வெள்ளி, தங்கம் பவழம் என்ற வரிசையிலே நம்குருஜி
வைரவிழா கண்டிடவே வேண்டுவதே இன்பம்.

சிறப்புடைய குன்றுகளில் சரவணனின் ஆட்சி
திருப்புகழில் இருக்குதய்யா அவனுடைய மாட்சி
அதை குருஜி தந்த மெட்டுக்களில் பாடுவதே சாட்சி.

***

சென்னை - கல்பாக்கம் சிஷ்யர்கள் சார்பாக திரு. அய்யப்பன் அவர்கள் பேசியது:

வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா! குருஜி வாழ்க! குருஜியே துணை. கல்பாக்கம் சிஷ்யர்களுக்காக, குருஜி ஒவ்வொரு வருஷமும் கல்பாக்கத்துக்கு வந்து, திருப்புகழ் வகுப்புகளை எடுத்து, திருப்புகழை அங்கு இருக்கும் சிஷ்யர்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுத்து, ஒரு பெரிய ஆன்மீகப் பணியினை செய்து, கல்பாக்கம் சிஷ்யர்கள் எல்லாம் அந்தத் திருப்புகழ் பாட ஈடுபடும்படி செய்தார்கள்.

எனக்கு மனதிலே ஒரு கவலை இருந்தது. கல்பாக்கத்திலே வேலை பார்க்கிற ஆண்கள் மட்டும்தான் வகுப்பிற்கு வருகிறார்கள். பெண்கள் வரவில்லையே என்று கவலையுடன் குருஜியிடம் சொன்னேன். அவர்கள் சொன்னார்கள் - 'நீங்கள் சம்பளம் வாங்கி மனைவியிடம் கொடுக்கிறீர்கள். அவர்கள் அந்தப் பணத்தை என்ன என்ன எப்படி எப்படி செலவிட வேண்டுமென்று தீர்மானித்து செவ்வனே செய்து முடிக்கிறார்கள். அதே மாதிரி, இந்த திருப்புகழ் என்ற சொத்து, அந்த மகளிர் கையில் போனால், அவர்கள் அதை நல்ல வழியில் பயன் படுத்துவார்கள். அந்த வகையில் கல்பாக்கத்தில் நிறைய பெண்கள் திருப்புகழ் பாட வருவார்கள்' என்று. அன்றைக்கு அவர் செய்த ஆசீர்வாதம் இன்று நான் Retire ஆகி கல்பாக்கத்தைவிட்டு வந்த பிறகும் கூட, இன்றைக்கு 25-30 மகளிர், திருப்புகழ் கார்த்திகேயன் அவர்கள் சொல்லிக் கொடுத்து, திருப்புகழ் கற்றுக் கொண்டு, அழகாகப் பாடுகிறார்கள். குருஜி அருளால் அன்றைக்கு சொல்லிக் கொடுத்ததை, செந்திலாண்டவன் அருளால் இன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறார்கள். இது ஒரு பெரிய அதிசயமான நிகழ்வு.

பிறகு குருஜி அவர்கள் சொல்வார்கள். நன்றி மறவாமை. எப்படி அருணகிரிநாதர் பரப்பிய திருப்புகழில் 'நான் மறவேனே மறவேனே' என்றெல்லாம் சொல்வார்கள். அப்படி நாம் ஆண்டவனுடைய புகழ் பாடும் போது, அவர் நம்முடைய கஷ்டங்களை நிவர்த்திக்கும்போது, அந்த நன்றிமறவாமல் இருக்கும் போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்று குருஜியிடம் பேசும்போது வெகு அழகாகச் சொல்வார்.

இந்த ஆண்டவனிடம் நாம் பணம் காசுதான் கேட்க முடியுமா? அல்லது ஆண்டவன் பணம் காசுதான் கேட்கிறானா? இல்லையே! இந்த நன்றியை எப்படி செலுத்துவது? நாம் அதிகம் அதிகமாக திருப்புகழ் பாடித்தான் நன்றி செலுத்த முடியும். அந்த வகையிலே, குருஜி எனக்கு ஒரு பெரிய உபதேசமாக அருளியதை, உங்களுக்கும் சொல்லிவிட்டு, திருப்புகழ் எல்லோரும் பாடணும், திருப்புகழ் பாடுவதால் நமக்கு என்ன கிடைக்கும். எல்லாமே கிடைக்கும் என்பது எல்லோருக்கும் தெரியாதது ஒன்றும் அல்ல- கிடைக்காதது ஒன்றுமில்லை, என்று கூறி விடை பெறுகிறேன்.

***

சண்டிகர் நகர் சிஷ்யர்கள் சார்பில் திரு. K. சேகர் அவர்கள் பேசியது:

1985-ம் ஆண்டு பஞ்சாப் மாநிலம் தீவிரவாதத்தில் மனம் கலங்கி, அபயம் அபயம் என்று அறைகூவல் விடுத்தபோது, தாங்கள் இதயம் கனிந்து, தேவஸேனாபதி ஸ்ரீமுருகனை துணைக்கு அனுப்ப ஸங்கல்பம் செய்தீர்கள். எப்பெருமானை எழுந்தருளச் செய்யும் வழி திருப்புகழ் வழியே என்று கூறி சிறுவர்களும் மற்றவர்களும், திருப்புகழை முறைப்படி கற்றுப் பாடி, மாசிலடியார்களாக மாற ஒரு கூட்டத்தையே அனுப்பிவைத்தீர்கள். செவ்வாய்தோறும் திருப்புகழ் இசை வழிபாட்டைத் தொடங்கி வைத்தீர்கள்.

சண்டிகர் நகரத்தில் முருகனுக்கு ஆலயம் கட்ட வேண்டும் என்ற பேரவாவை எல்லோர் இதயத்திலும் விதைத்தீர்கள். பலமுறை சண்டிகர் வந்திருந்து, திருப்புகழ் இசைவழிபாடு நடத்திவைத்து, நம்பிக்கை நீர் பாய்ச்சினீர்கள். எல்லோர் கனவும் நனவாகி, 1992-ம் வருஷம் கரர்த்திகேய ஸ்வாமியின் ஆலயம் உருவாகி, மஹா கும்பாபிஷேகம் அன்று பெய்த பெருமழை, உங்கள் கருணை மழை அன்றோ!

கோவிலை முறைப்படி நடத்த நல்லறிவை வழங்கினீர்கள். திருமுருகனுக்கு, வெள்ளிவேல், வெள்ளிகிரீடம் சாத்தும்போதும் மற்றும் பல வைபவங்கள் நடந்தபோதும், வந்திருந்து எங்களுக்கு நல்லாசி வழங்கினீர்கள். 10 நல் ஆண்டுகள் கழித்து, 2002-ம் ஆண்டு புனருத்தாரண கும்பாபிஷேகம் நடந்தபோது வந்திருந்து, முன்னணியில் நின்று, எல்லா வைபவங்களையும், வள்ளி திருமணம், திருப்புகழ் இசைவழிபாடு நடத்தி, இந்த கந்தன் கோயில் உங்கள் சொந்தக் கோயில் என்று காட்டிய கருணைக்கு, கடலெனப் பெருகும் எங்கள் கண்ணீர் எம்மாத்திரம். முறைப்படி கோயில் பூஜையை நீங்கள் காட்டிய வழியில் இன்று வரை நடத்தி வருகிறோம். தொடர்ந்து முருகன் பணியை சிறப்புறச் செய்வோம் என்று உறுதி கூறுகிறோம். பவழவிழா காணும் பெருந்தகைக்குக்கும் வடகோடியில் சண்டிகரில் வாழும் எங்களுக்கும், உங்கள் இதயத்தில் ஒரு கோடியில் இடம் கொடுத்தமைக்கு நன்றி, நன்றி ஐயா!

வாழிய நீவிர் நூற்றாண்டு! வாழிய உன் புகழ் திருப்புகழ் உள்ளளவும்! சண்டிகர் முருகனுக்கு அரோஹரா!!!

***

அனுக்ரஹ பாஷணம்

குருஜி அவர்கள், மண்டபத்தில் குழுமியுள்ள திருப்புகழ் சிஷ்யர்களுக்கு அளித்த 'அனுக்ரஹ பாஷணம்'

குருவந்தனம் ஆரம்பிக்கப் போறது. அருணகிரிநாதருடைய படைப்புகளெல்லாம் உலகெங்கும் பரவ வேண்டும் என்று ஒரு கருணை உள்ளத்தோடு, அந்த தக்ஷிணாமூர்த்திக்கும் குருவாக விளங்கும் சற்குருநாதன், பல திருவிளையாடல்களைப் பண்ணி, எவ்வளவோ அன்பர்களுடைய உள்ளத்திலே எல்லாம் இருந்து, அவர்களை எல்லாம் திருப்புகழ் பாடவைத்திருக்கிறான். அந்த குருவாக இருக்கக்கூடிய ஸ்வாமினாதனுக்கு வந்தனம் செய்வதற்குத்தான் நாம் எல்லோரும் இங்கு கூடியிருக்கிறோம். அந்த குருவிற்கு வந்தனம் செய்யும் பொழுது - ஸ்வாமினாதன் குரு - அவன் நமக்கு செய்த கருணை, அவன் நமக்கு போதித்த தத்துவங்கள், உபதேசங்கள், எல்லாம் அருணகிரிநாதரின் மூலமாக நமக்கு கிடைத்திருக்கிறது. அந்த அருணகிரிநாதருக்குச் செய்யக்கூடிய குருவந்தனம்.

அந்த முருகனுடைய கருணையை பாராட்டி பாடும் பொழுது, மனதிலிருக்கக்கூடிய கவலைகள், சஞ்சலங்கள், எல்லாவற்றையும் அறவே அகற்றி, சுத்தமான மனத்தோடு அந்தத் திருப்புகழ் பாக்களில் லயித்து, அந்த திருப்புகழ் சொற்களையெல்லாம் மனதிலிருத்தி, அந்த திருப்புகழ் பாடல்களையெல்லாம் பாடினோமானால், அந்த ஸ்வாமி னாதனுக்கு மிகவும் போற்றக்கூடிய அர்ச்சனையாக இருக்கும். வந்தன மாக இருக்கும். ஆகவே, உங்களையெல்லாம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் - என்னையும் சேர்த்து. எவ்வளவுக்கெவ்வளவு ஆரம்பத்தி லிருந்து கடைசி வரை அமைதியைக் கடைபிடிக்க முடியுமோ, அந்த அமைதியோடு ஆண்டவனுடைய திருப்புகழ் பாக்களையெல்லாம் நாம் பாடுவோம். அப்படிப் பாடினால்தான், ஆண்டவனுக்கு உண்மையில் செய்த வந்தனமாக இருக்கும். அந்த ஸ்வாமினாத குருவுக்குச் செய்த வந்தனமாக இருக்கும். ஆகவே, பாடும் பாட்டிலே மனதை செலுத்தி, பாடும் பாட்டிலே உள்ள பொருள்களையெல்லாம் மனதிலே தெரிந்து, அந்த பாக்களை எல்லாம், பாவத்தோடு ஆண்டவனுக்காகப் பாடுகிறோம். ஆண்டவனுக்கு வந்தனம் செய்வதற்காக வழிபாடு செய்கிறோம், என்ற நினைப்பிலே நாமெல்லாம் பாடுவோமானால், அது நாமெல்லாம் திருப்புகழுக்கு செய்யக்கூடிய பெருமையாக இருக்கும்.

இப்போது இசைவழிபாடு ஆரம்பிக்கப்போகிறது. நீங்கள் எல்லாம் பாடப்போகிறீர்கள். உங்களுடன் சேர்ந்து நானும் பாடுவேன்.

குருவந்தனத்திற்குப் பிறகு குருஜி அனுக்ரஹபாஷணம் (தொடர்ச்சி) :

வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா! வழிபாடு ஆரம்பத் திலே சொன்னபடி, எல்லாம் வல்ல குருநாதனாக விளங்கக்கூடிய முருகன், தன் தந்தைக்கு உபதேசம் செய்த குருநாதனாக, தகப்பன் ஸ்வாமியாக அந்த குருநாதன் நம்முடைய உள்ளத்திலெல்லாம் அமர்ந்து, நம்மை யெல்லாம் திருப்புகழ் பாடவைத்தான் என்றால், அந்த குருநாதனுடைய பெருமை எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. அந்த குருநாதனைத் தேடித்தான் பலபல கோயில்களுக்குச் செல்கிறோம். பல பல இடங்களுக்குச் சென்று, அந்த குருநாதனைக் காண விழைகிறோம். அறுபடைவீடுகள்-திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி (பழனி மலை), ஸ்வாமி மலையிலே இருக்கக்கூடிய ஸ்வமினாதனை இவ்வளவு கோவில்களிலேயும் தேடுகிறோம். ஸ்வாமி மலையிலேயும் மற்றும் திருத்தணி முதலான பல ஸ்தலங்களிலும் சென்று, அந்த ஸ்வாமினாதனைத்தேடித் தேடி, அவனைக் காண விழைகின்றோம். அவனைக் காண்பதற்கு, அவனை பார்ப்பதற்கு, அவனை தரிசனம் செய்வதற்கு, நம் உள்ளத்திலிருந்து திருப்புகழ் பாட வைத்தான்.

உங்களுக்கெல்லாம் தெரியும். முன்பெல்லாம் நாம் கோயிலுக்குப் போனால், வெறுமனே ஸ்வாமிக்கு முன்னால் நின்று பார்த்துவிட்டு வந்துவிடுவோம். இப்போது எந்த முருகன் கோயிலுக் குப் போனாலும், அந்த க்ஷேத்திரத்தில் உள்ள திருப்புகழை வாயாறப் பாடி, மனமாற அந்த திருப்புகழ்ப் பாக்களை எல்லாம் பாடும்படியான ஒரு லீலையை ஆண்டவன் செய்தான் என்றால், அந்த குருநாதனுக்கு எவ்வளவு கைம்மாறு நாம் செய்ய வேண்டும். அந்த குருநாதன் உலகுக் கெல்லாம் ஒரு நல்வழி காட்டவேண்டும். எல்லோரும் அந்த நல்வழியிலே ஒழுகவேண்டும் என்ற அந்த ஒரு ஒரு உள்ளத்தோடு, ஏதோ ஒரு பக்தனைத் தேடி, அவன் மூலமாக அந்த நல் போதனை களையெல்லாம் உலகுக்கு எடுத்துச் சொல்ல விழைந்தான்.

அதன் காரணமாகத்தான் அருணகிரிநாதர் 600 வருஷங்களுக்கு முன் தோன்றினார். 600 வருஷங்களுக்கு முன்னால் இருந்த அந்த அருணகிரிநாதரை ஆண்டவன் ஆட்கொண்டான். அவன் மூலமாக திருப்புகழை உலகுக்கு அளித்தான். அந்தத் திருப்புகழ் அருணகிரி நாதரால் பாடப்பட்டதாக இருந்தாலும், முருகனுடைய வாக்காக, அவனுடைய உள்ளத்திலே இருந்து நமக்கு எல்லாம் கிடைத்தது. அந்தத் திருப்புகழ் - அதைத்தான் அருணகிரிநாதர் சொல்லுகிறார் - ‘பெருத்த வசனம்’ என்று - மகாவாக்கியமாக திகழக்கூடிய அந்த திருப்புகழ் - எப்படி நாலு வேதங்களுக்கும், சுருக்கமாக ஸகலத்தையும்

அடக்கி வைத்து, மஹாவாக்கியமாக நாலு வாக்கியங்கள் இருக்கிறதோ, - அஹம்ப்ரம்மாஸ்மி, தத்வமஸி என்றெல்லாம் - அந்த மஹாவாக்கியங்களாக வேதங்களையெல்லாம் உள்ளடக்கித் திகழக் கூடியது ஆண்டவனுடைய திருப்புகழ். அது எவ்வளவு உயர்ந்தது என்று, அதைப்பாட, பாட, பாடத்தான் நமக்குத் தெரியும். அந்தப் பாட்டிலே என்ன இருக்கிறது, என்ன இல்லை என்று ஒருவராலும் சொல்லமுடியாது. எல்லாமே இருக்கிறது. உலகத்திலுள்ள சுவைகளையெல்லாம் தன்னிடத்திலே அடக்கிக் கொண்டிருக்கிறது. அடியவருடைய மனத்திலே இருக்கக்கூடிய மாசு மறுக்களையெல்லாம் அகற்றி, அந்த மனத்தை சுத்தப்படுத்தி, அந்த மனத்தை வாட்டக்கூடிய பகைவர்களையெல்லாம் விரட்டி அடித்து, அந்த மனத்தை தூயதாக்கி, அந்தத் திருப்புகழ் பாக்களைப் பாடிப்பாடி, அந்த மனத்தை தனதாக்கிக் கொள்கிறார் அந்த குருநாதன்.

அப்பொழுது நம்மைப் பாடவைத்த அந்த குருநாதனுக்கு நாம் எல்லாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? ஒன்றுபட்டு இருந்து பாடுவதுதானே. எவ்வளவோ பல அன்பர்களைத் தோற்றுவித்தான். அவர்களையெல்லாம் பாடவைத்தான். அவர்களுக்கு பாட தெரியுமோ தெரியாதோ, - அவர்களை எல்லாம் பாடவைத்தான். ஆண்டவன் நினைத்தால் நடக்காதது ஒன்றுமே கிடையாது. உள்ளம் ஒன்றி அந்த ஆண்டவனை நினைத்துவிட்டால், அவன் நம்மைப் பாடவைப்பான். ஆடவைப்பான். உருகவைப்பான். உள்ளம் எல்லாம் உருகி, அந்த முருகனுடைய உள்ளத்தோற்றத்தை, அந்த பரம்பொருளைக் காண வைப்பான். அதைத்தான் சொல்லும்பொழுது - திருப்புகழ் பாக்கள் என்ன செய்யும் - பாடிப்பாடி உள்ளத்தை உருக்கி, அந்த உள்ளத்தோடு தன்னை மறந்து பாடக்கூடிய அந்தத் திருப்புகழ்ப் பாக்களை பாடிவந்தோமேயானால், நம் உள்ளத்திலே நினைத்தது எல்லாம் நடக்கும் - அதைத்தான் சொல்லுவார் - ''நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும், நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்'' - திருப்புகழ் பாடக்கூடியவர்களுடைய மனத்தில் நினைத்தது எல்லாம் நடக்கும் என்று அனுபவபூர்வமாக நாம் அறிந்துகொள்ள முடியும். அதை எவ்வளவோ இடங்களில் நான் பார்த்து இருக்கிறேன். நினைத்தால் உடனே வரக்கூடிய அந்த தெய்வம், நினைத்தால், உடனே அந்த நினைத்த காரியத்தை செய்துவைக்கக்கூடிய முருகன். அந்த திருப்புகழ் பாக்களையெல்லாம் பாடினால் நம் மனத்தை எல்லாம் உருக்கிவிடும்.

அதுதான் அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி பாடும்போது - ''நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்(து) உருகத்.., செஞ்சொல் புனை மாலை

சிறந்திடவே'' - சிறந்ததான செந்தமிழ்ப்பாமாலை ஆண்டவனுக்குச் சூட்டினார். அது எதற்காக என்றால் - நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்து உருக - அப்பொழுது ஆண்டவனுடைய திருப்புகழ் பாக்களை பாடும் போது, நம்முடைய நெஞ்சமெல்லாம் உருகவேண்டும். நம்முடைய நெஞ்சத்திலுள்ள அழுக்குகளெல்லாம் அகல வேண்டும். அருணகிரி நாதர் நம்மை தாழ்ந்த நிலையிலிருந்து, உயர்ந்த நிலைக்கு, நம்மை கொண்டு செல்கிறார் என்றால், அது திருப்புகழ்ப் பாக்களை நீங்கள் பாடிப்பார்த்தால் தெரியும். முதலிலே, ஆண்டவனுடைய நாமங்களைச் சொல்லுங்கள். நாமங்களை சொல்லி சொல்லி, சொல்லி, சொல்லி மனதைப் பக்குவப்படுத்துங்கள். மனத்திலே, ஒரு பக்தியை ஏற் படுத்திக் கொள்ளுங்கள். அந்த பக்தியினாலே, ஆண்டவனுடைய புகழையே பாடுங்கள். அந்த புகழ் பாடுவதனாலே, உங்கள் மனதானது விடுபட்டுவிடும். ஆசையற்ற நிலை அடைந்துவிடும். முக்தனாக ஆக்கிவிடும். அப்படி உயர்ந்த திருப்புகழைப் பாடவேண்டும். பக்தியோடு பாடணும். பாவத்தோடு பாடணும்.

அருணகிரிநாதர் சொல்லுவார் - ஏன் பாடணும் - எதற்காகப் பாடணும் என்று கேட்டுக் கொண்டே பாடணும். பாடும்போது நான் எதற்காக பாடுகிறேன்? 10 பேர் பாடி சபாஷ் சொல்வதற்காகவா? இல்லை, நான் பாடற ராகத்திலே, ஆஹா! என்ன அழகாக 'தோடி' பாடிட்டேன் அப்படின்னு சொல்லும்போது, என்னுடைய தலை நிமிர்ந்து நிற்கவா? இல்லை, பாடி பொருள் தேடுவதற்காகவா? என்று பல கேள்விகளை எழுப்பிக்கொண்டு நீ பாடுவாயானால், அந்தத் திருப் புகழைப் பாடிப்பாடி, ஆண்டவனை நினைத்து கொண்டிருப்பவர் களுக்கு அந்த வினாவுக்கு விடை கிடைக்கும். இந்தத் திருப்புகழை எதற்காகப் பாடுகிறோம் என்ற வினாவுக்குத் தகுந்த விடை கிடைத்து விடும். ஆண்டவனே! உன்னைப்பாடுவதால், என்னுடைய மனத்தில் உள்ள அழுக்குகளெல்லாம் போய், எனது மனது துயறறவேண்டும், வினைகள் சிதறிட வேண்டும், மதன பிணியோடு கலைகள் சிதறிட வேண்டும். மனது பதமுற வேண்டும் - இதற்காகத்தான் திருப்புகழ் பாடுகிறேன் என்று ஒரு விடையும் நமக்குக் கிடைத்துவிடும். அது மட்டுமல்ல. மனத்தை உருக்கக்கூடிய அந்த திருப்புகழ் - நிசிக்கரு அறுக்கும் பிறவாமல் - கருவை அறுத்துவிடும். நெல்லை பச்சை நெல்லாகப் போட்டால் விளைந்துவிடும். அதை வறுத்துப்போட்டால் விளையாது. ஆகவே, இந்தக்கரு பசுமையாக இருக்கும் வரை, பிறப்பு வந்துகொண்டே இருக்கும். அந்த பசுமையான கருவை வறுத்துவிடும் அந்த திருப்புகழ். அப்போது வறுத்துவிட்ட நிலையிலே, அந்தக் கருவிற்கு மறுபிறப்பு கிடையாது. நெருப்பையும் எரிக்கும், பொருப் பையும் இடிக்கும், நிறைப்புகழ் எல்லாம் நிறைந்தது. நெருப்பை

எப்படி எரிக்க முடியும் என்று கேட்டால், அதற்கு விளக்கம் அருணகிரிநாதர் நமக்குத் தருவார். நமக்கு உள்ளே இருந்து எழக்கூடிய கோபங்கள் எல்லாம் நெருப்பு போன்றது. ஒருவருக்கு கோபம் வந்து விட்டால், உடலெல்லாம் சூடாகிவிடுகிறது. கண் எல்லாம் சிவந்து விடுகிறது, சூடு ஏறிப்போகிறது. ஆகவே, இந்த நெருப்பாயிருக்கிற கோபத்தை எல்லாம், மறுபடியும் அதை அரித்து சாம்பலாக்கிவிட வேண்டுமேயானால், அதற்கு திருப்புகழ் நமக்கு உதவுகிறது. திருப் புகழ் பாடுபவர்களுக்கு கோபம் இருக்கக்கூடாது. பொருப்பையும் இடிக்கும் என்று ஒரு வார்த்தை போட்டார். பொருப்பு என்றால் மலை. மலை என்றால் கல். கனமாக இருக்கக்கூடிய மலை - நம்மிடத்திலே அந்த மலை இருக்கு அந்த மலையையும் பொடிபடுத்த வேண்டும். அந்த பொருப்பை இடித்து, பாழ்பட்டு அது தூளாக வேண்டுமே யானால், திருப்புகழ் நமக்கு உதவ வேண்டும்.

நமக்கு மலையாக இருக்கக்கூடியது கனம். மலை எவ்வளவு கனமாக இருக்கிறதோ, அவ்வளவு கனம் நம்மிடம் இருக்கிறது. நம்முடைய தலையெல்லாம் கனத்துவிடுகிறது - ஆணவத்தினாலே - நான் பாடுகிறேன். என்னால்தான் இவ்வளவு கூட்டம் வருகிறது. என்னால்தான் இவ்வளவுபேர் பாடுகிறார்கள் - அப்படி ஒரு ஆணவம். இல்லை என்றால், நான் பாடப்போகிறேன், நான் செய்கிறேன் - இந்த இரண்டும் ஆணவத்தை நமக்கு ஏற்படுத்துகிறது. இந்த ஆணவத்தை யெல்லாம் பொடிபடுத்தவேண்டுமேயானால், திருப்புகழ் பாக்கள் நமக்கு உதவ வேண்டும். எப்போது நாம் நமது ஆணவத்தை இழக் கிறோமோ, ஆணவத்தை பொடிபடுத்துகிறோமோ, அப்போது திருப் புகழ் பாக்களிலே இருக்கக்கூடிய முருகன், முருகனிடத்தில் இருக்கக் கூடிய அந்த பரம்பொருள் சத்தையெல்லாம் நாம் பார்க்க முடியும. அதைத்தான் நமக்குக் காட்டுகிறார் அருணகிரிநாதர் - 'யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றி யாவருக்கும் தோன்றாது! சத்தியம்.

திருப்புகழ் நீங்கள் எவ்வளவு தூரம் பாடினாலும் அதன் உள்ளே இருக்கக்கூடிய கருத்துக்கள், பொருட்களை, உள்ளத்திலே உணர வேண்டுமேயானால், நம்மிடத்திலே இருக்கும் ஆணவத்தையெல்லாம் அழித்துவிடுவோமே யானால், அந்தத் திருப்புகழ் எல்லாம் நமக்கு உயர்ந்த தத்துவங்களை உணர்த்தக்கூடிய ஒரு சக்தியை நாம் பெற முடியும். ஆகவே, திருப்புகழ் பாடுபவர்களுக்கு கோபம் இருக்கக் கூடாது. ஆணவம் இருக்கக்கூடாது. இதை அருணகிரிநாதர் நமக்குச் சொன்னார். அதைத்தான் நீங்கள் அடிக்கடி பாடிக் கொண்டிருக் கிறீர்கள். 'கோப மற்று, மற்று மந்த மோக மற்று னைப்ப ணிந்து கூடு தற்கு முத்தி யென்று தருவாயே'. 'வெகுட்சிதனை யேது ரந்து களிப்பினுட னேந டந்து மிகுக்குமுனை யேவ ணங்க வரவேணும்'

எனப்பாடகூடிய அன்பர்களுக்கு வெகுட்சி இருக்கக்கூடாது. தாபம் இருக்கக்கூடாது. அப்போ இதே வினாவோடு பாடு என்று திருப்புகழில் நமக்கு சொல்லுகிறார். நீங்களெல்லாம் பாடிக் கொண்டு இருக்கிறீர்கள்.

'உலைவறவி ருப்பாக நீள்காவின் வாசமலர் வகைவகை யெடுத்தேதொ டாமாலி காபரண முனதடியி னிற்சூட வேநாடு மாதவர்க ளிருபாதம் உளமது தரித்து...' - முருகா! நான் உன்னைக்கூட பாட வேண்டாம். ஆனால், உன்னைப் பூஜித்துக் கொண்டிருக்கிறார் களே, உன் நாமத்தைப் பாடி பாடி, உன்னுடைய பாதார விந்தங்களிலே அன்றலர்ந்த புஷ்பங்களினாலே, மலர்கள் தொடுத்து, உன்னை பூஜிக் கிறார்களே, அவர்களுடைய பாதத்தை நான் பணிந்து - மாதவர்கள் இருபாதம் உளமது தரித்து வினாவோடு பாடி - நான் கேள்வி கேட்டுக் கொண்டே பாடவேணும் முருகா - ஏன் பாடறேன்? எதுக்காகப் பாடறேன் என்று. ஆதலால், நீங்கள் எல்லாம் கேள்வி கேட்டுக் கொண்டே பாடுங்கள். இது அருணகிரிநாதர் நமக்குச் சொல்லுகிறார். அதே மாதிரி, வழிபாடு வரும்போது, வினாவோடு தொழுது என்று ஒரு திருப்புகழில் சொல்லுகிறார். வழிபாடு நடத்துகிறோம். எதற்காக நடத்துகிறோம்? தொழுகை எதற்காகப் பண்ணுகிறோம்? அது ஒரு அழகான திருப்புகழ். அதில் சொல்லுவார் 'சிறியேனும் மால யன்பர னாரிமை யோர்முனி வோர் புரந்தர னாதிய ரேதொழ மாதவ வம்பெறு தாளிணை யேதின மறவாதே, வாழ்த ருஞ்சிவ போக' நந்நூல் நெறியே விரும்பி... சிவயோக நந்நூல் நெறியே விரும்பி - அதுதான் திருப்புகழ்.

சிவயோகம் என்பது - இப்போது பாடினோமே - ஐந்து பூதம் - சிவன் என்றால் அன்பு - அன்பைத்தவிர வேறொன்றுமில்லை - சிவன் என்றாலே அன்பு - சிவன் வேறு இல்லை, அன்பு வேறு இல்லை. அந்த அன்பு என்ற யோகத்திலே நாம் இருக்கும் பொழுது - அன்பைக் கொடுக்கும் சிவயோக நெறியை விரும்பி வினாவோடு தொழுது - எதற்காகத் தொழுகிறோம்? அந்தத் திருப்புகழ் பாக்களினாலே, பாடுபவர்கள் உள்ளம் எல்லாம் நெகிழவேண்டும் - கேட்பவர்கள் உள்ளம் நெகிழ வேண்டும். கேட்பவர்களுக்கு, அதிலே ஒரு ருசியை ஏற்படுத்தி, அவர்களும் மேலும் மேலும், இந்த திருப்புகழ்ப் பாக்களைப் பாட வேண்டும் என்று விரும்பி விரும்பி, மேலும் இதைக் கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்குமேயானால், நாம் செய்யக்கூடிய திருப்புகழ்த் தொண்டு, ஒரு பெரிய தொண்டு ஆகும். அது மட்டுமல்ல, அருணகிரிநாதர் சொல்கிறார் - முருகனிடம் கேட்கிறார் - நான் தினமும் உனக்குத் தொண்டு செய்து கொண்டே இருக்கணும், என்கிறார். தொண்டு செய்வது வெறும் திருப்புகழ்

கற்றுக்கொடுப்பது மட்டுமல்ல. திருப்புகழ் கற்று கொடுத்துவிடலாம். ராகத்தோடும், சந்தத்தோடும், எல்லோரும் பாடிவிடுவார்கள். அப்படி வெறும் சந்தத்திலே, தாளத்திலே, லயித்து, அது வெறும் விருதாவாகிவிடாமல், அந்தத் திருப்புகழ் மூலமாய் நாம் ஒரு தொண்டு செய்யவேண்டும். அது என்ன தொண்டு?

நாம் சொல்லிக் கொடுக்கும்பொழுது, அதைக்கேட்பவர், நான் பாடும்போது அதைக்கேட்பவர், அவர்களது உள்ளத்திலே ஒரு தெய்வ பக்தி ஏற்பட்டு, தெய்வநம்பிக்கை ஏற்பட்டு, அதன் மூலமாக தன்னு டைய பக்தியை வளர்த்துக்கொண்டு, ஆண்டவனிடத்திலே கடைசி யாக தஞ்சம், கடைசியாக இருப்பது ஆண்டவன் பாதாரவிந்தங்கள் தான் என்று சரணாகதி அடையும்படியான ஓர் உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படும்படியாக நாம் கற்றுக்கொடுத்தாலும், பாடினாலும், செய் வோமே ஆனால், அது ஒரு சிறந்த தொண்டு. அதைத்தான் நீங்கள் பாடிக்கொண்டு இருக்கிறீர்கள். 'துன்பங்கொண்டு, ... அறநொந்து அன்பும் பண்பும் மறந்து,... பெண் சஞ்சலமென்பதில் அணுகாதே, இன்பம் தந்தும்பர் தொழும் பத கஞ்சந்தந் தஞ்சமெனும்படி' - எல்லோருக்கும் அந்த உணர்ச்சி ஏற்பட வேண்டும். நான் செய்ய வில்லை. நான் பாடவில்லை. இதையும் அழகாக எடுத்துச் சொல் வார்கள் அருணகிரிநாதர்.

600 வருஷங்களுக்கு முன்னே, அருணகிரிநாதர் சொன்ன அந்த 'நான் யார், நான் யார்' என்ற உயரந்த உபதேசத்தை அருணகிரிநாதர் விளக்கி விளக்கிச் சொன்ன அந்த உபதேசத்தை, ரமணமகரிஷி- முருகன் அவதாரமாக இருக்கக்கூடியவர் – நம்மிடத்திலே சொன்னார். நீ கேட்டுக்கொள், 'நான் யார்?' என்று. அதைக் கேட்டுக் கொண்டே இருப்போமேயானால், நம் உள்ளததை அறியக்கூடிய ஓர் சக்தி கிடைக்கும். ஒரு உணர்ச்சி நமக்கு ஏற்படும். அந்தப் பாட்டுக்களை யெல்லாம் நீங்கள் பாடிக்கொண்டு இருக்கிறீர்கள். நான் பாடவில்லை, நான் ஓட வில்லை, நான் நடக்கவில்லை, நான் நடந்து விழவில்லை என்று அருணகிரிநாதர் சொல்வார். ஆகவே பூர்ண சரணாகதி ஆண்டவனிடத்தில் நாம், எப்போது நம்முடைய உள்ளத்தையெல்லாம் பறி கொடுத்து, எல்லாமே ஆண்டவா நீதான், உன் செயலன்றி வேறில்லை என்று நாம் இருப்போமேயானால், அந்த ஆண்டவன் நமக்காக நம்முடைய காரியங்களையெல்லாம் செய்ய காத்துக் கொண்டு இருக்கிறான். அதற்கு திருப்புகழ் ஒரு சான்று. அதை நீங்கள் அனுபவத்திலே பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். அந்த அனுபவத்தை எல்லோருக்கும் கிடைக்கும்படியான ஒரு உணர்ச்சி நமக்கு ஏற்பட வேண்டுமே யானால், நம் உள்ளத்தையெல்லாம் தூய்மையாக்கி,

உள்ளத்திலே இருக்கக்கூடிய அழுக்குகளையெல்லாம் அகற்றி, காம, க்ரோத, லோப, மத, மாத்சரியாதிகளை யெல்லாம் அகற்றி, மனதை பரிசுத்தமாக்கி, அந்த பரிசுத்தமான நிலையிலே, ஆண்டவனை நிறுத்தி, அந்த ஆண்டவனை எப்போதும் உள்ளத்திலே பார்க்கக்கூடிய ஒரு உணர்ச்சியை நாம் பெற்று, அதன் மூலமாக அதில் ஏற்படும் அனுபவத்தை நாம் பிறர்க்கு சொல்லுவோமேயானால், அந்த அனுபவத்திலே, பிறர்க்கு திருப்புகழ் கற்றுக்கொடுப்போமேயானால், அந்த திருப்புகழுக்கு ஒரு பலன் உண்டு. அதனாலே எல்லோருக்கும் ஒரு தெய்வ நம்பிக்கை ஏற்படும்.

திருப்புகழ் பாடும் ஒவ்வொருவரும் நம்மையும் தகுதியாக்கிக் கொள்ளவேண்டும். அருணகிரிநாதர் சொன்ன ஒவ்வொரு தத்துவத்தையும் நம் வாழ்க்கை நெறிமுறையில் எடுத்துக்கொண்டு, அதை நன்றாக அனுபவித்து, அந்த அனுபவத்தின் மூலமாக, பிறர்க்கும் திருப்புகழ் கற்றுக்கொடுப்போமேயானால், அது ஒரு உயர்ந்த நிலையிலே இருக்கக்கூடிய ஒரு திருப்புகழ் அவர்களுக்குக் கிடைக்கும். ஆண்டவன் நம்மையெல்லாம் பாடவைத்தான் என்றால் அது நம்முடைய சக்தியில் இல்லை. நாம் பாடவில்லை. உள்ளத்திலே, ஒவ்வொரு அன்பர்களுடைய உள்ளத்திலே புகுந்து, அந்த உள்ளத்திலே இருந்து அவர்களைப் பாட வைக்கிறான். அவர்கள் ஞானத்திற்குத் தகுந்தவாறு அவர்களைப் பாடவைக்கிறான். சிலருக்கு சங்கீத ஞானம் அழகாக இருக்கும். சிலருக்கு பாட்டே தெரியாமல் இருக்கும். அந்தப் பாட்டு தெரியாதவர்களையும் பாடவைக்கக்கூடிய ஒரு சக்தி இந்த திருப்புகழுக்கு இருக்கிறது என்றால், அது ஆண்டவனுடைய பெரும் கருணை. பெரிய அருள்.

ஆகவே, இவ்வளவு அழகாக, ஒரு சிறு விதை, பெரிய ஆல விருக்ஷமாக மாறி, எல்லோருக்கும் நிழல் கொடுக்கக்கூடிய ஒரு பெரிய திருப்புகழ், ஒரு யக்ஞம் மாதிரி உலகெல்லாம் பரவி இருக்கக்கூடிய ஸத்குருநாதன் ஸ்வாமிமலை முருகன். அவன் அருள் இன்றி ஒரு காரியமும் நடக்காது. அவனுடைய அருளாலேயே, நாம் எல்லாம் திருப்புகழ் பாடுகிறோம். நம்மை திருப்புகழ் பாட வைக்கிறான். அந்தத் திருப்புகழிலே, ராகத்தைக் கொடுக்கிறான். தாளத்தைக் கொடுக்கிறான். பாவத்தைக் கொடுக்கிறான். உணர்ச்சியைக் கொடுக்கிறான். எப்போதும் நம் உள்ளத்தை, ஆண்டவனிடம் பறிகொடுக்கும்போது, ஆண்டவன் நம்மை எல்லாம் செம்மை ஆக்கிவிடுகிறான். நம்முடைய செயல்கள் ஒவ்வொன்றிலும், உயர்ந்த கருத்துக்களை எல்லாம் அளித்துவிடுகிறான். அது மட்டமல்ல. அருணகிரிநாதன் நமக்குச் சொல்லுகிறார் - முருகனைத் தேடிக் கொண்டு எல்லா கோயில்

களுக்கும் போகவேண்டாம். எல்லா இடத்திற்கும் போக வேண்டாம். நம்முடைய நாக்கிலேயே இருக்கிறான். நம்முடைய சிந்தையிலேயே இருக்கிறான்.

''தாதார் மலர்ச்சுனைப் பழநிமலை சோலைமலை தனிப் பரங்குன்றேரகம் தணிகைச் செந்தூர் இடைக்கழி ஆவினன்குடி தடங் கடல் இலங்கை அதனிற் போதார் பொழிற்கதிர் காமத்தலத்தினை புகழும் அவரவர் நாவினிற் புந்தியில் அமர்ந்தவன் -'' அழகாகச் சொல்லுவார் அருணகிரிநாதர். திருப்புகழ் பாடும் அன்பர்களின் நாவிலே இருக்கிறான் முருகன். சிந்தையிலே இருக்கிறான் முருகன். ஆகவே, நாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்முடைய பேச்சுக்களெல்லாம் நல்வார்த்தைகளாக இருக்க வேண்டும். சிந்தை யிலே சிந்திப்பதெல்லாம், நல்ல சிந்தனைகளாக இருக்க வேண்டும். கெட்ட சிந்தனைகள், நம்முடைய சிந்தனையிலே தோன்றக் கூடாது. ஏனென்றால் முருகன் இருக்கக்கூடிய நிலை - அந்த இடத்திலே அப்பழுக்கு இருக்கக்கூடாது. நாக்கிலே சுத்தம் வேண்டும். சிந்தனையிலே நற்சிந்தை - நல்ல சிந்தனைகள் வேண்டும். அழகாகச் சொல்லுவார் - வேதாள ஞானஹீனன் விதரண நாதானில்லாத பாவி - விதரணையாகப் பேசத் தெரியவில்லையே முருகா, என்னுடைய நாக்கினிலே என்னவெல்லாமோ பேசிக்கொண்டு இருக்கிறேன். பொருள் இல்லாமல் பேசிண்டிருக்கேன். நான் பேசறதற்கு அர்த்தமில்லாமல், என்னவெல்லாமோ பேசிண்டிருக்கேன் - ''வீணாள் படாத போத தவமிலி பசுபாச வியாபார மூடன் யானும், உன் சீர்பாத தூளியாகி, நரகிடை விழாமலே நீ அருள்வாயே'' - அருணகிரிநாதர் திருப்புகழ். ஆண்டவனுடைய சீர்பாத தூளியாகிவிட வேண்டும்.

திருப்புகழ் பாடிப்பாடி, பாடிப்பாடி, உள்ளத்தையெல்லாம் மெலிதாய், கனத்தைக் குறைத்து, எளிதாய காற்றுப்போல், ஆக்கிக்கொண்டுவிடுமேயானால், லேசாக இருக்கக்கூடிய இந்த மனமானது, ஆண்டவனுடைய பாதத்திலே, பாததூளியாகச் சேர்ந்துவிடும். அதை நாமெல்லாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே திருப்புகழ் கற்றுக்கொள்ளக்கூடிய அன்பர்கள், அதை போதிக்கக்கூடிய அன்பர்கள், கற்றுக்கொடுக்கக்கூடிய அன்பர்கள், எல்லோரும் தம்மை தகுதியாக்கிக் கொள்ள வேண்டும் - ~~தக்கனம்~~ தகைமை பெற்று உன் பொற்சரணம் எப்போதும் நட்புடனே நினைந்திடவும் அருள்வாயே' - ~~தக்கனம்~~ தகைமை நமக்கு எப்போதும் வேண்டும். ஒரு தகுதி வேண்டும். திருப்புகழ் பாடுவதற்கு ஒரு தகுதி. அதைச் சொல்லிக் கொடுப்பதற்கு ஒரு தகுதி. அதைக் கற்றுக்கொள்வதற்கு ஒரு தகுதி.

இதுதான் அருணகிரிநாதர் நமக்கு சொல்லக்கூடிய அழகான ஒரு தத்துவ உபதேசங்கள். இதையெல்லாம் நாம் மனத்திலே கொண்டு, மேலும் மேலும் இந்த திருப்புகழைப் பாடி, திருப்புகழை நெறி முறையாலே நம்முடைய வாழ்க்கையெல்லாம் நிறுத்திக்கொண்டு, அதன் மூலமாக திருப்புகழைப் பரப்புவோமேயானால், அதைக் கற்றுக்கொள்பவர்களுக்கும் அந்த மனத்திலே ஒரு தெய்வ பக்தியை ஏற்படுத்தி, அவர்கள் மனத்திலே அந்த மனத்தை ஆண்டவனுடைய சரணாகதியைத் தவிர வேறொன்றுமில்லை என்ற உணர்ச்சியை ஏற்படுத்துவோமேயானால், அது உயர்ந்த திருப்புகழ்த் தொண்டாக இருக்கும். அதை எல்லாம் நாம் மேற்கொண்டு, மேற்கொண்டு, மேற்கொண்டு, மேற்கொண்டு, செய்யச் செய்ய, செந்திலாண்டவன் நமக்குத் துணையாக இருப்பான்.

அவனுடைய கருணையினாலே, மேலும், மேலும், எல்லோருககும் இந்த திருப்புகழ் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வாய்ப் பை அவன் ஏற்படுத்தி, அந்தக் கற்றுக்கொள்பவர்களுக்கெல்லாம் உள்ளத்திலே ஒரு தெய்வ நம்பிக்கை, ஒரு தெய்வபக்தியையும் ஏற் படுத்தி அவர்களுடைய உள்ளத்திலே எல்லாம், ஆண்டவனிடத்திலே சரணாகதியைத் தவிர வேறொன்றுமில்லை என்ற உணர்ச்சியை ஏற்படுத்த ஆண்டவன் அருள்புரிவானேயானால், அந்த அருளுக்கு நாமெல்லாம் பாத்திரராக வேண்டும்.

ஆகவே, இன்று நடந்த இந்த குருவந்தனம் என்பது, ஏதோ இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கக்கூடிய குருஜி A.S. ராகவனுக்குச் செய்த வந்தனமல்ல. நாமெல்லோரும் சேர்ந்து, நம்மைப் பாடவைத்த அந்த சத்குருநாதன் ஸ்வாமினாதனுக்காக வந்தனம் செய்தோம், திருப்புகழ் பாக்களினாலே. ஆகவே, அந்த ஸ்வாமினாதனை மேலும் மேலும் பாடி, அவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி, அதன் மூலமாக ஒரு பெரிய திருப்புகழ்த் தொண்டு நாம் செய்து வருவோமேயானால், அது திருப்புகழிற்கு ஒரு பெருமை. திருப்புகழ் தந்த அருணகிரி நாதருக்கு ஒரு பெருமை. அந்த அருணகிரிநாதரைப் பாடவைத்த குருநாதருக்கு நாம் செய்யக்கூடிய ஒரு வந்தனம்.

இப்போது 3 மணிநேரம், 4 மணிநேரம், நாம் முருகனுடைய திருப்புகழ் பாக்களைப் பாடிக் கொண்டிருந்தோம். ஆண்டவனை நினைத்துப் பாடினோம். ஆண்டவன் உள்ளே இருந்து நம்மைப் பாடவைத்தான். அந்தப் பாடவைத்த அந்த ஆண்டவனுக்கு, அருணகிரிநாதர் சின்ன பொய் சொன்னார் - 'போது கங்கையின் நீர்

சொரிந்து, இருபாத பங்கயமே வணங்கி, பூஜையும் சிலவே புரிந்திட அருள்வாயே! பூஜை வேண்டாமென்று சொல்லலை. பூஜையும் பண்ணணும். ஆண்டவனுக்கு அபிஷேகம் பண்ணணும். ஆண்டவனுக்கு அர்ச்சனையும் பண்ணணும். எல்லாம் பண்ணணும். எல்லாம் பண்ணிப் பண்ணி நம்மை ஒருநிலைப்படுத்திவிட்டோமேயானால், அந்தப் பூஜையெல்லாம் நம்மிடத்திலிருந்து ஓடிவிடும். உள்ளத்திலே இருக்கக்கூடிய அவனுக்கு, மானஸீகமான பூஜையை செய்யக்கூடிய ஒரு உணர்ச்சியை அந்தத் திருப்புகழ் ஏற்படுத்திவிடும். முருகன் ஏற்படுத்திவிடுவான்.

ஆகையினாலே, இந்த அநுபூதி நிலையிலே இருக்கக்கூடிய இந்த நம்மை, ஆண்டவனுக்குப் பூஜை செய்யவேண்டும். ஆராதனைகள் எல்லாம் செய்யவேண்டும். அது இப்பொழுது நடக்கும். அந்த பூஜை, ஆராதனைகள் எல்லாம் நடந்த பிற்பாடு, கடைசியில் 'ஓம் சாந்தி:' சொன்ன பிற்பாடு எல்லோரும் அமைதியாக இருங்கள். அந்த அமைதியாக இருந்து, அந்த அமைதியிலே ஆண்டவனுடைய உணர்ச்சியை எல்லாம் உள்ளத்திலே தேக்கி வைத்துக் கொள்வோம். அந்த உணர்ச்சிகளை அன்புப் பிழம்பாகத் திகழக்கூடிய, அந்த அன்பு முருகனை, உள்ளத்திலே தேக்கி தேக்கி வைத்துக் கொள்வோமேயானால், அந்த அன்பை, பிறருக்கும் கொடுக்கக்கூடிய ஒரு உயர்ந்த நிலை நமக்கு ஏற்படும். ஆகவே, முருகன் நம்மை எல்லாம் அருள்பாலிக்கட்டும். அவனுடைய அருள் நமக்கு மேன்மேலும் கிடைக்கட்டும். நம்மை எல்லாம் மேலும் மேலும் பாடவைத்து, அந்தப் பாட்டுக்கு உகந்ததாக ஒரு தகுதியை நமக்கு ஏற்படுத்தும். அந்தத் தகுதியினாலே, பிறருக்கும் அதைக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தட்டும் என்று சொல்லி, ஆண்டவனுடைய பெரும் அருளை விரும்பி இந்த பூஜையைத் தொடங்குகிறோம். வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா!

பின் குறிப்பு : பிறகு முருகப்பெருமானுக்கு மாத்ருகா புஷ்பமாலை சமர்ப்பித்து, அர்ச்சனை செய்து, தூபம், தீபம், நைவேத்யம் செய்யப்பட்டது. 'நாதவிந்துகலாதி நமோ நமோ' பாடி கற்பூர ஹாரத்தி காண்பிக்கப்பட்டது. மந்த்ர புஷ்பம், வேத மந்திரங்கள் முதலியவை ஓதப்பட்டது. 'ஏறுமயிலேறி' பாடி ஹாரத்தி காண்பிக்கப்பட்டது.

அதன் பின் குருஜி அவர்கள் கூட்டுப் பிரார்த்தனை நடத்தினார்கள். அவர் வழிநடத்தியதைத் தொடர்ந்து எல்லோரும் பிரார்த்தனை செய்தார்கள்.

குருஜி அவர்கள் சொல்லிய கூட்டுப்பிரார்த்தனை:-

‘‘தென்பரங்கிவளர் பெருமானே!
சீரலைவாய்வளர் பெருமானே!
பழனி வீற்றருளும் வேலா!
ஸ்வாமிமலைப் பெருமாளே!
திருத்தணியிலமர் பெருமாளே!
சோலைமலை மேவிநின்ற பெருமாளே!
அடியார்க்கு எளிய பெருமானே!
நினைத்தகாரியம் அனுகூலமே புரி பெருமானே!

அடியவர் இச்சை எவை எவை உற்றன அவை அவை தருவித்தருள் பெருமாளே! ஸகல துக்கமும் அற, ஸகல ஸத்குணமும் வர, தரணியில் புகழ் பெற, தகைமை பெற்று, உன் பொற்சரணம் எப்பொழுதும் நினைத்திடவே அருள்வாயே! முருகா! முருகா! மிக அருமைப்பட்டு உன்பாத தாமரை சரணமென்று பற்றும் பேதையேன்மிசை உன் விழியருள் வைத்து குன்றாத வாழ்வையும் தருவாயே! அழகிய சிக்கல் சிங்கார வேலவா! முருகா! முருகா! பற்றுதனை மேவி உன் இனியதாள் நினைப்பை எப்போதும் என் இதய வாரிஜத்திற்குள் உறவாகி, எமக்குள்ளே சிறக்க அருள்வாயே! முருகா! முருகா! ஷண்முகா! சீரான கோல கால நவமணி மாலாபி ஷேக பார வெகுவித தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும், சீராடு வீர மாது மருவிய ஈராறு தோளு நீளும் வரியளி சீராக மோது நீப பரிமள இருதாளும், ஆராத காதல் வேடர் மடமகள் ஜீமூத மூர்வ லாரி மடமகள் ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும், ஆராயு நீதி வேலு மயிலுமெய்ஞ் ஞானாபி ராம தாப வடிவமும் ஆபாத னேனு நாளு நினைவது பெறவேணும் முருகா! முருகா! மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று, தேடிவிளை யாடி யேயங்ங னேநின்று, வாழுமயில் வீர னேசெந்தில் வாழ்கின்ற பெருமாளே! எங்கள் பிழையே பொறுத்து, உன் இரு தாளிலுற்று, பெரு வாழ்வு பெற்று, அருள்வாயே! முருகா! முருகா! முருகா!

வெற்றிவேல் முருகனுக்கு	*அரோஹரா*
திருப்பரங்கிரி தீரனுக்கு	,,
செந்திலாண்டவனுக்கு	,,
ஸ்வாமிமலைக் குமரனுக்கு	,,
திருத்தணிகை தீரனுக்கு	,,

சோலைமலைக் கிழவனுக்கு ,,

குன்றுதோராடும் குமரனுக்கு ,,

பாலதண்டாயுதபாணிக்கு ,,

சிக்கல் சிங்காரவேலனுக்கு ,,

விராலிமலை தீரனுக்கு ,,

வேளூர் முருகனுக்கு ,,

வெற்றிவேல் முருகனுக்கு ,,

வெற்றிவேல் முருகனுக்கு ,,

வெற்றிவேல் முருகனுக்கு ,,

முருகா முருகா முருகா முருகா

முருகா முருகா முருகா முருகா

முருகா முருகா முருகா முருகா

முருகா முருகா முருகா முருகா

முருகா முருகா முருகா முருகா

முருகா முருகா முருகா முருகா

முருகா முருகா முருகா முருகா

முருகா முருகா முருகா முருகா

அஸதோ மா ஸத்கமய

தமஸோ மா ஜோதிர்கமய

ம்ருத்யோர் மா அம்ருதம்கமய

ஹரி: ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஓம் ஓம் ஓம்

பின் குறிப்பு : பின்பு, எல்லோரும் குருஜிக்கு நமஸ்காரம் செய்து பிரசாதம் பெற்றுக்கொண்டு சென்றனர்.

இத்துடன் இந்த பவழ விழா இனிதே நிறைவு பெற்றது.

சுபம்.

***

MEDIA HIGHLIGHTS

இந்தப் பவழ விழா நிகழ்ச்சி பற்றி 28.9.2003 தேதியிட்ட 'கல்கி' இதழில் கீழ்வருமாறு வெளியிட்டிருந்தார்கள்.

''இன்னொரு கூட்டம். இது கொஞ்சம் கண்கலங்க வைத்துவிட்டது. துக்கத்தினால் அல்ல; மகிழ்ச்சியில், நெகிழ்ச்சியில்.

'தலம் தோறும் தமிழ்க்கடவுள்' என்ற தலைப்பில் திருப்புகழ் மணம் கமழும் தொடரை கல்கியில் எழுதிய குருஜி ராகவனின் பவழ விழா, சென்னை, ராஜா அண்ணாமலைபுரம் சிருங்கேரி மண்டபத்தில் கூட்டமான கூட்டம். குழு குழுவாக திருப்புகழ் பாடி, தொடர் வழி பாடு நடத்தினர். ஒழுங்கு, கட்டுப்பாடு, ஆழ்ந்த பக்தி, ஆத்மார்த்தம் எல்லாமும் கலந்த ஓர் அருமையான சூழல். பெண்களின் எண்ணிக் கையே அதிகம். குருஜி ராகவன், திருமதி ராகவன் இருவரும் கூடவே பாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட ஓர் அனுபவத்தால், முருகன் பால் ஈர்க்கப்பட்டு, திருப்புகழ் வழிபாடுமன்றங்களை உலகம் முழுவதும் நிறுவிச் செயல்படுத்திவருகிறார் குருஜி ராகவன். உலகெங்கும் அன்பும் அவிரோதமும் ஏற்படுத்தும் இவ்வழிபாடு என்பது, உறுப்பினர்களின் ஆழ்ந்த நம்பிக்கை. அந்த நம்பிக்கை அன்றைய விழாவில் மெய்ப்பட்டதைக் காண முடிந்தது.''

***

SRUTI MAGAZINE - MAY 2004

'GURUJI' A.S. RAGHAVAN'S PAVAZHA VIZHA
PROPAGATOR OF TIRUPPUGAZH SONGS

'Guruji' A.S. Raghavan, propagator of Tiruppugazh turned seventy-five on September 15,2003. His disciples put together an impressive programme to celebrate this event. The function held in Chennai at the Sringeri Pravachana Mandapam in Mandaveli, consisted of traditional Vedic rituals followed by felicitations in the morning; and in the evening, Tiruppugazh Isai Vazhipaadu by way of Guru Vandanam presented by the congregation of disciples who had come from all over India and also from foreign countries.

Raghavan was honoured with the title Tiruppugazh Gana Ratnam by Sri Jayendra Saraswati Swamigal, Sankaracharya of the Kanchi Mutt. S.K. Ramanathan, who has been with 'Guruji' since the early days when Tiruppugazh classes were begun in a small way, addressing the gathering, said that the source of a mighty river like Ganges was small, but during its course many other rivers joined it and it swelled. So also Tiruppugazh had spread all over the country and abroad too, thanks to Guruji's outstanding leadership. He commented that the birthplace of the organisation called Tiruppugazh Anbargal was New Delhi, the political capital of the country, but it never dabbled in politics; it spread in Mumbai, the commercial capital, but was not interested in commercial activities; and in Chennai, the cultural capital, it promoted the resurgence of the worship of the Tamil God, Muruga.

He recalled the early days, and the milestones that the institution 'Tiruppugazh Anbargal' (a history of this organisation follows) had crossed- Raghavan's shashtiabdapoorti in the presence of the Sankaracharya of the Sringeri Mutt, his seventieth birthday celebrated for two days at AVM Rajeswari Kalyana Mandapam in Chennai, and the books and cassettes that have been released.

Kalyani Ramaswamy the first to start Tiruppugazh classes in Chennai said that there were now twenty four teachers and over nine hundred students in the city, more women than men. She

said the main aim was to spread love and 'avirodha' (non-enmity), and Tiruppugazh not just as songs to be sung, but as a way of life. Former president of India R. Venkataraman was present during the felicitation programme in the evening.

During the preceding year, on the day of the star Bharani (birth star of Raghavan), every month, Tiruppugazh bhajan sessions were held at various venues in Chennai by his students. The bhajans were carefully planned and coordinated by the teachers in such a way that all the 475 songs that have now been set to tune and taught by him were covered.

Raghavan has set all nine creations of Arunagirinathar to music, choosing ragas that are apt and suit the sahitya bhava. He has also used the complicated chhanda tala-s that Arunagiri has set the hymns to. These can be sung in congregation by hundreds of devotees, trained musicians and lay people alike.

TIRUPPUGAZH ANBARGAL

It was in 1958 that Tiruppugazh classes where first started in New Delhi, with just three students. Soon the strength increased to twenty-five, and then to more classes at various venues. The first bhajan was conducted in 1962 at the Vinayaka Mandir, New Delhi. with Raghavan visiting metropolitan cities such as Mumbai, Bangalore, Kolkata and Chennai the mass character of the mission was stabilized. Some of the earliest students who learnt directly from him carried on the good work by training numerous students at various centres to which they migrated.

Apart from classes and holding bhajans on Shashti, Krittikai and Visakham days of each month at a specified time and venue, awareness among the uninitiated was created through annual festivals such as Arunagirinathar Day, Skanda Shashti, Vaikasi Visakham and Padi Vizha, and Vaibhavams lasting a couple of days or more. The function to commemorate the sixth birth centenary of Arunagirinathar was inaugurated by the then vice president of India, B.D Jatti at Vigyan Bhavan. The Govt. of India also released a postage stamp in honour of the saint. Similar celebrations spread over three days were held during the silver jubilee of the movement in New Delhi in 1983, Karnataka region in

1994 and Mumbai region in 1997. The attendance in all the programmes was overwhelming.

The five-day event in Chennai in September 1998 jointly celebrated Raghavan's Seventieth birthday, the completion of forty years of the organization, and its twenty fifth year in Chennai. Though this is normally a private family function, in Raghavan's case it was organised on a grand scale on the first two days. On the following three days, apart from pooja-s in the morning there were speeches by eminent personalities, Tiruppugazh renderings by sister organizations, dance by children to Tiruppugazh songs , and a workshop on Aruna- girinathar's works. Teachers of Tiruppugazh from various cities were also felicitated.

The growth of the movement meant creation of an administrative structure to provide transparency and accountability and deal smoothly with the problems arising from expansion such as provision of books for students, necessary teachers to cope with the increasing admissions, and maintenance of the quality of renderings and the basic discipline enjoined on them as Anbargal singing in the mass prayers. The administrative framework came into being in 1988 when the organisation became a registered body. This envisaged an apex body with an executive committee with A.S. Raghavan as Permanent President during his lifetime, and with three regional centres at Mumbai, Bangalore and Chennai with a centralised structure of accounting as one entity. Recently a Chicago chapter was also opened to cater to the needs of Anbargal in the U.S.A.

Tiruppugazh Madaani containing the complete works of Arunagirinathar was published in 1991. This was released by Tirumuruga Kripananda Variar. It is notable that every copy was sold out on the very day of release.

The need was felt next for a book containing the songs that had been set to tune and taught by Raghavan (more than 430 at the time), with indications of raga and tala. A new book Tiruppugazh Isai Vazhipaadu was brought out in 1993, and it was released by R. Venkataraman, former President of India. A third edition of this book was released during the celebrations in 1998.

Abhirami Andaadi and Abhirami padigam by Abhirami Bhattar have also been set to music by Raghavan and now form a part of the repertoire of the Anbargal. Booklets containing the songs with raga and tala indications have been published.

In Chennai, from a small class begun in 1973 by Kalyani Ramaswamy, with the active encouragement of her husband, at her residence in Mylapore today the movement is a massive edifice with students numbering a thousand. The late D. Santhanam with his administrative talent helped run the movement under the banner Krithika Bhajan Mandali. This was merged with the parent body later. S.K. Ramanathan has made a significant contribution by conducting classes and bhajans. He has also served as Chairman of the Chennai region and has been responsible for ensuring the steady progress and consolidation of the movement. The Chennai region includes devotees from Kalpakkam, Tirunelveli, Kallidaikurichi and Coimbatore.

...In front of the Singaravelar sannidhi in the Kapaleeswarar temple Kritikai bhajan-s are being regularly held.

In 1996 a set of 37 cassettes was released. The recording in class room format with Raghavan teaching and model students repeating, will help to keep the purity of the original tune intact without distortion, especially when the music is being handed down orally from one generation to another.

The heads of the Kanchi and the Sringeri Mutt-s have always been supportive and continue to evince great interest in the growth of the organization . The title 'Tiruppugazh Tondar' was conferred upon Raghavan by the Sringeri Acharya during his Shashtiabdapoorti; the head of the Sivananda Asram in Hrishikesh, Swami Chidanandaji honoured him with the title 'Bhakta Ratna.' The Music Academy, Chennai invited Raghavan to conduct a lecture-demonstration of his work relating to Tiruppugazh; recitals in the morning session of its annual conference a number of times.

The Uttara Swami Malai in New Delhi has been the venue of many bhajans, Padi Vizha and Arunagirinathar Day celebrations without a break for many decades. Classes and bhajans on Visakham Day have also been regularly held at Sankara Kendra.

Annual Padi Vizhas are a regular feature at the Subramania Swamy temple at Chembur in Mumbai and the Kunrathur temple near Chennai. Pilgrimages under the leadership of Raghavan have also been conducted to many sacred temples including the Arupadai veedus in Tamilnadu, where bhajans held at the temples drew large crowds. At the global level, Raghavan visited the U.K twice and the U.S.A. thrice and conducted many classes and bhajans there. Following Arunagirinathar's emphasis on charity, annadaanam (free meals) is a special feature in all the centres.

GAYATHRI SUNDARESAN

'Guruji' Uvaacha

'Guruji' Raghavan spoke to **GAYATHRI SUNDARESAN** at length about his experiences and the growth of the movement called Tiruppugaz Anbargal. Some excerpts:

In Carnatic music, Tiruppugazh songs are quite different from the regular kriti-s and occupy a unique position. The chhanda tala-s are the special feature of Tiruppugazh, as the music world well knows. This chhanda also is derived from the Vedas — the Vedas were chanted in chhanda rhythms, and because of that they have come down to us through generations of oral transmission without being distorted. The composer, pours out his heart's feelings in his mother tongue and the chhanda-s give room for the meaningful splitting of words. The Tevarams of Tirugnana Sambandhar are the first works where we see the usage of chhandas. When the Tevaram songs were first found, we got only the pann-s in which they were to be sung, but not the tala-s. so keeping the original pann-s, they were set to different tala-s by different composers as they felt was apt, and even today this is what is being followed. The Oduvar-s sing it as an offering to the deity in temples. It was thrilling to listen to them singing the Tevaram in chorus. This was a tool to spread bhakthi. Dandapani Deşigar was a great musician who specially devoted his life to singing and popularing the Tevarams.

These Tiruppugazh paas were known far and wide even during the lifetime of Arunagirinathar, and were hailed as wonderful

Arunagiri himself despairs in one of his songs saying how can he repay God's kindness for having made him sing such great songs extolling noble ideals: and that he will never forget God's grace in choosing him to do so.

Following the path set by the great saints, I felt that if I used their songs to fill our hearts with spirituality, to take our lives on the straight path, it would be a great service. The Tamil speaking people should not forsake the great treasures that are found in their mother tongue; they should be brought to light, and if everyone learnt them, it would be a service to Tamil and the Tamil bhakti movement. And in this I also felt that it is not practical to take up everything; it would be better to focuss on one work and pour my entire effort into making it popular. It was with this goal that God handed down Tiruppugazh to me and emptied every other thought from my mind. Though I have learnt and sung other music, I drowned myself in Tiruppugazh forgetting myself in its rich beauty, relishing each and every utterance in it. The experience of peraanandam or paramaanandam (supreme bliss) while singing with complete understanding of the worlds in front of the Lord, cannot be obtained any where else. Not only the singer, the listeners also can experience this joy. This has been the motto and goal of Tiruppugaz Anbargal.

God chose me in the service of Tiruppugazh, and has been with me in rendering it fruitfully. It was thus that the job of writing about His temples in Kalki came about. ! was quite apprehensive when Kalki's Editor Seeta Ravi requested me to write a serial for the magazine titled Talantorum Tamizh Kadavul, describing the temples and their history. Not being a Tamil scholar or well-versed in the art of writing essays, I first refused. But the Editor was persistent, and then I accepted it as Senthil Andavan's own decree that I should write about Him. It seemed like a double assurance when the Editor told me that one Sentil Kumar had agreed to do the drawings for my article! How I wrote or what I wrote I don't know; it was just a flow that came from inside my heart. I was God Himself who directed me and my pen. That was the series of 35 articles in Kalki. The welcome it received from the public was immense. The bhakti that it contained, the spirituality, the beautiful

descriptions of Muruga and many more songs on Muruga that other saints had composed (Muruga gave me the opportunity to study many more texts for this) all drew a comprehensive picture of each sthala.

He has now made it possible to bring it out as a book; it would seem he did not want that this series should dissolve in public memory only as a magazine serial! Vanathi publishers took the trouble and the book was released during the Kanda Shashti Festival in November 2003.

I used to keep singing many Tamil songs. Among them I was particularly attracted to Abhirami Andaadi. As if it was deiva sankalpam, a friend heard me singing this at home and requested me to teach it. Out of the blue, a few ladies came and asked me to teach this to them. This happened when I was living in Delhi. After returning home from office at 1 pm on Saturdays, I would take a class at 2 pm. I do not know how I did it, as I sat down some raga would just come and five sloka-s would get set in that raga. I have never done it in a preplanned way. It just happened spontaneously and as the others repeated it, it got set. Thus the 100 songs were completed. It is so divine. It brings tears to the eyes. And this cannot happen in a kutcheri. Later Abhirami Padikam followed. Now many others have also set these to their tune and have given recordings. They have followed the basic format that we set it in.

My son and two daughters also sing Tiruppugaz. My second daughter conducts classes in U.S.A where she lives. All of us firmly believe that this service of mine has elevated us to this level, and it will continue to protect my children and their families.

***

PUBLISHER'S NOTE

Some of the speeches made have been transcribed from audio casettes. However, every effort has been taken to reproduce the text as precisely as possible. Errors, if any, are unintended.